# வேண்டாத குழந்தை

எஸ். கல்யாணி



இன்ப நிலயம்

A/501

# வேண்டாத குழந்தை

589 — A/351

352

எஸ். கல்யாணி

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை—4.

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1957.

பதிப்புரிமை : இன்ப நிலையத்தாருக்கு.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 691
நன்கொடை எண்: 691

விலை ரூ. 1—8—0

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை—14.

# பதிப்புரை

வளர்ந்து வரும் சுதந்தர பாரதத்தில்—பன்னெடுங்காலமாக சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள குற்றம் குறைகளைப் போக்க—அதைப் பற்றிப் பலரும் சிந்திக்கும்வண்ணம் கதைப் போக்கில் எடுத்துக் கூறுவது சாலச் சிறந்ததொன்ருகும்.

அந்த வழியில் இந்நூலில், அவமானச் சின்னமாகத் தான் பெற்ற குழந்தையை யாரும் அறியாமல் விட்டகன்ற கொடுமை நிறைந்த ஒரு தாயுள்ளத்தையும்—தாய்மைப் பேறையே அடையாத, தன் நலம் ஒன்றையே பெரிதெனக் கருதும் பேய் மனம் படைத்த பிறிதொரு பெண் உள்ளத்தையும்—இவற்றிற்கிடையே ஒரு பாவமும் அறியாமல் பலராலும் துன்புறுத்தப்படும் பேதைப் பெண் ஒருத்தியையும் இன்னும் பல்வேறு குணவேறுபாடுகளுடைய கதாபாத்திரங்களையும் சிருஷ்டித்து, "வேண்டாத குழந்தை"யை மிகத் திறம்பட ஆசிரியை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்நூலை வெளியிடும் வாய்ப்பை அளித்த ஆசிரியை திருமதி எஸ். கல்யாணி அவர்களுக்கு எங்கள் நன்றி.

15—2—'57 **சோம. சுவாமிநாதன்**

இன்ப நிலையம்.

இந் நூலாசிரியை எழுதிய

## சமையல் கலையும், ஆரோக்ய உணவும்

என்னும் நூலில், விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சி யாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள ஆரோக்ய உணவு வகைகளையும் அவைகளைச் சிறந்த முறையில் ருசியான வகையில் தயாரிக்கும் வழிகளையும் விபரமாக எழுதியுள்ளார். பத்திரிகைகளும், நூலைப் படித்தவர்களும் ஒரு முகமாகப் பாராட்டியுள்ளார்கள். இந் நூலின் இரண்டாம் பதிப்பு வெளி வந்துள்ளது.

விலை ரூ. 3—8—0

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

# வேண்டாத குழந்தை

## 1

'ஷண்பகா! ஷண்பகா!' என்று கூவிய பாட்டி பொன்னம்மாளைச் சிறிதும் லட்சியம் செய்யாமல், ஷண்பகம் வாயிற்புரம் தான் போட்டுக்கொண்டிருந்த கோலத்திலேயே ஆழ்ந்திருந்தாள். கீழ் வானத்திலே உதயமாகி மெல்ல மெல்ல வான வீதியிலே மிதக்க ஆரம்பித்த கதிரவனின் பொற்கதிர்கள் அவளது சிவந்த கன்னத்திலும், முகத்திலும் பட்டு இந்திர ஜாலம் செய்து கொண்டிருந்தன. வீட்டைச் சுற்றிலும் பரவி நின்ற காலை இளம் காற்றின் இனிமையில் அவளது உள்ளம் என்றும் அடையாத இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது. இயற்கையும், இளமையும் ஒன்றுடன் ஒன்று இணையப்போகும் அந்த நேரத்தில், பாட்டியின் கூக்குரல் அவளுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

பாட்டி பொன்னம்மாள் தான் எழுபத்தைந்து வயதுக் கிழவி என்பதையும் மறந்து அன்று மிகச் சுறு சுறுப்புடன் விளங்கினதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அன்று கிருத்திகை நாள். ஒரு மைல் தூரத்தே

தெரியும் குன்றில் குடிகொண்டிருக்கும் பழனி ஆண்ட வனைத் தரிசிப்பதன் பொருட்டு பக்தர்கள் கூடி வீடு வார்கள். பாட்டியின் சின்னஞ் சிறு ஓட்டு வீடுதான் அந்த வட்டாரத்திலேயே மிகப் பிரசித்தமாக விளங்கி வந்த சாப்பாடு வீடுதி, தங்கும் இடம் இவை எல்லாம். எனவே பாட்டியின் பரபரப்புக்குக் கேட்க வேண்டுமா ?

ஆண்டவன் அருகே இருந்த நீலநிற மலைமீது கோயில் கொண்ட காரணத்தால் அந்தக் கிராமத்திற்கே ஆண்டவன்குன்று என்ற பெயர் வந்து விட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். .கிராமம் என்று பெரியதாகச் சொல்லிக் கொள்ளக்கூடிய அளவுக்கு அங்கே எதுவும் இல்லை. பாட்டி பொன்னம்மாளைப் பற்றியோ அல்லது அவளது குடும்ப வரலாறு பற்றியோ அதிகம் தெரிந்த வர்களும் அங்கே இல்லை. ஊருக்கு ஒதுப்புறமான அந்த ஓட்டுவில்லை வீட்டில், சுமார் இருபது வருடங் களுக்கு முன் பால் வியாபாரம் செய்ய பொன்னம்மாள் தம்பதிகள் வந்து சேர்ந்தனர் என்பதைத் தவிர, அந்த ஊர் வாசிகளுக்கு வேறு எதுவுமே தெரியாது. கிழவ னின் மறைவுக்குப் பிறகு தன் பேத்தி ஷண்பகத்துடன், வசித்த பொன்னம்மாளுக்குப் பால் வியாபாரம் நசித்து விட்டது. கிழவி தன் வீட்டை விட்டு அதிகம் வெளியே போவதோ, பிறரோடு உறவாடுவதோ கிடையாது. அவளுக்குப் புது வழி ஒன்றைப் பிழைக்கும் வழியாக ஏற்படுத்திக் கொடுத்தவர் ஆண்டவன்குன்றின் தெய்வமே அல்லாது வேறு எவருமில்லை.

ஆண்டவன்குன்றின் தெய்வம் பிரபல மடைந்தது போல, அந்த ஊர் பிரபலமடையாமல் இருந்தது. ரயில்வே ஸ்டேஷன் எட்டு மைல் தூரத்தில் இருந்தது. பஸ் பிரயாணத்தின் அனுபவத்தைப் பெற சுமார் பத்து மைல் தூரமாவது மாட்டு வண்டியில் பிரயாணம் செய்தாக வேண்டும். கால்களையோ, கட்டை மாட்டு வண்டியையோ அல்லது காரையோ நம்பிப் பிழைப் பவர்கள்தான் ஆண்டவன்குன்றின் அரும் தரிசனம்

பெற முடியும். அப்படி வரும் ஒரு சில பக்தர்கள், தங்கள் குழந்தை குட்டிகள் சகிதம் வந்து தங்குமிடம் கிடைக்காது தவிக்கும் சமயம், பொன்னம்மாளின் ஓட்டு வில்லை வீடுதான் அபயமளித்து வந்தது. பொன்னம் மாளும் குன்றின் ஆண்டவரை நன்றி ததும்பும் மனத் தால் தினமும் வணங்கி வந்தாள் என்றால் மிகையில்லை.

"ஏண்டி பெண்ணே! நான் கரடியா கத்திக்கிட் டிருக்கேன். நீ பேசாம இருக்கியே. காதென்ன அடச்சிப் போயிடுச்சா. மணி ஆறடிக்கப் போவுது. சட்டுபுட்டுனு சமையல் வேலையைக் கவனி. தெரிஞ்சுதா. நான் குளிச்சு முழுகிட்டு வந்துடறேன்" என்று அதி காரமாக ஏவியபடி, பின்கட்டிலிருந்த கிணற்றடிக்குச் சென்றாள் பொன்னம்மாள்.

பாட்டி சொன்ன வேலையைக் கவனியாவிட்டால் விடமாட்டாள் என்பதை ஷண்பகம் நன்றாக அறிவா ளாகையால் பேசாது அவள் பணித்த ஏவலை மேற் கொண்டாள். அதிகாலையிலேயே ஸ்நானம் செய்து சரியாக உலர்த்தப்படாத கூந்தலில் தங்கிவிட்ட ஈரத் தினால் அவளுக்கு இலேசாகத் தலை வலித்ததுபோல் தோன்றியது. சற்று முன் இயற்கையழகில் ஈடுபட் டிருந்த இன்பத்தை பாட்டி குரூரமாகக் கலைத்து விட்ட தால் ஏற்பட்ட கசப்பும் சேரவே, அவள் உள்ளத்தில் சோர்வும், ஏமாற்றமும் நிழலிட்டன. காய்ந்த சுள்ளிகளை ஒடித்து ஒடித்து அடுப்புக்குள் போட்டுக் கொண் டிருந்த அவள் மனம் தனது வாழ்வைப் பற்றியே ஏங்கிக் கொண்டிருந்தது.

அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து பாட்டி பொன்னம்மாளின் ஆதரவைத் தவிர வேறு வேண்டிய உறவினர் என்ற முறையில் எவர் முகத்தையும் கண்ட தில்லை. "அந்தக் கடன்காரி என் கடைசிக் காலத்திலே இப்படி ஒரு பாரத்தை வைத்துவிட்டுப் போனாளே" என்று பாட்டி புலம்புவதிலிருந்து, தான் பாட்டியின் பெண் வயிற்றுப் பேத்தி என்ற உறவும் அவளுக்குத்

தெரிய வந்தது. அன்னையின் அரவணைப்பையோ, தந்தையின் அன்பையோ அறியாத அனாதைப் பெண் அவள். பொன்னம்மாளின் கடைசிக் காலத்தில் ஒரு பாரமாக அவள் வாழ்ந்தாள். கூடுமானவரை, தன்னால் இயன்ற அளவு உழைத்து, பாட்டியின் பாரத்தைக் குறைத்துவிட விரும்பினாள் ஷண்பகம். கடினமான வேலைகளைச் செய்து முரட்டுத்தனம் பாய்ந்த அவளது கரங்களும், உழைப்பினால் வலிவு பெற்ற அவளது தேகக் கட்டுமே அதற்கு உதாரணங்கள். பள்ளிக்கூடம் என்ற இடத்தில் ஷண்பகம் மழைக்குக்கூடத் தவறியும் ஒதுங்கியதில்லை. ஆனால் அதற்காக அவளது அறிவு மழுங்கிப் போய் விடவில்லை. இயற்கையிலே நிறைந்த புத்திசாலித்தனத்தினால் ஏதோ ஓரளவுக்கு உலக விஷயங்களைப் பற்றி அறிந்திருந்தாள்.

பாட்டிக்கு அவள் ஒரு ஊன்றுகோல் போல் இந்த வயது காலத்தில் விளங்கினாள். வயது வந்துவிட்ட பெண் என்பதாலும், கவர்ச்சிகரமான தோற்றம் கொண்டவள் என்பதாலும், பாட்டி அவளைக் கண்ணிமைபோல் கட்டுப்பாட்டுடன் காத்து வந்தாள். உலகம் என்பதனைப் பரந்த நோக்கோடு பார்க்கும் அளவுக்கு ஷண்பகத்தின் உள்ளம் விசாலமடையவில்லை. தான் உண்டு, தன் வீட்டு வேலைகள் உண்டு என்ற ரீதியில் கிணற்றுத் தவளையாகவே வாழ்ந்து வந்தாள். எனினும், அவளது கூர்மையான அறிவின் சிந்தனைச் சுழலிலே அவளையுமறியாது, 'பாட்டி திடீரென இறந்து விட்டால்.........?' என்ற கேள்வி எழும். அப்போது அவள் அடையும் சஞ்சலம் சொல்லி முடியாது.

அடுப்பில் காய்ந்த தோசைக் கல்லின்மீது, மாவை வார்த்துக் கொண்டிருந்தாளே தவிர, வழக்கம்போல் ஷண்பகம் கவலை தோய்ந்த சிந்தனையுடன் விளங்கினாள். 'இப்படியே சமைப்பது, சாப்பிடுவது என்றே அவளது வாழ்க்கை கழிந்துவிடுமோ? அவளுக்கு என்று ஒருவன் வருவான் என்று பாட்டி சொல்வாளே, அவன் என்று

வருவானே ? ஒருவேளை அதற்குள் பாட்டி...' அவள் உடல் பயத்தால் சிலிர்த்துவிட்டது. நடுக் கடலில் மூழ்கித் தத்தளிப்பவனுக்கு ஒரு சிறு மரக்கட்டை போன்று, பாட்டி பொன்னம்மாள் ஒருத்திதான் அவளுக்கு ஆதரவு. கணவன் என்று ஒருவன் ஆதரவு தரும் வரை, பாட்டி நன்முக வாழவேண்டுமே என்று பழனி ஆண்டவனைத்தான் வேண்ட வேண்டும். ஒருவேளை அந்த ஆண்டவனே தன் மணாளனையும் கொண்டு வந்து விட்டால்...........

வாயிற்பக்கம் ஏதோ கார் வந்து நிற்கும் ஓசையும், அதன் கதவைப் படீரென்று சாத்தும் சப்தமும், வாயிற் பக்கம் கதவை 'டக்', 'டக்'கென தொடர்ந்து தட்டும் ஒலியும், அவளது சிந்தனையைத் தடை செய்தன.

'இங்கேதானே தங்குவதற்கு இடம் கிடைக்கும்னு சொன்னுங்க' என்று கேட்டபடி அதிகாரமாக உள்ளே வந்த அந்தப் பெண்மணியை ஏற இறங்கப் பார்த்தாள் ஷண்பகம். நல்ல வாளிப்பான உடற்கட்டும், உயரமும், தோற்றமும் கொண்ட அந்த அம்மாளுக்கு சுமார் நாற்பத்தைந்து வயது இருக்கலாம். கழுத்திலும், கையிலும் வாரி அணிந்திருந்த தங்க நகைகளின் அளவையும், காதிலே விழுந்து விடுமோ என்று கவிழ்ந்து ஊசலாடிய வைர ஓலையையும் இடையிலே அணிந்திருந்த பட்டுச்சேலையின் மதிப்பையும் கண்ட ஷண்பகம் கணக்கிலடங்கா வியப்புடன் அவளையே பார்த்தாள். அவளது பிறவியில் இத்தனை பெரிய பணம் பெருத்த சீமாட்டியைப் பார்த்ததே இல்லையே!

'என்ன அப்படியே பிரமை பிடிச்சது மாதிரி நின்னுட்டே. நான் கேட்டது காதிலே விழுந்ததா ?' என்று அதட்டின அந்த ஸ்த்ரீயை நோக்கி, 'ஆமாம். உட்காருங்க. பாட்டியைக் கூப்பிடறேன்.' என்று உளறினாள். அடுப்பிலே காய்ந்த தோசையின் தீய்ந்த மணத்தை லட்சியம் செய்யாது, வருகிறவர்களுக்கென்று பாட்டி வைத்திருந்த பட்டுப் பாயை எடுத்துப் போட்டு

உபசரித்தாள். நெற்றியிலே பட்டையாக அணிந்திருந்த திருநீற்றைப் பார்த்த பின்தான் அவள் வாழ்வை இழந்த ஸ்த்ரீ என ஷண்பகம் ஊகித்துக் கொண்டாள்.

இதற்குள் பின்னாலேயே தொடர்ந்து வந்த இரண்டு மனிதர்களில் ஒருவர், 'என்ன அக்கா? செருப்புப் போட்டுக்கொண்டு உள்ளே வரலாமா?' என்று மெதுவாகக் கேட்டார். தமக்கை ஷண்பகத்தை அர்த்தத்துடன் பார்த்தாள். அதுவரை ஆடவருடன் பேசியறியாத அந்தப் பெண் வாய்குழற "வெளியிலேயே..." என்று தயங்கினாள். இதைச் சொல்லி முடிப்பதற்குள் ஹிருதயம் பட, படவென்று அடித்துக்கொண்டது.

"சரி அண்ணு! காரிலேயே செருப்புகளைப் போட்டுவிடலாம்" என்று கூறிய குரலின் சொந்தக்காரர் யார் என அறிய ஆவல் அடித்துக்கொண்டது. சட்டென ஒரு முறை இருவரையும் பார்த்துவிட்டு, மீண்டும் அடுப்பங்கரைக்குள் சென்று வேலையில் ஈடுபட்டாள். பயத்தினால் ஒருவரையும் சரியாகப் பார்க்க முடியவில்லை அவளுக்கு.

பாட்டிக்கு என்றைக்குமே காது கூர்மை. அதுவும் காசு பண விஷயத்தில் அவளுக்குக் கருத்து அதிகம். வெளியே கார் வந்து நின்றதும், யாரோ வந்திருப்பதும் அவளது கட்செவிக்கு வேகமாக எட்டிவிட்டது. தன் குளியலை அரைகுறையாகவே முடித்துக்கொண்டு ஓடோடியும் வந்து சேர்ந்தாள். இல்லாவிட்டால் வரும்படி போய்விடுமே!

அவசரமாக மாற்றுச் சேலை உடுத்திக்கொண்டு பாய்ந்துவந்த பொன்னம்மாளுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. பாயின்மேல் உட்கார்ந்திருந்த அந்த ஸ்த்ரீயைக் கண்டதும் அவளது சுருங்கிய முகத்தில் ஆச்சரியத்தால் மலர்ந்த புன்னகை தோன்றிற்று. 'நீ...நீங்க...அன்னமா மக நாகரத்னமில்லே...' என்று கேட்டாள் தயக்கத்துடன்.

வந்த பெண்மணிக்கும் திகைப்பு ஏற்பட்டது. முன் பின் தெரியாத இடத்தில் ஒரு வயதான கிழவி தன்னை அடையாளம் கண்டுகொண்டது எப்படி என்ற கேள்வி யுடன் அவள் விழித்தாள். பொன்னம்மாள் அதற்கு மேல் வந்தவளைத் திகைப்பில் ஆழ்த்த விரும்பாதவளாய், "நான்தான் உங்க வழுதாவூர் அத்தைக்கு நாத்தனுர். நீ அப்ப ரொம்ப சின்னப் புள்ளே. உங்கம்மாவும் நானும் ரொம்ப சிநேகிதம். அவளுக்கு நல்லாத் தெரியும். உனக்கு தெரிஞ்சிருக்க நியாயமில்லே." என்று உரத்துக் கூவியபடி அவள் அருகில் உரிமையுடன் உட்கார்ந்துகொண்டாள்.

'ஓஹோ! இப்பத்தானே தெரியுது. உங்க முகத்தை எங்கேயோ பார்த்தாப்போலே இருக்கு தேன்னு தோணிச்சு. நீங்கதானே என் பெரிய தம்பி காதுகுத்துக் கல்யாணத்துக்கு வந்திருந்தது?" என்று கேட்டாள் நாகரத்தினம்.

"தேவலேயே! நல்லா நினைவு வச்சிட்டிருக்கியே. அது போகட்டும்" என்று ஏதோ கேட்கவந்த பொன்னம் மாள் நாகரத்தினத்தின் வெள்ளை ரவிக்கையையும், கோடாலி முடிச்சையும் நெற்றியில் விபூதி பட்டை யையும் கண்டுவிட்டு, "இப்படியா உன்னைப்பார்க்கணும்? உன் அம்மா எப்படியடி சகிச்சா?" என்று திடீரென புலம்பத் தொடங்கினுள். நாகரத்தினத்திற்குப் பழைய நினைவுகள் கிளம்பிவிட்டன. துக்கம் தொண்டை யடைக்க, "என்ன செய்வது? என் தலைவிதி. பணம், காசு இருந்தும்,..." என்று கூடவே கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

"அம்மா எப்படி இருக்கா" என்று கேட்ட பாட்டி யிடம் "நல்ல வேளை அவ இந்தக் கண்ணராவியைப் பாக்காமே கண்ணை மூடிட்டா" என்று விரக்தியாகப் பதிலளித்தாள் நாகரத்தினம்.

"அவளும் போயிட்டாளா?" என்று மறுபடியும் பிரலாபிக்கத் தொடங்கிய கிழவியை, "பாட்டி! நீங்க

எப்படி இங்கே வந்தீங்க?" என்று கேட்டு சம்பாஷணையை வேறு திக்கில் மாற்றினுள் நாகரத்தினம்.

சமையலறையின் கதவிடுக்கின் வழியே கூடத்தில் நடக்கும் சம்பாஷணைகளையும், காட்சியையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த ஷண்பகம், வந்த மனிதர்களை நன்ருகக் கணக்கிட்டாள். இரு ஆடவர்களில் ஒருவர் சற்று வயதானவராகக் காணப்பட்டார். காது ஓரங்களிலும், தலையில் அங்கும் இங்குமாகத் தெரிந்து கொண்டிருந்த நரையும், முகத் தோற்றமும் அவர் நாற்பது வயதைத் தாண்டியிருக்கலாம் எனப் பறை சாற்றிக்கொண்டிருந்தன. மற்றவன் வாலிபன். மிஞ்சி மிஞ்சிக் கூறப்போனுல் இருபத்தி எட்டுதான் சொல்ல முடியும். சுருண்ட தலையும், சிவந்த முகமும், அடக்கமே உருவாக அமைந்த சுந்தர புருஷனுகக் காணப்பட்டான். பெரியவர் கால்சட்டை, கைச்சட்டையெல்லாம் போட்டுக் கொண்டிருந்ததும், சின்னவன் வேட்டி கட்டிச் சட்டை போட்டிருப்பதும் ஷண்பகத்திற்கு வேடிக்கையாயிருந்தது. இருவரும் முகச் சாயலில் ஏறக்குறைய ஒத்திருந்தாலும் மனோபாவத்தில் எத்தனை வேறுபாடு? ஏனோ அவளுக்கு அந்த வாலிபனைப் பிடித்தது! ஒரு வேளை முருகப் பெருமான் அனுப்பி வைத்த மணாளன் அவனுகவே இருந்துவிட்டால்......வரப்போகும் துன்பத்தை அறியாத அந்தப் பேதைப் பெண் வைத்த கண் வாங்காமல் அந்த இளைஞனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

## 2

நாகரத்தினம் பெரிய இடத்திலேயே பிறந்து பெரிய மனிதனுக்கே வாழ்க்கைப் பட்டவளாகையால், அவளது பேச்சும் கூடப் பெருமை கலந்துதான் தொனிக்கும். தன்னுல்தான் எல்லாம் நடக்கிறது, தன்னுல் ஆகாத காரியம் எதுவும் இல்லை என்ற மனப்

பான்மை கொண்டவள். பிறர் எவராவது, 'உன்னைப் போல உண்டா?' என்று கூறிவிட்டால் அகமும் முகமும் குளிர்ந்து கேட்டதையெல்லாம் அள்ளிக் கொடுக்கும் சுபாவம் படைத்தவள். தான் ஒன்று நினைத்தால் அது நடந்துதான் தீரவேண்டும் என்ற பிடிவாத குணம் அவளது இரத்தத்திலேயே ஊறி விட்டது.

கணவன் விட்டுச் சென்ற பெரும் சொத்துக்குத் தத்தாகத் தன் பெரிய தம்பியை மகனாக ஆக்கிக் கொண்டாள். தாய் தந்தையர், அவளது மற்றொரு தம்பியையும் விட்டுவிட்டுக் கண்களை மூடிவிடவே, அவனை வளர்க்கும் பொறுப்பும் அவளையே சார்ந்தது. தான் உருவாக்கிவிட்ட கலைச் சிற்பத்தின் அழகைக் கண்டு கர்வமடையும் கலைஞனைப் போன்று, தன்னால் முன்னணிக்கு வந்து நல்ல நிலையிலிருக்கும், தன் தம்பிகளைப் பற்றி அவளுக்கு என்றுமே கர்வமுண்டு. தான் இல்லாவிட்டால் அவர்கள் கதி என்ன ஆகியிருக்கும் என்ற விஷயத்தைக் காது மூக்குகளுடன் விபரமாகப் பொன்னம்மாளிடம் சொல்லிக்கொண்டிருந்தாள் நாக ரத்தினம்.

பொன்னம்மாளுக்குப் பிறரை எப்படிச் சந்தோஷப் படுத்துவது என்ற கலையில் அபாரத் தேர்ச்சி உண்டு. இல்லையேல் அவளுக்கு வருவாய் ஏது? வாயைப் பிளந்த படி, நாகரத்தினத்தின் செல்வப் பெருக்கைப்பற்றி பிரமிப்பவள்போல் அபிநயித்தாள். "என்ன தாராள மனசு. நாகரத்தினம்னு நீதான் ரத்தினம். சும்மாவா பேரை வச்சாங்க." என்றெல்லாம் முகஸ்துதி செய் தாள். வழக்கமில்லாத வழக்கமாக தன் பேத்தியையே அவர்களுக்கு விருந்து படைக்கச் செய்தாள்.

காலையில் மலைமீது ஏறிகொண்ட குமரனைத் தரிசித்த பின் மறுபடியும் அவர்கள் போஜனம் செய்ய அங்கே வரும்படி வற்புறுத்தினாள் பாட்டி. பொன்னம் மாளின் வற்புறுத்தலுக்காக மட்டுமல்லாது, வேறொரு

காரணத்திற்காகவும் அங்கு திரும்பிவர உத்தேசித்த நாகரத்தினம் பாட்டியின் கோரிக்கைக்கு இணங்கினுள்.

மத்தியான போஜனமும் ஷண்பகத்தின் கையாலேயே பரிமாறப்பட்டது. 'எல்லாம் நம்ப சொந்தக் காரங்கதான். பயப்படாமே கேட்டு விசாரிச்சுப் படை' என்று பேத்தியிடம் கூறிய பாட்டி, நாகரத்தினம் பக்கம் திரும்பி, 'வயசு வந்த பொண்ணுன்னு பிறத்தியார் எதிரிலேயே வர விடுகிறதில்லே. இன்னைக்குத்தான் நம்ப மனுஷங்களாச்சேன்னு பரவாயில்லேன்னேன். அதுதான் பயப்படுது. வெட்கம் வேறே' என்று தான் கண்டிப்புடன் வளர்க்கும் விதத்தைப் பெருமையாகக் கூறிக் கொண்டாள்.

பாட்டி தன்னைப் பற்றிப் பிறர் எதிரில் விமர்சனம் செய்தது ஷண்பகத்திற்குப் பிடிக்கவில்லை. ஒருவாறு சமாளித்துக் கொண்டு குனிந்த தலை நிமிராது இலையையே பார்த்து உணவு வகைகளைப் படைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

பொன்னம்மாளின் வரலாற்றைக் கேட்ட பின்பு ஷண்பகத்தை நன்கு உற்று நோக்கத் தொடங்கினுள் நாகரத்தினம். வட்ட வடிவமான முகம் சிவக்க, நாணம் கலந்த சிரிப்புடன் இலையில் தயங்கித் தயங்கி அவள் பரிமாறிய காட்சியை நாகரத்தினம் வெகுவாக ரசித்தாள். நாட்டுப்புறத்தின் செழுமையான சூழ்நிலையிலே வளர்ந்த உடல்கட்டும், கள்ளம் கபடமறியாத முகமும், மிரண்டு மிரண்டு பார்க்கும் அழகிய விழிகளும் நாகரத்தினத்தின் மனதில் ஏற்பட்ட ஓர் எண்ணத்தைப் பலப்படுத்திக் கொண்டே வந்தன.

அவ்வளவு பெரிய மனுஷி தன்னிடம் அன்பாகப் பேசுவதும், அடிக்கடி வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருப்பதும், ஷண்பகத்தை என்னவோ செய்தன!

'அந்தப் பெண்மணி மட்டும் என்ன? அந்த ஆடவர்கள் மட்டும்.........அதிலும் அந்தப் பெரியவர்

அவள்மேல் வைத்த விழிகளை எடுக்கவே இல்லை. கொஞ்சம்கூட மரியாதை இல்லாத மனிதர் என்று ஷண்பகம் அருவருப்படைந்தாள். அந்த வாலிபனோ எதிலுமே கவனம் இல்லாதவனைப் போல் அடக்கமாக இருந்தது அவளுக்கு மெத்தப் பிடித்திருந்தது.

மத்தியான போஜனத்திற்குப் பின்பும் வந்த விருந்தாளிகள் அசையவில்லை. அன்றைக்கு என்று வேறு எந்த பக்தர்களும் குடும்ப சகிதம் பாட்டியின் தங்கும் விடுதிக்கு வரக் காணோம். ஏதோ தூரத்து உறவு என்ற முறையில் பாட்டி சொந்தம் கொண்டாடி விட்டாளே தவிர, சாப்பாட்டுக்கும், தங்கியதற்கும் பணம் எப்படி அவர்களிடமிருந்து வாங்குவது என்ற பிரச்சினையிலே அவள் மனம் தவித்துக் கொண்டிருந்தது. உறவு வேறு, பணம் வேறு என்று நினைப்பவள் பாட்டி. அவ்வளவு பெரிய பணக்காரியிடம் எப்படிப் பணம் கேட்பது என்ற திகைப்பினால், பாட்டியின் முகத்தில் அசட்டுக் களை வழிந்தோடிக் கொண்டிருந்தது.

பாட்டியின் தர்மசங்கடத்தை அறியாத நாக ரத்தினம் தனது சொந்தப் பிரச்சினையொன்றில் மூழ்கிக் கிடந்தாள். வெகு நாட்களாக அவள் மனதில் ஏற்பட்ட ஒரு எண்ணம், இன்று ஆண்டவனைத் தரிசிக்க வந்த இடத்தில் கைகூடும்படியான ஒரு வாய்ப்புக் கிடைத்திருந்தது. கிழவியின் கஷ்டமான நிலையைச் சாக்காக வைத்துக்கொண்டு முயன்றால் நிச்சயமாக வெற்றி கிட்டும். ஆனால் எதிர்பாராதவிதமாக கிழவி மறுத்து விட்டாலோ என்ற சந்தேகம் அவளைச் சற்றுத் தயங்கச் செய்தது. கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த பாயில் எல்லோரும் அமர்ந்து பேசிக் கொண்டே இருந்தனர். “ அக்கா ! நேரமாய் விட்டதே ! புறப்பட வேண்டாமா ?” என்று பெரிய தம்பி வற்புறுத்தத் தொடங்கினர். ‘ அண்ணாவுக்கு வேலை இருக்கிறது. எனக்கும சீக்கிரம் திரும்பணும். நீங்கள்பாட்டில் உட்கார்ந்து கொண்டே இருந்தால் வீடு போவதற்குள்

இருட்டி விடும்' என்று தொடர்ந்து சிறிய தம்பியும் எச்சரிக்கவே, தன் தைரியத்தை ஒருங்கு திரட்டிக் கொண்டு ஒரு தீர்மானத்துக்கு வந்தாள் நாகரத்தினம். இந்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் பிறகு வாய்ப்பதரிது என்று பயந்தாள். "நான் சொல்றேன்னு வித்தியாசமா நினைச்சிக்காதிங்க" என்று திடீரென ஆரம்பித்த நாகரத்தினத்தை விளங்காத வியப்புடன் பார்த்தாள் கிழவி.

"உங்களுக்கோ வயசாயிட்டது. நகை நட்டை வித்து, நல்ல நிலைமையெல்லாம் போய் இப்படி கஷ்டப்படுறீங்க. போதாது என்று ஒரு வயசுப் பொண்ணையும் உங்க தலையிலே கட்டிட்டுப் போயிட்டா உங்க மக. நெருப்புன்னு வாய் வெந்துடுமா என்ன? உங்களுக்கே ஏதாச்சும் நேந்துது. அப்புறம் அந்தப் பொண் கதி என்ன?" என்று பீடிகை போட்டாள் நாகரத்தினம்.

"நீ என்ன சொல்றே?" என்று கேட்ட பாட்டி அவளையே அசையாது பார்த்தாள். தன்னைப் பற்றியே பேச்சு நிகழ்கிறது என்றறிந்த ஷண்பகம், தன் காதுகளைக் கூர்மையாகத் தீட்டிக் கொண்டாள். ஆடவர் இருவரும் ஆவலும், ஆச்சரியமும் கலந்த பார்வையுடன் தமக்கையைப் பார்த்தனர்.

மற்றவர்கள் கவனிப்பதையும் பொருட்படுத்தாது, "உங்க பேத்தியை என் பெரிய தம்பிக்குக் கட்டிப் போடலாமான்னு யோசனை பண்ணினேன். அவளை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. என்ன சொல்றீங்க" என்றாள் கம்பீரமாக நாகரத்தினம்.

எதிர்பாராத இந்தத் திடீர்த் தாக்குதலால் யாவரும் துணுக்குற்றனர். 'யாருக்கு? பெரிய தம்பிக்கா?' என்று கேட்ட கிழவி பதில் சொல்ல முடியாது தத்தளித்தாள்.

"அக்கா! என்ன அதெல்லாம்?" என்று அதட்டியபடி பேச ஆரம்பித்த சிறியவனை, "நீ சும்மா

இருடா. உனக்கு ஒன்றும் தெரியாது" என்று அடக்கி விட்டு, பொன்னம்மாளிடம், "உங்க காலம் வரைக்கும் சாப்பாட்டுக்கும், துணிக்கும் கஷ்டமில்லாமல் ரொக்கமா பணம் கொடுத்திடறேன். எங்கிட்ட என்னிக்குமே ஒளிவு மறைவு கிடையாது. என் பெரிய தம்பிக்கு வயசுகொஞ்சம் ஆயிட்டுதேன்னு பார்க்காதீங்க, உலகத்திலே எத்தனையோ பேர் இரண்டாம் தாரம் கட்டறதில்லையா? யோசிக்காதீங்க. அந்தப் பொண்ணும் சுகப்படும். நீங்களும் காலமெல்லாம் சுகமாக வாழலாம்." என்று அடுக்கிக் கொண்டே போனுள் நாகரத்தினம்.

"அதுக்கில்லே நாகரத்தினம். அதுக்கு படிப்பா, பாட்டா ஒன்றும் தெரியாது. பட்டிக்காட்டுக் குட்டி. உன் அந்தஸ்துக்கு சரிப்படுமான்னு யோசிக்கிறேன்" என்று தயங்கினுள் பாட்டி.

"அக்கா! நீங்க சுயநினைவோடத்தான் பேசுறீங்களா" என்ருன் சிறிய தம்பி. அவனது துடுக்கான கேள்வியினுல் வெகுண்ட நாகரத்தினம், "பாஸ்கரா! இந்த விஷயத்திலே நீ தலையிட்டுக்கிட்டிருக்காதே இதெல்லாம் பெரியவங்க விஷயம். நீ போய் காரை எடு." என்று கடுமையாக உத்திரவிட்டாள்.

சீறி எழுந்த நாகம் பெட்டிக்குள்ளே அடங்கி விட்டதைப் போலப் பாஸ்கரன் தமக்கையின் கோபத்தைக் கண்டு அடங்கிவிட்டான். "சிவஞானம்! நீயும் போ! சாமி கோயில் பிரசாதமெல்லாம் சரியா எடுத்து வச்சிருக்குதான்னு பார்!" என்று மௌனமாக உட்கார்ந்திருந்த பெரிய தம்பியையும் வெளியே அனுப்பினுள். பிறகு அதே அதிகாரத் தொனியில் 'என் தம்பிக்கு இதைவிடப் பெரிய இடத்துப் பெண்கள் போட்டி போட்டுக்கிட்டு வருவாங்க. இருந்தாலும் நம்ப உறவுக்குள்ளே இருந்தா நல்லதுன்னு பார்க்கிறேன். உங்க கஷ்டமும் தீரும். எங்க வீட்டுக்கு வந்துட்டா நாங்க எல்லாம் கத்து வச்சுடுவோம். அந்தக்

கவலையும் உங்களுக்கு வேண்டாம். நிம்மதியா உங்க காலத்தைத் தள்ளிக்கிட்டிருக்கலாம்" என்று மூச்சு விடாமல் பேசினுள்.

அவ்வளவு பெரியபணக்காரி, பேதை ஷண்பகத்தை ஏன் தங்கள் வீட்டு மருமகளாக்கிக் கொள்ளத் துடிக்கிருள் என்ற மர்மத்தை ஆராய்ந்து மனதை அலட்டிக் கொள்ளப் பொன்னம்மாள் விரும்பவில்லை. குன்றின் ஆண்டவன் கருணையால், வராத அதிர்ஷ்டம் அவளைத் தேடி வந்திருக்கிறது. வறுமையால் உழன்று ஓடாகி இருந்த அவள் மனக்கண்முன் பானை, பானையாக நாணயக் குவியல்கள் காட்சியளித்தன. புதையல் கிடைத்துவிட்ட ஏழையைப் போன்று, அவளது பஞ்சடைந்த கண்கள் பேராசையால் விரிந்தன! தன் பொக்கை வாயை அகலத் திறந்து, மகிழ்ச்சிப் புன்னகை ஒன்றைச் செய்து தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

"உனக்குத் தெரியாத விஷயமா நாகரத்தினம்" என்று ஒரேவார்த்தையில் காரியத்தை முடித்துக்கொண்டாள் கிழவி. அதுவரை எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த ஷண்பகத்திற்கு அதற்கு மேல் எதுவும் கேட்க முடியவில்லை. ஒரே சமயத்தில் ஆயிரம் பேரிடிகள் அவளது மனக் கோட்டைமீது விழுந்தன. பொடிப் பொடியாகச் சிதறிவிட்ட அந்த இன்பநினைவை எண்ணி எண்ணி அவள் அழுதாள். அவளுக்கு ஆண்டவன் அளித்த மணுளன் இப்படிப்பட்டவரா? அப்படியானுல் மரணமே அதைக் காட்டிலும் மேலல்லவா? அதைக் கேட்கும்போதே தன் உயிர் போய்விடாதா என்று குமுறினுள். துக்கம், கோபம் என்று விளங்காத பல உணர்ச்சிகளால் அலைக்கப்பட்ட அவளது மனம் முடிவில் ஏமாற்றத்தின் மிகுதியால் கண்ணீர் வடித்தது.

வாயிற் கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே உற்சாகத்துடன் வந்த பொன்னம்மாளைக் கண்டதும், அடக்கி வைத்திருந்த துக்கம் கரைபுரண்டு ஓடியது ஷண்பகத்திற்கு. "பாட்டி! நான் மாட்டேன். நான்

அந்த வயசானவரைக் கட்டிக்கமாட்டேன்" என்று கூவினுள் பேத்தி.

"என்ன சொன்னே ?" என்று உறுத்துப் பார்த்த கிழவி "தானு வற சீதேவியை காலாலே தள்ளறியே நீ. நீ இருக்கிற இருப்புக்கு பெரிய மகராசா வருவான்னு நினைப்போ. சரித்தான். சும்மா பேச்சுப் பேசாதே" என்று பல்லைக் கடித்தாள்.

"என்னை கொன்னு போட்டுடு பாட்டி. தயவு பண்ணி உன் காலிலே விழறேன். என்னை இஷ்டமில்லாத எடத்துலே கட்டிக் குடுக்காதே. பாட்டி" என்று கதறின ஷண்பகத்தைப் பொன்னம்மாள் லட்சியம் செய்யவில்லை.

அழுதழுது கண்களெல்லாம் வீங்கிச் சிவந்து விட்டன. மாலை இருளும் அவளது மன இருளைப்போலக் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவ ஆரம்பித்தது. ஷண்பகம் வீட்டு நிலைப் படிமீது உட்கார்ந்து ஆகாயத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். வான வீதியிலே தங்கள், தங்கள் கூடுகளை நோக்கிப் பறக்கும் பட்சிக் கூட்டங்களைப் போல, அவளுக்கும் இரண்டு சிறகுகள் இருந்திருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்! இந்தக் கட்டாயக் கல்யாணத்திலிருந்து சிறகடித்துப் பறந்திருப்பாளே. ஆனுல் பறந்து எங்கே போவாள்? அவளைத்தான் சிறைக் கைதியைப் போல் உலகமே தெரியாமல் பாட்டி வளர்த்து இருக்கிருளே. சுபாவத்திலேயே கோழை உள்ளம் படைத்தவளாகையால் தற்கொலையை நினைக்கவே அவள் மனம் கூசியது.

அவளது தாயார் மட்டும் இருந்தால் இப்படி அவளைத் துடி துடிக்க விட்டிருப்பாளா? இந்த மண் மீது அவள் பிறந்ததிலிருந்து பாட்டி பொன்னம்மாளின் அதட்டலைத் தவிர, 'அம்மா' என்று அருமையுடன் அழைக்கும் அதிர்ஷ்டமற்றவள். உலகம் என்பது அந்தச் சிறு ஓட்டு வில்லை வீட்டிற்குள் தான் என்று இதுகாறும்

எண்ணி வந்தவள். இளமையின் துடிப்பு நிறைந்த பருவத்தில் அவள் துன்பத்தினால் துடிக்கும்படி நேர்ந்து விட்டதே! யாரிடம் சொல்லி தன் துக்கத்தை ஆற்றிக் கொள்வாள்? பல பல எண்ணிய ஷண்பகம் குழப்பமும், திகிலும் அதிகரித்தவளாய், 'அம்மா!' என்று விம்மினாள்.

"ஏண்டி பொண்ணே! பொழுது போனது தெரியாமே, வாசப்படியிலே உட்கார்ந்துகிட்டு அழுது கிட்டா இருக்கே. இந்தப் பிடிவாதம், அழுகை இதெல்லாம் என்கிட்ட பலிக்காது. மரியாதையா உள்ளே வந்து சோத்தை தின்னுட்டுப் படு" என்று மிரட்டினாள் பின்னால் வந்து நின்ற பொன்னம்மாள்.

கலவரத்தினால் விழிக்கும் குழந்தை போல, ஷண்பகம் மிரள மிரள விழித்தாள். பாட்டியை என்றுமே அவள் எதிர்த்துப் பேசியதில்லை. எதிர்க்கத் தைரியமுமில்லை. அன்று காலையில் அவள் எழுந்தபோது இருந்த கொஞ்சநஞ்ச மனமகிழ்ச்சியும் தற்போது எங்கே ஓடி ஒளிந்து கொண்டது? பகல் நேரத்திற்குள் அவளது வாழ்விலேயே எத்தகைய அதிசய மாறுதல்! எத்தகைய மாறுதல் தனக்கு வேண்டுமென்று குன்றின் ஆண்டவனைத் தினமும் மனமுருகப் பிரார்த்தித்தாளோ அதே மாறுதலை இன்று அவள் மனதார வெறுத்தாள். தனக்கு வரப் போகும் கணவனை நினைத்த மாத்திரத்திலேயே அவளது உள்ளம் எட்டிக்காயாகக் கசந்தது. "பாட்டி! தயவு பண்ணி என்னைக் கட்டாயப்படுத்தாதே. நான் இப்படியே இருந்துடறேன், பாட்டி. எங்கம்மா உயிரோட இருந்திருந்தா இதற்குச் சம்மதிச்சிருப்பாளா? சொல்லு பாட்டி" என்று துக்கத்துடன் அரற்றினாள்.

"ஆமாம்! உங்கம்மா உசிரோட இருந்திருந்தா நீ ரொம்ப நல்லாத்தான் இருந்திருப்பே. போதுமே நீ பிறந்த வரிசை" என்று எகத்தாளமாகக் கூறிய கிழவி, கூடத்தில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த லாந்தர் பக்கத்தில் வந்து அமர்ந்தாள்.

வாயிற்கதவைத் தாளிட்டுக் கொண்டு, அவளருகில் வந்த ஷண்பகம், "நான் பிறந்ததுக்கு என்ன ஆயிடிச்சாம்! உனக்கு மட்டும் என் அம்மா மகளில்லையா?" என்று சிறிது கோபத்துடன் வினவினுள்.

"என் வயித்திலே பிறந்த மக பாரு" என்று எரிச்சலுடன் பகர்ந்த கிழவியைத் திடுக்கிட்டு ஷண்பகம் நோக்கினுள். கிழவி மேலே என்ன சொல்லப் போகிருளோ என்ற ஆவலில் அவள் நெஞ்சு அடித்துக் கொண்டது.

"ஏதோ எடுத்து வளர்த்து காலா காலத்திலே கல்யாணமும் செஞ்சுட்டா, நமக்கு உதவியா இருக்குமேன்னு உன்னைக் காப்பாத்தினேன். நல்லது செய்வோம்னு பார்த்தா வளத்த கடா மார்பிலே பாஞ்ச மாதிரி எங்கிட்டேயே எதிர்த்துப் பேசறியே? உனக்காக என் சொந்த ஊரை விட்டு மனுஷங்களை விட்டு, நானும் அவரும் இங்கே வந்து கஷ்டப்பட்டோமே. அதெல்லாம் உனக்கென்ன தெரியும்?" என்று படபடப்புடன் கிழவி கூறினுள்.

"அப்படின்னு நான் உன் சொந்தப் பேத்தியில்லையா?" என்று கேட்ட ஷண்பகம் பரிதாபமாக அவளைப் பார்த்தாள். ஒரு கணம் பழைய சிந்தனையில் ஈடுபட்ட கிழவி ஷண்பகத்தை வெறித்துப் பார்த்தாள்.

"இருபது வருஷத்துக்கு முந்தி என் மக பிரசவத்திலே செத்துப் போன சமயம். உன்னை எங்க வீட்டுத் தோட்டத்திலே யாரோ போட்டுட்டுப் போனுங்க. போனுப்போவுது பாவம்னு சொல்லி, என் மக பெத்த பொண்ணுன்னு பொய் சொல்லி சமாளிச்சுட்டேன். அன்னைக்கே புறப்பட்டு அவரும் நானும் இங்கே வந்ததுதான்" என்று மெதுவாகக் கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தாள் பாட்டி.

அதுவரை வாழ்வில் அவள் அனுபவித்திராத பேரதிர்ச்சியை ஷண்பகம் அனுபவித்தாள். அவளுடைய



மதுரை காமராசர் பல்கலை

ஆள் என உறவு கொண்டாடப் பாட்டியாவது இருந்தாளே என்ற ஆறுதல் கொஞ்சம் இருந்தது. அந்த ஆறுதலும் இன்று நசுக்கப்பட்டு விட்டது. ஊர் பெயர் தெரியாத, தாய் தகப்பன் தெரியாத அநாதைப் பெண் அவள் என்ற கசப்பான உண்மை அவளது உள்ளத்தையும் உடலையும் பச்சைப் புண்ணுக்கி விட்டதைப் போலத் தோன்றியது. தகப்பனைவிடக் குழந்தைக்காக சர்வ தியாகம் செய்யும் தாயே, தன்னை வேண்டாம் என உதறி விட்டாள் என்ற செய்தியைக் கேட்டதும், அவளது புண்பட்ட ஹிருதயத்தில் ஊடுருவிச் சென்ற துயரத்தின் வேதனை பன்மடங்காகப் பெருகிற்று. பத்து மாதம் சுமந்து பெற்ற தன் அன்புச் செல்வத்தை, அப்படி விட்டு விட்டுச் செல்லும்படியான சந்தர்ப்பம் அம்மாவுக்கு ஏன் வந்தது? ஒருவேளை அவளது பிறப்பினுல், அவளை ஈன்றவளது மானத்திற்குக் கேடு வர இருந்ததா? பெற்றதாய் அன்பையே புறக்கணிக்கும் வேண்டாத குழந்தையாக, அவ்மானச் சின்னமாக அவள் இருக்கிருளா? அப்படியானுல் பாட்டி பொன்னம்மாள் ஒரு தெய்வம்? அவள் பொருட்டு எத்தகைய கஷ்டங்களை யெல்லாம் சகித்திருக்கிருள்! பெற்ற தாய் செய்யாத கடமையைப் பாட்டியல்லவா செய்துவிட்டாள்?

லாந்தர் விளக்கொளியில் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்த ஷண்பகத்தைப் பார்த்த பாட்டி, "என்னடி! பெரிய கோட்டையைப் பிடிக்கிற மாதிரி யோசனை? உன் பிறப்பு வரலாறு தெரிஞ்சா எவன் உன்னைக் கட்டிப்பான்னு கேக்கறேன். எனக்கென்ன. உன் நல்லதுக்குத்தான் நான் சொல்றேன். என்ன பதிலையே காணேம்?" என்று எரிச்சலுடன் கேட்டாள்.

"சரி! பாட்டி!" என்று சிரமத்துடன் கூறிய ஷண்பகம் வெகு நேரம் அப்படியே பிரமை பிடித்த வளைப் போல உட்கார்ந்திருந்தாள். அதிர்ச்சி மேல் அதிர்ச்சியடைந்திருந்த அவள் மனம் உணர்ச்சிப்

போராட்டத்தில் சிக்குண்டு தவித்தது. சுற்றிலும் கவிந்து நின்ற இருளைப் போல அவளைச் சூழ்ந்து நின்ற துன்ப இருள் என்றைக்கு அகலுமோ?

## 3

சென்னைக்கு சுமார் இருபது மைல் தூரத்திலே பிரபலமாக விளங்கியது குமரப்பா நகர். அந்த நகரை நிர்மாணித்தவரும், குமரப்பா செங்கல் ஒர்க்ஸின் ஸ்தாபகருமான குமாரசாமியின் பூத உடல் இன்று மறைந்து விட்டது. ஆயினும் அவரது உழைப்புத் திறமைக்கும், உயர்ந்த இலட்சியங்களுக்கும் அழியாத புகழுடன் அவர் பெயர் நிலைபெற்று விட்டது. தனக்கு மிஞ்சித் தானமும் தர்மமும் என்ற கொள்கை உடையவராதலால், தன் உறவினர்களுக்கே பெரும்பாலும் தம்முடைய ஸ்தாபனத்தில், வேலை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

புதிய முறையில் வரிசை வரிசையாக, சகல சௌகரியங்களுடனும்அமைக்கப்பட்ட நாற்பது அல்லது ஐம்பது வீடுகளுக்கு மேல் குமரப்பா நகரில் இருந்தன. இந்த ஐம்பது வீட்டின் ஜீவநாடியாக 'குமரப்பா செங்கல் ஸ்தாபனம்' விளங்கி வந்தது. ஒவ்வொரு வீட்டிலும் குமாரசாமியின் புகைப்படம் பெரிய உருவில் மாட்டப் பெற்றிருப்பதிலிருந்து மற்றவர்களுக்கு அவரிடம் இருந்த பக்தியும், அன்பும் தெரியவரும்.

பொட்டலாக விளங்கிய அந்தப் பிரதேசத்தை சிறந்த பொற்குவியலைத் தரும் பூமியாக மாற்றித் தந்த குமாரசாமியின் அருமை மனைவிதான் நாகரத்தினம். பொருட் செல்வத்தை வாரி வழங்கிய ஆண்டவன் அவர்களுக்கு மக்கள் செல்வத்தை மட்டும் அளிக்காத குறை குமாரசாமிக்கு நிரம்ப உண்டு. ஆனல் அதற்காக

அவர் குறைப்பட்டுக்கொண்டே தம் காலத்தைக் கழிக்க விரும்பவில்லை. தங்களுக்குக் குழந்தைப் பேறே இல்லை என்ற உண்மையைத் தெளிவாகத் தெரிந்துகொண்ட பின், மைத்துனன் சிவஞானத்தையே தம் மகனாக ஸ்வீகாரம் செய்துகொண்டார். ஸ்வீகாரம் செய்யாமலே பாஸ்கரனையும் தமது மகனாக வளர்த்தார். இத்தகைய பரந்த உள்ளம் படைத்ததாலோ என்னவோ, அவரது ஹிருதயம் அந்தப் பரந்த மனப்பான்மையின் பரப்பைத் தாளாது ஒரு நாள் திடீரென வெடித்து விட்டது.

கணவனது மரணத்திற்குப் பின் நாகரத்தினம்தான் செங்கல் வேலையைக் கண்காணித்து வந்தாள். சிவஞானம் ஸ்தாபனத்தைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டும்கூட, வெகு நாட்கள் அவளும் ஸ்தாபனத்தின் வேலைகளில் தலையிட்டுக் கொண்டிருந்தாள். அவ்வாறு அவள் தலையிடுவதற்கும் மற்றொரு முக்கிய காரணம் இருந்தது. லக்ஷக்கணக்காகத் தன் கணவன் அரும்பாடுபட்டுச் சேகரித்த பணத்தை, ஒரு நொடியில் சிவஞானம் விரயமாக்கிவிடுவான் என்ற பயம் உள்ளூர அவளுக்கிருந்தது. வெளியில் சிவஞானத்தின் போக்கும் ஒரு தினுஸாக இருப்பதாகப் பராபரியாகக் கேள்விப் பட்டதிலிருந்து அவளது பயம் அதிகரித்தது. ஒரு கால்கட்டை சரியானபடி போட்டால் நிலைமை சீர்திருந்தி விடும் என்று எண்ணினவளாய், அவளது தெய்வமாகிய குன்றின் ஆண்டவனை வேண்டிக்கொண்டாள். அவளது வேண்டுகோளுக்கு ஆண்டவன் இத்தனை சீக்கிரத்தில் செவி சாய்ப்பான் என அவள் கனவிலும் கருதவில்லை. ஆண்டவனைத் தரிசிக்கச் சென்ற இடத்தில் அவள் தேடிக்கொண்டிருந்த மருந்து காலிலேயே சிக்கி விட்டதே! சூட்டோடு சூடாகவே காரியங்களை நடத்தி விடவேண்டுமென்று அவசரமாக முகூர்த்தத் தேதியை வைத்து ஆண்டவன் சந்நிதியிலேயே கல்யாணத்தையும் நடத்திவிட்டாள்.

குமரப்பா நகரை நோக்கிப் பறந்து சென்ற காரின் பின் ஸீட்டில் முகம் சிவக்க அழுதவண்ணம் ஷண்பகம் அமர்ந்திருந்தாள். இருபது வருடங்களாகத் தன்னை அடக்கி ஒடுக்கி வளர்த்தவளானாலும் பாட்டி பொன்னம்மாளின் ஆதரவு இல்லாவிட்டால் இந்த உலகில் அவள் எவ்வாறு உயிரோடு இருந்திருக்க முடியும்? பாட்டிகூட ஷண்பகத்தைப் பிரிய நேரும் சமயம் 'ஓ' வெனக் கதறிவிட்டாள். இது நாள் வரை அவள் அனுபவிக்காத தனிமையையும், வளர்த்து விட்ட பாசத்திற்காக ஓரளவு ஷண்பகத்தின் பிரிவையும் எண்ணி அழுதிருக்கலாம். நடுக்கடலில் விழுந்தவனுக்கு ஓர் ஆதரவாக விளங்கிய மரத்துண்டும் கை நழுவி விட்டது போல், ஷண்பகம் பாட்டியின் பிரிவை எண்ணி உண்மையில் மனம் புழுங்கினாள். இனி அவள் புகப்போகும் புது வீடு, அதன் மனிதர்கள், சுற்றுப்புறமுள்ள சூழ்நிலை இவற்றிற்கேற்ப அவள் அனுசரித்து நடக்க வேண்டியவள்.

கல்யாணம் என்று ஆண்டவன் சாட்சியாக கழுத்திலே ஐந்தே விநாடியில் கட்டப்பட்ட மஞ்சள் கயிற்றினால் அவள் சிவஞானத்தின் உரிமை மனைவியாகி விட்டாள். மிக அவசரமாகத் தேதி வைத்ததால் உறவினர்கள் எவரும் திருமணத்திற்கு வரமுடியவில்லை என்று நாகரத்தினம் கூறியதைப் பாட்டி அப்படியே நம்பிவிட்டாலும், ஷண்பகத்தால் நம்ப முடியவில்லை. பாஸ்கரன் கூட கல்யாணத்திற்கு வராத காரணம் எதுவாக இருக்கும்? ஒருவேளை அவனும் அவள்மேல் ஆசைப்பட்டு........சே! என்ன கெட்ட எண்ணம்! அவனைப்பற்றி நினைக்க இனிமேல் அவள் யார்? அவள் தற்போது சிவஞானத்தின் மனைவி. பலர் முன்னிலையில் தாலி கட்டப் பெறாவிட்டாலும், பழனி ஆண்டவன் சாட்சியாக அவரது மனைவியானவள். பாட்டியும், நாகரத்தினமும், கோயில் ஆட்களுமே அவளுக்கு சாட்சிகள். இவ்வாறு பலவும் எண்ணி மனதைத் திடப்படுத்திக்கொண்ட ஷண்பகம், கார் சட்டென நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

அவளது அருகில் அமர்ந்திருந்த நாகரத்தினம், "அட அசட்டுப் பெண்ணே! பாட்டி செளக்கியமாத் தான் இருப்பா. அவளை நினைச்சு நினைச்சு ஏன் இப்படி அழுதுகிட்டே இருக்கே. கண்ணைத் துடைச்சிக்கோ. நம்ப வீடு வந்துடுச்சு. அழுதுக்கிட்டே இறங்கக் கூடாது" என்று அன்புடன் கடிந்து கொண்டாள்.

காரை ஓட்டிவந்த சிவஞானம் இறங்கி வந்து பின் ஸீட்டின் கதவைத் திறந்தார். மழைக்காலமாதலால், மாலை ஆறுமணிக்குள்ளேயே நன்ருக இருட்டி விட்டது. பயமும், வெட்கமும் பின்னலிட, கண்களைக் கூசும்படி விளக்கொளி வீசிய அந்தப் பங்களாவிற்குள் காலை வைத்தாள் ஷண்பகம்.

வழுக்கிவிடுமோ என்று பயப்படும்படியான சலவைக் கற்கள் பதித்த தரைகள், நீலக் குழல் விளக்கின் ஒளி பட்டுக் கண்ணுடிபோல் பளிச்சிட்டன. முன் ஹாலைத் தயக்கத்துடன் கடந்து அடுத்த பெரிய ஹாலுக்குள் நுழைந்ததும் அவள் அச்சத்தினுல் நின்று விட்டாள்.

சின்னஞ் சிறு ஓட்டுவில்லை வீட்டையே பெரிய பங்களாவாக மதித்துவந்த அவளுக்கு அந்தப் பங்களாவை என்னவென்றே நினைக்கத் தோன்றவில்லை. நடு ஹாலில் போடப்பட்டிருந்த, மிருதுவான சோபாக்களின் அழகைச் சொல்வதா, தரையிலே விரிக்கப்பட்டிருந்த இரத்தினக் கம்பளத்தின் அழகைச் சொல்வதா, ஆங்காங்கே அழகுக்காக கிண்ணங்களில் வைக்கப்பட்டிருக்கும் வண்ணப் புஷ்பக் கொத்துகளின் அலங்கரிப்பைச் சொல்வதா, ஜன்னல்களையும், கதவுகளையும் மறைத்தவண்ணம் காற்றிலே அசைந்தாடும் நீலத்திரைகளின் அமைப்பை வர்ணிப்பதா, என்னவென்று அவள் கூறுவாள்? ஷண்பகத்தின் கண்கள் சுழன்று சுழன்று வந்தன.

மேலும், மேலும் வீட்டினுட்புறத்தில் செல்லச் செல்ல, அவளுக்கு 'யாவும் கனவுதானே?' என்று ரே பிரமிப்பாக இருந்தது. இவ்வளவு பெரிய

ஐஸ்வர்யம் அவளுக்காக இத்தனை நாட்களாகக் காத்துக் கிடந்ததா? ஓர் பிட்சாதிபதியின் பெண் லட்சாதிபதி யின் மனைவியானாள் என்றால் அதிசயமான விஷய மல்லவா?

இரவு போஜனத்தின் போதும் சிவஞானம், நாக ரத்தினம் இவர்கள் இருவர் மட்டுமே ஷண்பகத்துடன் உணவருந்தினர். பாஸ்கரன் எங்கே என்ற கேள்வி ஷண்பகத்தின் மனத்தில் எழுந்தாலும், வெகு சிரமத் துடன் அந்த ஆவலை அவள் அடக்கிக் கொண்டாள். சமையற்காரி பரிமாறிய உணவை நிமிர்ந்துகூடப் பார்க் காது சட்டென ஒரே வாயில் தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டாள் ஷண்பகம். பாஸ்கரன் இல்லை என்றதும் அவள் மனச் சஞ்சலம் சிறிது குறைந் திருந்தது.

அதுவரை மௌனமாகச் சாப்பிட்டுக் கொண் டிருந்த ஷண்பகத்தை நிமிர்ந்து நோக்கி, "நீ மாடிக்குப் போ. நான் இதோ வறேன். உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்" என்று மெதுவாகக் கூறினாள்.

அவசரமாகக் கை கழுவி விட்டு, ஒரு நொடியில் மாடிப் பக்கம் சென்ற ஷண்பகத்தின் மனது அச்சத் தினால் படபடத்தது. அவளிடம் அப்படிப் பேசக்கூடிய விஷயம் என்னவாக இருக்கும்? அவளுடைய தாய், தகப்பனாரைப் பற்றி ஏதாவது கேட்டு விடுவாளோ? கேட்பதற்கு என்ன இருக்கிறது? பிறந்த அன்றி லிருந்து அவள் பெற்றவர் முகத்தையே அறியாதவ ளாயிற்றே. அப்படியே சொல்லிவிட்டால் போகிறது. பலவாறு தனக்குத்தானே தைரியம் கூறியபடி வேக மாகப் படிகளைக் கடந்தாள்.

கண் நிறைந்த கணவனைத்தான் பொதுவாக இளம் பெண்கள் விரும்புவார்கள். கண் நிறைந்தவனாக வாய்க்காவிட்டால், அவன் கை நிறைந்தவனாகவாவது இருந்தால் நல்லதென திருப்தியடைய முயல்வார்கள்.

ஷண்பகமும், அவளுக்காக அந்த மாளிகையில் நிறைந்துள்ள சுகபோகங்களை நினைத்து பாஸ்கரனைப் பற்றி அறவே மறக்க முயன்றாள். இனி அவனுக்கு அண்ணியல்லவா ? அதாவது தாய் !

மாடி ஹாலிலும் வட்ட வடிவமான கண்ணாடிகள் பொருத்தப் பெற்ற பெரிய மேஜைகளும், கண்ணாடி பதித்த பீரோக்களும், சோபாக்களும் அவளைத் தலை கிறுக்க வைத்தன. அருகிலிருந்த பெரிய நிலைக்கண்ணாடி ஒன்றின் அருகே சென்ற ஷண்பகம், தன்னழகைப் பார்த்தபடி நின்று விட்டாள்.

விளக்கொளி பட்டுக் காதிலும், மூக்கிலும் 'டால்' வீசிய வைரங்களும், கழுத்திலே பிடியாகப் போடப்பட்டிருந்த தங்கச் சங்கிலி வரிசைகளும், கையிலே அடுக்கடுக்காக மின்னிய வளையல்களும் அவளைப் புதுப் பெண்ணாக மாற்றிவிட்டிருந்தன. இடைவரை அழகாகப் பின்னித் தொங்க விடப்பட்டிருந்த அவளது கூந்தலை முன் பக்கமாக எடுத்து ஒய்யாரமாக விட்டுக்கொண்டு, அந்த பின்னலிடையே பொருத்தப்பட்டிருந்த நூதனமான ஆபரணத்தின் அழகையும் ரசித்தாள். அவளது சிவந்த மேனியை அலங்கரித்த நீலநிறப் பட்டுப் புடவையும், மஞ்சள் நிற ரவிக்கையும், அவளது கவர்ச்சிகரமான தோற்றத்தைப் பன்மடங்கு எழிலுடன் பிரகாசிக்கச் செய்தன. 'பழய ஷண்பகமா இது ?' என்று கேட்டுக் கொண்ட அவள் தன்னையும் மறந்து உரக்கச் சிரித்து விட்டாள். அவளது கிண்கிணிச் சிரிப்பு அந்த விசாலமான ஹால் முழுவதும் பரவி நின்றது.

அவளது சிரிப்பொலி அடங்கிய மறு கணம், "யார் அது ?" என்று யாரோ வினவிய குரலும், தொடர்ந்து இடைவிடாது இருமும் சப்தமும் தெளிவாகக் கேட்டன. யாரும் இல்லை என்றல்லவா அவள் அவ்வளவு தைரியமாக உரக்கச் சிரித்து விட்டாள் ! குழந்தையைப்போல சிறு விஷயத்திற்கெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்து விட்டாளே என யாராவது நினைத்துக்கொண்டு

விட்டால் என்ன செய்வது என்று நடுங்கினுள். சப்தம் வந்த திக்கை அச்சத்துடன் பார்த்தாள்.

ஓயாமல் இருமல் ஒலி வந்த திக்கை நோக்கி அடி மேல் அடி வைத்து நடந்த ஷண்பகம் ஓர் அறையின் கதவின் முன் வந்து நின்ருள். பாதி நடுக்கத்துடனும், பாதி குழப்பத்துடனும் மெல்லக் கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்த அவளது அழகிய விழிகள் அதிசயத்தினுல் விரிந்தன.

வியாதியின் கருமையினுல் உருக்குலைந்து போன ஓர் எலும்புருவம், மிருதுவான பஞ்சணை போடப்பட்ட கட்டிலொன்றில் கிடந்தது. சதைப் பற்றற்ற தன் குச்சிக் கைகளை மெல்லக் கட்டிலின் மேல் ஊன்றியபடி எழ முயன்று கொண்டிருந்த அந்தப் பெண்மணியை ஷண்பகம் வியப்புடன் பார்த்தபடியே நின்ருள்.

கதவு 'கிறீச்' சென்ற ஒலியுடன் திறக்கப்படுவதைக் கண்ட அந்தப் பெண்மணி தன் ஓயாத இருமலை அடக்கியவாறு சப்தம் வந்த திசையை நோக்கினுள். அடுத்த கணம் அவளது விழிகள் பயங்கரமாக விழித்தன. "நீயா! வாடியம்மா, வா!" என்று ஷண்பகத்தை முன்னமேயே தெரிந்து கொண்டவளைப் போலக் கூறினுள். ஆனுல், அவளது குரலில் தொனித்த எரிச்சலும், முகத்தில் தெரித்த கனலும், ஷண்பகத்தை என்னவோ செய்தன. காரணமில்லாமல் இந்தப் புதிய பெண்மணிக்குக் கோபம் வருவானேன்?

அருகிலிருந்த பீங்கான் கிண்ணமொன்றில் கோழையைத் துப்பிவிட்ட பின்பு அந்தப் பெண்மணிக்குச் சிறிது இருமல் ஓய்ந்தது. தான் பார்த்த காட்சியினுல் ஏற்பட்ட அருவருப்பைத் தாளாமல் ஷண்பகம் கண்களை ஒரு கணம் மூடிக்கொண்டாள்.

"ஹூம்! நீ ஒருத்திதான் இந்த வீட்டுக்குக் குறைச்சலா இருந்தே. வந்து விட்டாயல்லவா? இனிமே அதிர்ஷ்டத்துக்குக் குறைவே கிடையாது" என விரக்தி

யாகப் பேசிய அவள் தன் தலைமாட்டில் இருந்த துண்டினால் வாயைத் துடைத்துக் கொண்டாள்.

ஷண்பகத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. 'நீங்க என்ன சொல்றீங்க?' என்று கேட்டாள் நடுக்கத்துடனும், திகைப்புடனும். தனக்கு ஏதோ ஒரு ஆபத்து வரப் போகிறது என எண்ணியவளாய் அவள் ஆவி சோர்ந்தாள். அந்தப் பெண்மணி ஏதோ சொல்ல விரும்புவதற்குள், அறைக்குள் புயலைப்போல நாகரத்தினம் வந்து நின்றாள். அவளது எதிர்பாராத வரவினால் அதிர்ச்சியடைந்த மற்ற இருவரும் வாளாவிருந்தனர்.

"ஏய் ஷண்பகம்! உன்னை யார் இங்கே வரச் சொன்னது? போ! வெளி ஹாலுக்கு" என்று அதட்டின நாகரத்தினம், அந்த வியாதிக்காரப் பெண் மணியிடம், "பங்கஜம்! உனக்கு எத்தனை வாட்டி சொல்றது? யாராவது மாடிப் பக்கம் வந்தா, யாரு யாருன்னு கேட்டு உயிரை விடாதேன்னு" என்று பல்லைக் கடித்தாள்.

"இந்த மிரட்டலுக்கெல்லாம் பங்கஜம் பயப்பட்ட காலம் மலையேறிப் போச்சு. இந்த வீட்டிலேயே என்னை எத்தனை நாளைக்கு இப்படி உயிரோட வதக்கப் போறீங்க. எப்படியிருந்தாலும், என் உயிர் போகத் தானே போகுது. அதை நிம்மதியா போகவிடக்கூட உங்களுக்கு மனசில்லையா அக்கா?" என்று மூச்சு வாங்கப் பேசிய பங்கஜத்திற்கு மறுபடி இருமல் வந்து ஓய்ந்தது.

"இப்ப என்ன நடந்துடுச்சின்னுதான் கேக்கறேன். எல்லாம் எப்படி எப்படி நடத்தணும்னு எனக்குத் தெரியும். வேளா வேளைக்கு மருந்தைச் சாப்பிட்டிட்டு சும்மா கிடப்பியா?...........போனாப் போவுதுன்னு வீட்டோட வச்சு உனக்கு வைத்தியம் பார்த்தா நீ சும்மா துள்ளுறியே?" என்று நாகரத்தினம் கூறிவிட்டு பற்களை நறநறவெனக் கடித்தாள். அந்த சப்தத்தைக்

கேட்ட ஷண்பகத்தின் தளிர்மேனி கிடுகிடென ஆடியது. ஆனல், பங்கஜம் ஏளனமாகச் சிரித்தாள்.

"யார் அக்கா துள்ளருங்க. நல்லா உங்க மனசையே கேட்டுப் பாத்துப் பதில் சொல்லுங்க. என்னை அன்னிக்கும் கெடுத்தீங்க. இன்னைக்கும் கொஞ்ச நஞ்சம் மிஞ்சி நிக்கிற அமைதியையும் கெடுத்திட்டீங்க. இந்தப் பாவத்துக்கு நான் மனசு வச்சேன்னு நல்லாப் பழி தீத்துக்க முடியும். என் மூச்சு போறதுக்கு முன்னே உங்களையெல்லாம் கம்பி எண்ண வச்சுட்டுப் போவேன். ஆனல் அப்படிச் செய்ய என் மனசு இடங்கொடுக்கலே." என்று படபடப்புடன் கூறிய பங்கஜத்தின் கண்களில் நீர் தளும்பியது.

"அடேயப்பா! எங்களைக் கம்பி எண்ண வச்சுடுவையா? உனக்கு அவ்வளவு திமிர் இன்னும் இருக்குதா? அதுதாண்டி ஆண்டவன் உன்னை இப்படி வச்சிருக்கான்?" என்று கடுமையாகப் பேசிய நாக ரத்தினம், ஷண்பகம் நிற்பதைப் பார்த்து, "ஏன் இன்னும் இங்கேயே நிக்கறே, போ! வெளியே" என்ருள்.

அவளது கடுமொழிகளால் நடுங்கிய ஷண்பகம் ஒரே தாவலாக அறையை விட்டு வெளி ஹாலுக்கு வந்து விட்டாள். அறைக்குள்ளிருந்து பங்கஜத்தின் ஹிருதயத்தைப் பிளக்கும்படியான விம்மல்கள் அவள் காதிலே விழுந்தது. அந்தத் துயரொலி ஷண்பகத்தை என்னவோ செய்தன. பங்கஜத்தின் துயரத்திற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்பதை எண்ணி எண்ணி அவள் குழப்பமடைந்தாள்.

## 4

குமரப்பா நகரின் ஐம்பது வீடுகளையும் பற்றிய சரித்திரம் நமக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை என்ருலும், ஸ்ரீமான் குழந்தைவேலுவின்

குடும்பத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது நமக்கு மிக மிக அவசியமாகிறது. "பணக்காரனைச் சுற்றிப் பத்துப்பேர், பைத்தியக்காரனைச் சுற்றிப் பத்துப் பேர்" என்பார்கள். திரு குமாரசாமி என்று தம் சுய உழைப்பால், குமரப்பா நகரின் அதிபரும், செங்கல் வேலையின் தங்கக் குவியலுக்குச் சொந்தக்காரரும் ஆனாரோ அன்றே பலர் அவரிடம் உறவு கொண்டாட வந்து விட்டனர். பலாப்பழத்தை ஈ மொய்ப்பது போல் தம்மைச் சுற்றித் திரிந்த உறவினர்களின் உண்மை சொரூபத்தைக் குமாரசாமி நன்கு அறிந்தவர். இருந்தாலும் தம்மால் ஆன உதவியைத் தர்ம சிந்தனை காரணமாக, அழையாத விருந்தாளியாக வந்துவிட்ட உறவினர்களுக்கு அளித்தார். எவ்வளவுதான் கிடைத்தாலும் மனித மனத்துக்குத் திருப்தி என்பது ஏற்படுவதே கிடையாது. நமது குழந்தைவேலுவின் மனைவி புண்ணியவதி அம்மாளும் மனிதப் பிறவிதானே; எனவே, அவள் மட்டும் இந்த நியதிக்கு விதி விலக்கா? குமாரசாமியின் பிரபல நிலையை அறிந்தவுடன், தலைமுறை தலைமுறையாகத் தேடிப் பார்த்து அலசிக் கண்டுபிடித்த தூரத்து உறவைப் பலப்படுத்திக் கொள்ள குமரப்பா நகருக்கு விரைந்து வந்தாள். குமாரசாமிக்குத் தான் ஏதோ ஒரு வகையில் ஒன்றுவிட்ட சகோதரி என்ற உறவினால் தன் கணவன் குழந்தைவேலுவுக்கு அங்கேயே வேலையும் வாங்கித் தந்தாள். ஆயினும் தன் கணவனின் திறமைக் கேற்ற ஊதியமில்லை என்ற பெரும் குறை அவளுக்கிருந்தது.

ஸ்ரீமான் குழந்தைவேலு பெயருக்கேற்றபடி கள்ளம் கபடில்லாத குழந்தை உள்ளம் படைத்தவர். நல்ல எடுப்பான தோற்றத்திற்கு, அவரது ஆட்டுக் கடாவின் கொம்பு போன்ற மீசை காம்பீர்யம் கொடுப்பதாக அடிக்கடி சொல்லிக் கொள்வார். அந்த 'ஆட்டுக் கடா மீசை' விஷயத்தில் மட்டுமல்லாது அவருக்கும் அவர் மனைவிக்கும் வேறு எந்த விஷயத்திலும்

மாறுபட்ட அபிப்பிராயங்கள் எழுதுவது வழக்கம். அப்போதெல்லாம் தம்முடைய வழுக்கை விழுந்த தலையையும், ஆட்டுக்கடா மீசையையும் தடவிக் கொடுத்து விட்டுப் புன்னகை பூத்த வண்ணம் மௌனம் சாதிப்பார்.

ஸ்ரீமதி புண்ணியவதி அம்மாளின் பருத்த சரீரத்தைப் பார்த்தவர்கள், 'பாவம்!' என்றுதான் அனுதாபப்படுவார்கள். வஞ்சனையில்லாமல் அந்தம்மாளின் தேகம் வளர்ந்து விட்டதே என்ற பச்சாதாபம் தான் பார்ப்பவர்கள் அனுதாபமடைவதற்குக் காரணம். ஆனால் உண்மை அதுவல்ல, இந்த உலகத்தின் மூலை முடுக்கிலுள்ள வஞ்சனை யாவும் ஒருங்கே திரண்டு புண்ணியவதியின் பூதாகார வடிவிலே வந்து குடிகொண் டிருக்க வேண்டும். பிறர் வீட்டு விஷயம், வம்பு பேசுவது போன்ற பெரும் பணிகளிலே அந்த அம்மையார், தம்முடைய தேக சிரமத்தையும் பொருட்படுத்தாது தொண்டாற்றுவது வழக்கம். அதற்கு வசதியாக அடுத்த வீட்டு தனபாக்கியமும், அவள் வீட்டு ஜன்னல் கதவும் அமைந்திருந்தார்கள் என்றால் மிகையில்லை.

வாயிற் கதவினருகில் இருந்த ஜன்னல் கதவு என்ன காரணத்தாலோ சற்று விரிந்து, இடைவெளிவிட் டிருந்தது. அந்தக் கதவை மாற்றி வேறு நல்ல கதவைப் போடப் புண்ணியவதி இடம் கொடுக்கவில்லை. எதிர் வீட்டு குமாரசாமி பங்களாவில் மட்டுமல்லாது, அந்த நகர் முழுவதுமே யார் வீட்டில் என்ன நடக்கிறது என்பதைப் பிறர் அறியாவண்ணம் அறியும் மாயக் கண்ணாடியாக அந்த ஜன்னல் கதவின் ஓட்டை விளங்கியதுதான் அவளது எதிர்ப்புக்குக் காரணம். தனக்குத் தெரிந்துவிட்ட விஷயத்தைத் தன்னுடன் மட்டும் வைத்துக்கொள்ளும் சுயநலம் அவளிடம் கிடையாதாகையால், அந்த விஷயத்தை, தங்கள் வீட்டு சமயலறை ஜன்னல் வழியாக, அடுத்த வீட்டு தனபாக்கியத்திடம் பறிமாறிக்கொள்ளும் வழக்கமும் உண்டு.

பெண்கள் தான் வம்பு பேசுவதில் சளைக்காதவர்கள் என்று கூறும் ஆண்களுக்கு சவால் விடுபவனாகத் திகழ்ந்தான் மகன் ராஜேந்திரன். கல்லூரிப் படிப்பிலே நாலு வருஷம் முற்றுகையிட்டு முடிவிலே தோல்வி யடைந்த அவனுக்குக் கல்லூரி அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்ட விஷயங்கள் அரும்பு மீசை, கோணல் சிரிப்பு, வறட்டு ஜம்பம், வீண் அரட்டல், வேளைக்கொரு உடை இவையேதான். ‘ வாயுள்ள பிள்ளை பிழைக்கும் ’ என்ற நிலைக்கேற்ப சிவஞானத்திடம் எப்படியோ ஒரு உத்தியோகத்தைச் சம்பாதித்துக் கொண்டு விட்டான். ஊர் வம்பு விஷயங்களில் தாய் எட்டடி பாய்ந்தால் அவன் பதினாறடி பாயத் தயாராயிருந்தான்.

மகள் புவனேஸ்வரி ‘தாயைப் போலப் பெண்ணாக’ விளங்காமல் தகப்பனைப் போலப் பெண்ணாக விளங்கினாள். நல்ல அறிவும், ஆழ்ந்த அடக்கமும் அவளிடம் இயற்கையாகவே குடிகொண்டிருந்தன. பிரமாதமான அழகி என்று கூறமுடியாவிட்டாலும், பார்ப்பதற்கு கவர்ச்சிகரமான தோற்றமுடையவளா யிருந்தாள். நாகரிகத்தின் முன்னேற்றத்தைப் போலவே அவளுடைய படிப்பும் அவளிடம் வெகுவாக முன்னேறி இருந்தது. வீட்டில் அபிப்பிராய பேதம் ஏற்படும்பொழுதெல்லாம் தாயும் தனயனும் ஒரு கட்சியும் தந்தையும் மகளும் ஒரு கட்சியுமாகப் பிரிந்து விடுவார்கள்.

கூடத்தில் மாட்டியிருந்த கடிகாரம் மணி பதினொன்று அடித்து ஓய்ந்ததையும் கவனியாதவளாய் புண்ணியவதி ஜன்னல் கதவின் ஓட்டையிலே ஐக்யமாகி உட்கார்ந்து விட்டதைக் கண்ட குழந்தைவேலுவிற்குக் கோபமும் சிரிப்பும் கலந்து வந்தன. தாம் அமர்ந்திருந்த சாய்வு நாற்காலியைவிட்டு எழுந்து மனைவியருகில் வந்த அவர், “ இந்தா ! என்ன இது ! ராத்திரி மணி பதினொண்ணு ஆகியுமா உனக்கு இன்னும் ஊர் விவகாரம் விடலை ” என்றார் சிறிது அதட்டலாக.

ஒட்டடையைவிட்டு எடுத்த கண்களால் தம்மைச் சுட்டு எரித்து விடுகிறவள்போல் பார்த்த மனைவியை மீண்டும், "போய் தூங்கு போ. ஊரெல்லாம் அடங்கிப் போச்சு. இந்த வேளையிலே கூடவா 'பிசின்' வச்சு ஒட்டிக்கிட்ட மாதிரி அங்கேயே கிடக்கிறே. சரிதான் எழுந்திரு" என்றார்.

"சும்மா இருங்க. குமாரசாமி வீட்டுலே விளக்கு எரியுது. என்னமோ கசமுசன்னு குரல் கேட்குது" என்று கணவனிடம் தணிந்த குரலில் கூறினாள் புண்ணியவதி.

"நீ கூடத்தான் கசமுசான்னு இப்ப ரகசியம் பேசினே. அப்படித்தான் அவங்களும் ரகசியம் பேசியிருப்பாங்க. சரி சரி இந்த இடத்தை விட்டு நீ எழுந்திருக்கப் போறியா இல்லையா?" என்று கிண்டலும், கடுமையுமாகப் பேசிய கணவனை மீற முடியாமல் எழுந்த புண்ணியவதி ஆத்திரத்துடன் மாடிப்படிகளைக் கடந்து மேலே சென்றாள்.

'மெதுவாப் போ. மாடிப்படி உடைஞ்சிடப் போவுது. பின்னாலே நான் ஒருத்தன் வரேன்னு நினைவிருக்கட்டும்.' என்று கூறியபடி பின்னால் வந்த கணவனை லட்சியம் செய்யாது விர்ரென அருகே காணப்பட்ட சிறிய அறைக்குள் சென்றாள். அறையினுள் படுத்திருந்த ராஜேந்திரன், இரைக்க இரைக்க ஓடி வந்த தாயின் களைப்பைப் பொருட்படுத்தாதவனாய், "என்னம்மா விஷயம்? யார் வந்திருக்காங்க" என்று தன் தலையைத் தூக்கிக் கேட்டான்.

மனைவியைத் தொடர்ந்து உள்ளே வந்த குழந்தைவேலு "சரி! அம்மாவும் மகனும் வம்பளக்க ஆரம்பிச்சாச்சா? இனிமே ராத்திரி ஒரு மணிக்குத்தான் படுக்கை" என்றார்.

மகனருகில் பெருமூச்சு வாங்க உட்கார்ந்த தாயார் "உங்க வேலையைப் பார்த்துகிட்டு போகாம என்னைப்

பார்க்கவிடாம செஞ்சீங்க. தூக்கம் வந்தா, வெளி வரந்தா விலே படுக்கையை விரிச்சிருக்கேனே, போய் படுக்கறது தானே'' என்று எரிந்து விழுந்தாள்.

தமது இல்லற வாழ்வின் இடியோசைக்குப் பழக்கப் பட்ட வராதலால், குழந்தைவேலு நிம்மதியாகத் தூங்கச் சென்றார். தந்தையின் தலை மறைந்தவுடன், "ஏம்மா ! என்ன ஆச்சு ?'' என்று ஆவலுடன் கேட்டான் ராஜேந்திரன்.

'எனக்குத் தெளிவா தெரியலே. சாயந்திரம் வந்து இறங்கின பொண்ணு உள்ளே போனதை நான் பார்த்தேன். அப்புறம் இப்பத்தான் பேச்சுக் குரல் கேட்டுது. சுத்தமா எப்படிக் கேட்கும். யாரோ அழற மாதிரி என் மனசிலே பட்டுது. ஒரு வேளே பங்கஜத் துக்குத்தான் ஆபத்தோன்னு நினைச்சேன். ஆனா அவ வழக்கமா இருமுகிற சப்தமும் கேட்டுச்சு. என்னவோ நல்லா கேக்கறதுக்குள்ளே உங்க அப்பா காரியத்தைக் கெடுத்திட்டாரு.'' என்று சலிப்புடன் கூறினாள் தாயார்.

"இருக்கட்டும். நாளைக்கு நானே விஷயத்தைத் தெரிஞ்சுகிட்டு வந்துடறேன் பார்'' என்று கையை சொடுக்கிவிட்டு ராஜேந்திரன் மீண்டும் படுக்கையில் தலையைச் சாய்த்தான். அப்போதுதான், கீழ் ஹாலில் மின்சார விளக்கை அணைக்காமல் வந்துவிட்டது புண்ணியவதியின் கவனத்திற்கு வரவே மறுபடியும் கீழே இறங்கி வந்தாள். விளக்கை அணைத்துவிட்டு மேலே செல்ல மனம் வராதவளாய், ஜன்னல் ஓட்டைக் குள்ளே தன் கண்ணைச் செலுத்தினாள். ஊகத்தி னாலேயே விஷயத்தைக் கிரகிக்கும் சக்தி வாய்ந்த அவளது மூளைகூட இப்போது சரியான விஷயத்தை அறியமுடியாமல் தவித்தது.

இன்று நேற்றல்ல. குமரப்பா நகருக்கு வந்த தினத் திலிருந்தே புண்ணியவதி குமாரசாமி வீட்டவரைப்

பற்றிக் குறிப்பாக அறிந்துகொள்ள ஆசைப்பட்டு வந்தாள். நாகரத்தினம் என்றுமே அவளை உறவுக்காரி என்று கூப்பிட்டுக் கொண்டாடாதது ஒரு புறமும், அவர்கள் வீட்டு விஷயங்களைத் தன்னிடம் சொல்லி எந்த விதமான உதவியையும் நாடாதது மற்ருெரு புறமுமாக அவளை வாட்டி எடுத்தன. நாகரத்தினத்தின் உடம்பில் கார் வைத்திருக்கும் ரத்தம் ஓடுவதாக அவள் அடிக்கடி பொருமுவாள். நாகரத்தினத்துடன் சரிசமமாகத் தன்ஞல் தலைநிமிர்ந்து பேச முடியவில்லை என்ற தாழ்வு மனப்பான்மையும் அவளது பொருமைத் தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. ஒரே ஒரு விஷயத்திற்காகத்தான் அவள் இத்தனை அவமானத்தையும் சகித்துக் கொண்டிருந்தாள். நாகரத்தினத்தின் தம்பி பாஸ்கரனை தன் பெண் புவனேஸ்வரிக்குப் பிடித்துப் போட்டுவிட்டால் நல்லதாயிற்று என்பது தான் அவளது பொறுமைக்குக் காரணம். சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்த அவள் சதா குமாரசாமி வீட்டவரின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்ததில் வியப்பே இல்லை. "திருப்பதியப்பா! என் மனசிலே நினைச்ச இந்தக் காரியத்தை நடத்தி வச்சுடப்பா. உனக்குக் குளிரக்குளிர பால் அபிஷேகம் பண்ணுகிறேன்" என்று மனதார வேண்டிக் கொள்வாள். எனவே அன்று புதிதாக வந்த பெண் ஒருவேளை பாஸ்கரனுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பெண்ணுக இருக்குமோ என்ற கலக்கம் அவளைத் தூங்கவிடாமல் செய்தது.

ராஜேந்திரனும் தூங்காமல் படுக்கையில் புரண்டான். அவனுக்கு சிவஞானத்தைப் போன்ற மனிதர்களைக் கைக்குள் போட்டுக் கொள்வது மிக எளிது. ஆனல், பாஸ்காரன்......ஸர்க்கஸ்காரன் கடும்புலியிடம் காட்டும் சாகஸங்களையெல்லாம் விட அவன் பிரயோகித்த பற்பல மந்திரசக்திகளுக்கும் சிறிதும்கட்டுப்படாது இருந்தான் பாஸ்கரன். அழகிய தோற்றமும் இளமையும்

அறிவும் அவனுக்கு மிடுக்கையே அளித்தன. தமையனது தயவிலேயே வேலை செய்ய விரும்பாது பட்டணத்துக் கல்லூரி ஒன்றில் ரசாயனப் பேராசிரியராக வேலை பார்த்து வந்தான் பாஸ்கரன். அதே கல்லூரியில் அவனது மாணவியாகப் படித்து வந்த புவனேஸ்வரியும் சதா பாஸ்கரனைப் பற்றியே பெருமையாகப் பேசுவது வழக்கம். புவனேஸ்வரி பட்டணத்துக் கல்லூரி ஹாஸ்டலிலே தங்கிப் படித்து வந்தாலும், அடிக்கடி குமரப்பா நகருக்கு வந்துவிடுவாள். அதுசமயம் பாஸ்கரனது பெருமையை அவள் தம்பட்டமடிப்பதைப் பொறுக்க மாட்டாதவனாய், ராஜேந்திரன் எரிந்து எரிந்து விழுவான். இயல்பாக எழுந்த பொறாமை காரணமாக பாஸ்கரனை அவன் அறவே வெறுத்தான். குமாரசாமி வீட்டவர்களைப் பற்றி சதா அலட்சியப் படுத்துவதிலே அவன் தனி இன்பம் கண்டான். அவன் ஆத்திரத்துடன் பொங்கப் பொங்க, எதிர் வீட்டவரின் அந்தஸ்தும் பொங்கி வழிந்தது. பொறாமையும், பதவியும் ஒரே தராசுக் கல்லில் எடை போடப்படுவது தானோ என்ற சந்தேகமும் அவனது உள்ளத்தில் புகுந்துகொண்டிருந்தது.

அன்று மாலை வந்து இறங்கிய அந்தப் பெண்ணைத் தன் கூர்மையான கண்களால் அவன் ஒரே விநாடியில் கணக்கிட்டிருந்தான். வட்ட முகமும், அழகிய கண்களும் கொண்ட அந்தப்பெண் சிறந்த அழகி என்பதை ஊகித்த அவன் மனம் அவள் குமாரசாமியின் வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டதன் காரணம் எதுவாக இருக்கும் என்பதை ஆராய முனைந்தது. தனக்கு மேலாக எதிலும் பிரகாசித்த பாஸ்கரன் அந்த அழகான பெண்ணை மனைவியாக அடையப் போகிறானோ என்ற ஆத்திரத்தில் குமுறிய அவன் இரவு முழுவதும் தூங்கவே இல்லை.

குமாரசாமியின் பங்களாவிலும் இரண்டு ஜீவன்கள் தூக்கமின்றித் துடித்துக் கொண்டிருந்தன. ஒன்று ஷண்பகம். மற்றொன்று பங்கஜம். ஷண்பகத்தைப்

பலவந்தமாக வெளியேற்றிய நாகரத்தினம் அவளை வேறு ஒரு அறைப் பக்கம் அழைத்துச் சென்றாள். மிக விலையுயர்ந்த பொருள்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த அறையைக் காணவும் ‘உட்காருவதா, வேண்டாமா’ என்ற தயக்க நிலையில் ஷண்பகம் திருதிருவென விழித்தாள். சற்று முன் அடைந்த குழப்பத்தால் அவள் தலை சுழன்று வந்தது. நாகரத்தினத்தின் முகத்தில் பொங்கி நின்ற ஆத்திரத்தைப் பார்க்கவே அவள் பயந்தாள்.

நாகரத்தினம் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டு, ஷண்பகத்தைப் பார்த்து, “இதா பாரு. ஏன் இப்படி முழிச்சிகிட்டு நிக்கிறே. அப்படி உட்கார்” என்று அருகிலிருந்த கட்டிலைக் காட்டினாள். மிருதுவான பஞ்சணை பரப்பப்பெற்ற அந்தக் கட்டிலின் மேல் ஷண்பகம் அச்சத்துடன் உட்கார்ந்தாள்.

“ஒண்ணு முதல்லே உங்கிட்ட சொல்றேன். கவனமா கேட்டுக்கொள். இந்த வீடு, சொத்து, சுதந்திரம் எல்லாம் என் அதிகாரத்துக்குள்ளே. நான் செத்த பிறகுதான் உன் புருஷன் சிவஞானத்துக்கு. அதுனாலே நான் சொன்னபடி தான் நீ கேக்கணும். தெரிஞ்சுதா? என்னைக் கேட்காம இந்த வீட்டிலே எதையும் செய்ய எல்லாருமே பயப்படுவாங்க” என்று பயமுறுத்தலுடன் ஆரம்பித்தாள் நாகரத்தினம்.

“அப்படியே செய்யறேங்க” என்று உளறினாள் ஷண்பகம். “சரி! இப்ப நான் சொல்றதை நல்லா மனசுலே போட்டுக்க. இந்த வீட்டிலே சிவஞானம் பெண்சாதியா எதுக்கு வந்திருக்கிறே தெரியுமா?” என்று கேட்டாள் நாகரத்தினம். மேலே பதிலை எதிர்பாராதவளாய் அவளாகவே, “இப்ப பாத்தியே அந்த பெருநோய்க்காரி பங்கஜம், அவள் செய்யாமல் விட்ட குறையை நீ பூர்த்தி செய்யணும்” என்றாள் தீர்மானமான குரலில்.

“நீங்க சொல்றது எனக்கு ஒண்ணும் புரியலையே. அந்த பங்கஜம் யாரு?” என்று சிரமத்துடன் மென்று விழுங்கினாள் ஷண்பகம்.

"அவளா? அவள்தான் உன் சக்களத்தி!" என்று கூறிய நாகரத்தினத்தின் குரல் கடூரமாக ஷண்பகத்தின் உள்ளத்தைத் தாக்கியது.

"சக்களத்தியா?" என்று திகைப்புடனும் அதிர்ச்சியுடனும் வினவினுள் அவள்.

"ஆமாம். அந்த நாளிலே ஏதோ கட்டிப் போட்டோம். இப்படி வெறும் மலடியாகும்னு யார் கண்டாங்க? இல்லே இந்தப் பெரு வியாதி வேறே வரும்னு யாராவது நினேச்சுத்தான் பாத்தாங்களா? இவ உசிரோட இருக்கும் போது வேறே கல்யாணம் பண்ணக் கூடாதுன்னு எத்தனே நாள் பாக்கிறது? எங்க சொத்தை ஆள ஒரு பேரப் பிள்ளேயை பாக்காம நான் கண்ணே திடீர்னு மூடிட்டா என்ன செய்றதுன்னுதான் அந்தப் பாவி சாகறவரைக்கும் காத்திருக்காம ஒரு கால்கட்டுப் போட்டேன் என் தம்பிக்கு. அதனுலே நீ இப்ப இங்கே இருக்கிற நிலேமை வெளியிலே யாருக்கும் தெரியக் கூடாது. ஏன்னு கேட்டா, பெண்சாதி உயிரோட இருக்கும்போது வேறே கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு சட்டம் வந்திருக்குதாம். விஷயம் வெளியே வந்தா தம்பி ஜெயிலுக்குப் போகணும். பங்கஜம் பாவி என்னே அதனுலேதானே பயமுறுத்தினு. இருக்கட்டும். இன்னெரு விஷயம். இந்த சுத்து வட்டாரத்திலே இருக்கிறவங்க சுத்த அக்கப்போர் பேசறவங்க. அதுவும் அந்த புண்ணியவதி இருக்காளே. அவள் ஒருத்தியே போதும் ஊர்வம்பை உழக்கால் அளக்க. அதனுலே இந்த வீட்டுக்குன்னு யார் வந்தாலும் நீ அவங்க கண்ணிலே படக்கூடாது. அப்படியே தவறிக் கிவறி பட்டாலும் பேசக்கூடாது. உனக்கு நல்ல படிப்பெல்லாம் சொல்லி வைக்கணும்னு தம்பி சொல்லிச்சு. அதுக்கும் ஏற்பாடு பண்ணியிருக்கேன். நீ உண்டு உன் வேலேயுண்டுன்னு இருக்கணும். என்ன புரிஞ்சுதா?" என்று மூச்சுவிடாது பேசிய நாகரத்தினம் அதட்டலுடன் முடித்தாள்.

அவள் பேசியதைக் கேட்டுக்கொண்டே வந்த ஷண்பகத்தின் முகம் இனம் புரியாத பற்பல உணர்ச்சி மாறுதலால் ஜிவ்வெனச் சிவந்து கொண்டே போயிற்று. தான் ஏதோ ஒரு அபாயகரமான நிலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற உள்ளுணர்வு அவளை உறுத்தியது. பணத்தைக் காட்டிப் பாட்டியை வஞ்சித்துத் தன்னைப் பொன் கூண்டில் அடைத்த கிளியாக்கி விட்டார்கள் என்பதை அறிந்தாள். அந்த வினாடியே நாகரத்தினத்தின் உருவம் அவளுக்குப் படமெடுத்து நிற்கும் நாக சர்ப்பத்தை ஒத்திருந்தது. தன் சுயநலமான திட்டத்துக்காக இரண்டு பெண்களின் வாழ்வையல்லவா கெடுத்து விட்டாள்! மடை திறந்தாற்போல அவளது கண்களில் கண்ணீர் வெள்ளம் கரை புரண்டோடியது.

"என்னடி அழுகை வச்சுக் கிடக்குது! நான் சொல்றதெல்லாம் உன் நன்மைக்குத்தான்னு தெரிஞ்சுக்க. நீ கிடந்த நிலைமைக்கு இந்த அஷ்ட ஐசுவர்யம் தேடி வந்திருக்குமா? ஆச்சு, தம்பி வர நேரமாச்சு, பேசாம பால் சொம்பை எடுத்துக்கிட்டுப் போ. அங்கேயும் ஏதாவது அழுது ரகளை போட்டே........." என்று உறுமிவிட்டு அறையை விட்டு நாகரத்தினம் வெளியேறினாள்.

துடுப்பிற்குத் தப்பி அடுப்பில் விழுந்த கதைபோல அந்தஸ்தைக் கண்டு மயங்கிய ஷண்பகம் அதன் பயங்கரத்தை நினைத்துத் துடித்துப் போனாள். அடுத்தடுத்து வரும் கசப்பான உண்மைகளைக் கண்டு வெதும்பியது அவள் உள்ளம். பணத்திற்காக, சட்டவிரோதமாக அவளை விலைக்கு வாங்கி விட்டார்கள்! அவள் அந்த வீட்டு எஜமானியின் அடிமை! பங்கஜத்தின் எதிரி; பிறர் பார்வையிலிருந்து மறைந்து ஒளிய வேண்டிய கைதி! கணவன் என்ற உரிமையுடையவனின் மன மகிழச் செய்யும் விளையாட்டுப் பொம்மை. ஷண்பகம் விதியை நினைத்தே அழுதாள். தன்னைப் பெற்று அனாதையாக விட்ட தாயை நினைத்தாள். அம்மா

என்று குமுறிய அவள் தொண்டையில் எழுந்த விம்மல்களைக் கஷ்டப்பட்டு விழுங்கிக் கொண்டாள். ஆனால் நித்திரை அவளை விழுங்கவேயில்லை.

* * *

ஒன்று, இரண்டு என்று மணியோசையை எண்ணிக் கொண்டிருந்த பங்கஜத்தின் மனதில் எண்ணற்ற சிந்தனை அலைகள் ஒன்றின்மேல் ஒன்றாக மோதின. கண்ணாடிக் கன்னங்களும், கட்டழகும் கொண்ட இதே பங்கஜம் இளமைத் துடிப்புடன் அந்த மாளிகையில் சிவஞானத்தின் மனைவியாக நுழைந்தபோது என்ன நினைத்தாள்? படிப்பும், அந்தஸ்தும், அன்பும் கொண்ட இருவரது வாழ்வும் இன்பப் பூங்காவாக மலரப் போகிறது என்றல்லவா பூரித்துப் போனாள்? ஆனால் அவளது பூங்கா மலராத மொட்டுகளாகக் கருகி இதோ ஒரு நாள் அழியப் போகிறது.

கல்யாணமான பின் தாய் தந்தை, பின் சகோதரன் என யாவரையும் இழந்தும்கூட கணவனது அன்பில் அவர்களது பிரிவை அவள் உணரவில்லை. முடிவில் கணவனது அன்பை இழக்க நேரிட்டபோதுதான் தன் ஆதரவற்ற நிலையை எண்ணி உருக ஆரம்பித்தாள். நாகரத்தினத்தின் செல்வாக்குக்குக் கட்டுண்டு ஆடுபவர் சிவஞானம். நாகரத்தினம் கட்டை விரலை அசைத்தால் சிவஞானம் ஆடியே ஆகவேண்டும். மணமாகிப் பல வருடங்கள் ஆகியும் பிள்ளையில்லாத தனித் தென்னைமரமாக பங்கஜம் நிற்பதை நாகரத்தினம் சொல்லிச் சொல்லி வேதனைப் படுத்தினாள். நாளுக்கு நாள் சிவஞானத்தின் உதாசீனம் வேறு அதிகமாவதைக் கண்டு, பங்கஜத்தின் நொந்த உள்ளம் வெந்து வாடியது. உள்ளத்தின் வேதனையே உடலை உருக்கி அவளுக்கு முற்றிய காச நோயையும் தந்தது. வலுவிலே வரவழைத்துக் கொண்ட அந்த வியாதி மூலம் அவள் மரணத்திலே சாந்தியைத் தேடிக் கொள்ள விழைந்தாள். ஆனால், அதற்குள் அத்தனை அவசரசமா? நொந்த புண்ணில்

கோலிடுவது போல் சிவஞானத்துக்கு மறுமணம். பாவம்! அந்தப் பட்டிக் காட்டுப் பெண் எதனுலோ ஷண்பகத்தின் கள்ளமில்லா முகத்தைப் பார்த்தவுடன் பங்கஜத்திற்கு அவளிடம் அனுதாபம்தான்தோன்றியது. சுயபுத்தியற்ற கணவனும் சுயநலமே உருவமான நாக ரத்தினத்தின் பணத்திற்காக அடிமையாகி விட்டாரே என்று வெறுத்துக்கொண்டாள். "ஏ சாவே! சீக்கிரமாக வா. வந்துவிடு" என்று வேண்டிக்கொண்ட அவளிட மும் நித்திராதேவி கூட வர மறுத்துவிட்டாள்.

## 5

அன்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் யாவருக்கும் சற்று ஓய்வு கிடைக்கும் தினம். வார முழுதும் வெளியே வேலே செய்து உழைத்து அலுத்துப் போன ஆடவர்கள் வீட்டிலே சுகமாகத் தூங்கலாம் என்ற உற்சாகத்துடன் இருக்கும் போது, நாள் முழுவதும் வீட்டினுள்ளே அடைந்து, அடுப்படியிலே புழுங்கிய பெண்கள், தாங்கள் வெளியே காற்ருடப் போகலாம் எனக் கனவு காணும் தினம்.

வழக்கம்போல சாய்வு நாற்காலியில் படுத்த வண்ணம் புத்தகமொன்றில் மனதைப் பறிகொடுத் திருந்தார் குழந்தைவேலு. கூடத்துத் தரையில் உட்கார்ந்து முறத்திலிருந்த அரிசியைக் கல் நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த புண்ணியவதியின் மனம், பக்கத்தில் உட்கார்ந்திருந்த தனபாக்கியத்துடன் சம்பா ஷிப்பதில் லயித்திருந்தது. சுவரில் மாட்டியிருந்த பெரிய கண்ணுடி முன் தலேயைச் சீவி அழகுபார்த்துக் கொண்டிருந்த ராஜேந்திரனும், தாயின்பேச்சில் கவனமா யிருந்தான்.

"டேய் ராஜா! எத்தனே நேரமடா சீவி சிங்கா ரிப்பே. தலேயிலே இரத்தம் வந்திடப் போவுது!

பேனும், ஈரும் புழுத்துக்கிடக்கறவங்க கூட அப்படி வாருவாங்களோ என்னவோ! மணிக்கணக்கா அந்த மொட்டைத் தலையை சீவ எத்தனை நேரமடா ?" என்று மகனை ஜாடையாகக் கவனித்த குழந்தைவேலு, புத்த கத்தை விட்டுத் தம் கண்களை எடுக்காமலே கேலி செய்தார்.

தந்தையின் குத்தல் மொழிகளைச் சட்டை செய்யாத மகனும், " இன்னிக்கு ஒரு நாளைக்குத்தான் ஒழிஞ்சு இருக்குது. நல்லா நிதானமா தலையை சீவிக்கலாம்னு..." என்று முணுமுணுத்துக்கொண்டான். "பட்டணத்திலே ருந்து புவனு இன்னைக்கு வருது. அவங்களுக்கு லீவு தொடங்கனுங்களே, போய் ரயில்வே ஸ்டேஷன்லேருந்து கூட்டிவான்னேன் " என்று கூறின தந்தையைக் கோபத் துடன் திரும்பிப் பார்த்தான் மகன்.

" ஏன். அந்த படிச்ச ராணிக்கு இங்கே தனியா வர வழியே தெரியாதா ? நூறுபேருக்கு வழிகாட்டு வாளே. தானே ஸ்டேஷன்லேயிருந்து வரா ? அதுக்கு நான் போவானேன் ?" என்று வெகுண்டான்.

தந்தைக்கும் மகனுக்கு மிடையே வாக்குவாதம் பலப்பதைக் கண்டு நடுக்கமுற்ற தனபாக்கியம் " நான் அப்புறமா வரேனம்மா ?" என்று நழுவினுள். சுவாரஸ்ய மான தங்கள் சம்பாஷணையைக் கலைத்ததால் ஏற்பட்ட கோபம் கணவன் மீது திரும்பியது புண்ணியவதி அம்மாளுக்கு. கையிலுள்ள முறத்தை அப்படியே கீழே வைத்துவிட்டு " ஏன் ? காலங்காத்தாலே அவனை வம்பிழுக்காதபோனு உங்களுக்குப் பொழுது போகாதா ?" என்ருள் எரிச்சலாக.

" ஆமாம். எனக்கு வம்பிழுக்காட்டா பொழுது போகாது. உனக்கு வம்பு அளக்காட்டா பொழுது போகாது. அந்தக் குமாரசாமி வீட்டுக்காரங்களைப் பத்திப் பேசாட்டா உன் தலை வெடிச்சா போகும் ? எப்ப பார், பிறத்தியார் பேச்சுத்தானு?" என்ருர் சிறிது கடுமையுடன் குழந்தைவேலு.

"உங்களுக்கென்ன வந்துதாம். பொழுது போக்கா ஏதாவது செஞ்சா உங்களுக் கென்ன?" என்ருள் புண்ணியவதி.

"பொழுது போகாட்டா ஏதாவது புத்தகத்தைக் கட்டிக்கிட்டு அழறது. அதை விட்டுட்டு......நானும் போனுப் போவுதுன்னு பாக்கறேன். ஏதாவது விபரீதமா வம்புவந்துது" அவர் முடிக்கு முன் வாயிற்புறம் செருப் போசை கேட்டது. அடுத்த கணம் 'அப்பா' என்று கூவியபடி சிறு தோல்பையுடன் உள்ளே ஓடிவந்த புவனேஸ்வரியைச் சந்தோஷத்துடன் வரவேற்ருர் குழந்தைவேலு. கால் செருப்புகளைக் களைந்துவிட்டு தந்தை அருகே வேகமாக வந்தாள் மகள்.

"எப்படியம்மா தனியா மூணு மைல் தூரம் ஸ்டேஷன்லேயிருந்து வந்தே?" என்று வாஞ்சையுடன் வினவிஞர் குழந்தைவேலு.

"காலாலே நடந்துதான் வந்திருப்பா?" என்று ஏளனமாகப் பேசிய சகோதரனை அலட்சியமாகப் பார்த்தாள். அவளது இனிய முகத்தில் இகழ்ச்சிப் புன்னகை நெளிந்தது.

"என்னடா ராஜா. வந்ததும் வராததுமா தங்கச்சி கிட்ட கலாட்டா. அவன் கிடக்கிருனம்மா. கால் கை கழுவிகிட்டு வா. காப்பி பலகாரம் சாப்பிடலாம்" என்று புண்ணியவதி செல்லமாக மகளைக் கடிந்துவிட்டு உள்ளே அழைத்தாள்.

தாயின் அழைப்பைக் காதிலே போட்டுக் கொள்ளாதவளைப்போல் "என்னுடன் எனக்கு ஒரு காலத்தில் வாத்தியாரம்மாவாக இருந்த பாலாம்பாளும் வந்தார்கள். அதில் ஒரு வேடிக்கை என்னவென்ருல் நமது குமாரசாமி வீட்டிற்குத்தான் அவர்களும் வந்தார்கள். அவருடன் நானும் நடந்தே வந்து விட்டேன்" என்ருள் புவனு.

குமாரசாமி வீடு என்றவுடன் தாயும், மகனும் திடுக்கிட்டார்கள்.

"வாத்தியாரம்மாவா? எதுக்கு? யாருக்கு?" என்று கேள்விகளை அடுக்கினாள் புண்ணியவதி.

"யாரோ ஒரு சொந்தக்காரப் பொண்ணுக்குப் படிப்புச் சொல்லித் தரணுமாம். அதுக்காக சிவஞானம் நேரிலேயே வந்து ரொம்ப கேட்டுக் கொண்டாராம். அந்த அம்மாள் எங்கேயும் வேலை வேண்டாம் என்று இருந்துவிட்டாராம். இதை மறுக்க முடியாமல் ஒப்புக் கொண்டிருக்கிறார். நானும் இங்கே இருக்கிறேன் என்பதை அறிந்தவுடன் மெத்த மகிழ்ச்சி யடைந் தார்கள்" என்று உற்சாகத்துடன் கூறி முடித்த புவனா தகப்பனார் அருகே தரையில் அமர்ந்தாள்.

"அப்படியானால் அந்தப் பொண்ணுக்காகத்தான் இருக்குமோ?" என்றுகூறி யோசனையில் மூழ்கின ராஜேந்திரனை நோக்கிப் பல்லைக் கடித்தார் குழந்தை வேலு.

"மூணு மைல் தூரம் பொண்ணு நடந்து வந்திருக் கேன்னு பாக்காம பெரிய ஆராய்ச்சியிலே இறங்கிட்டீங் களா?" என்று கோபத்துடன் பகர்ந்த அவர், தம் கையிலிருந்த புத்தகத்தைப் படக்கென மூடினார்.

"நீ போய் கை கால் சுத்தம் செஞ்சுகிட்டு வா. நான் இதோ வந்துடறேன்" என்று அவசரமாகக் கூறிய புண்ணியவதி தன் பருத்த உடலை, ஜன்னல் ஓட்டை யருகே நகர்த்தினாள்.

"ஆரம்பிச்சுட்டியா?" என்று தலையிலே அடித்துக் கொண்டபடி குழந்தைவேலு தமது இருப்பிடத்தை விட்டு எழுந்தார். தகப்பனாரைப் பின்பற்றி மகளும் எழவே, ராஜேந்திரன் வேகமாக உடை உடுத்திக் கொள்ள விரைந்தான்.

புண்ணியவதியின் சுவாரஸ்யம் குன்றாமல் ஒரு விஷயம் குமாரசாமி பங்களாவில் நடந்து கொண் டிருந்தது. புதிதாக வந்திருந்த ஒரு வயது முதிர்ந்த

ஸ்த்ரீ வெளி ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவில் உட்கார்ந்திருந்ததைக் கண்டாள். அவளருகில் அமர்ந் திருந்த நாகரத்தினம் ஏதோ உரையாடிக் கொண்டிருந் தாள் எனவும் ஊகிக்க முடிந்தது.

“அம்மா! நான் கொஞ்சம் வெளியே போய் வரேன்” என்று அங்கே வந்த ராஜேந்திரன் பதிலை எதிர்பாராதவனாய் விர்ரென வெளியேறினான்.

யாவரும் போனபின், புண்ணியவதியால் சும்மா இருக்க முடியவில்லை. நாகரத்தினம் தன்னை மதிக்கா விட்டாலும் தான் எப்படியாவது அவர்கள் வீட்டுக்குள் புகுந்து விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலினால் உந்தப்பட்டாள். அதற்கேற்ப ஒரு யுக்தியும் அவளுக்குச் சட்டெனத் தோன்றியது.

புதிதாக வந்திருந்த ஸ்த்ரீயை ஏற இறங்க ஒரு முறை பார்த்தாள் நாகரத்தினம். தும்பைப் பூப்போல வெளுத்த கூந்தலும், நெற்றியிலே விபூதியுமாய், வெள்ளை உடையில் ஔவைப் பிராட்டிபோல விளங்கிய அந்தம்மாள் மீது சிறிது திருப்தி உண்டாயிற்று. கருத்த முகத்திலே புன்னகை பூத்த போதெல்லாம் பளீரெனத் தெரிந்த வெண்பற்களின் வரிசை அவளது முதுமையான தோற்றத்திற்கு இளமையைக் கொடுத் தது. தங்கப் பிரேமிட்ட மூக்குக்கண்ணாடியை நன்கு துடைத்துவிட்டு மீண்டும் அணிந்துகொண்ட பாலாம் பாள் தமக்கருகே இருந்த நாகரத்தினத்தை நன்றாகக் கவனித்துக் கொண்டாள்.

அப்போதுதான் காலைப் பூஜைக்குப் பிறகு வந்த படியால் நாகரத்தினத்தின் ஸ்நானம் செய்த கூந்தல் காற்றில் அலைந்து பறந்தது. நெற்றியில் துலங்கிய விபூதியையும், வெள்ளை ரவிக்கையையும் நீக்கிவிட்டால், அவளது திருமேனியை அலங்கரித்த பட்டுப் புடவையின் முழ அகல சரிகையும், காதிலும், கழுத்திலும் கரங் களிலும் சுடர்விட்ட ஆபரணங்களும், அவளிடம் உள்ள

அந்தஸ்தின் மோகத்தை எடுத்துக் காட்டுவன போல் ஜொலித்தன.

"இதோ பாருங்க வாத்தியாரம்மா. உங்களுக்கு சகல சௌகரியமும் நான் ஏற்பாடு செய்துட்டேன். நீங்கமட்டும் அந்தப் பொண்ணை நல்லா கவனிச்சு படிப்பு சொல்லிக் குடுங்க. பாவம்! யாருமில்லாத அனுதையா போயிடுச்சு. என்னவோ நாமதானே எல்லாம் கவனிக்கணும்." என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டாள் நாகரத்தினம்.

"அதற்கென்ன நல்ல கல்வியறிவை ஏதோ எனக்குத் தெரிந்தவரையில் சொல்லித் தருகிறேன். அந்தப் பெண்ணை நான் பார்க்கலாமா?" என்று கேட்டாள் பணிவுடன் பாலாம்பாள்.

"மாடியிலே உங்களுக்காகக் காத்துக்கிட்டு இருக்குது" என்று கூறிவிட்டுத் தொண்டையை ஒரு முறை கனைத்துக் கொண்டாள் நாகரத்தினம். சுற்று முற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு தாழ்ந்த குரலில், "இந்த ஊர்க் காரங்ககிட்ட அதிகமாப் பேச்சுவார்த்தை வச்சுகிடாதீங்க. சுத்த வம்புக்காரங்க. அதுவும் எங்க வீட்டு விஷயம்னு அல்வா சாப்பிடறமாதிரி" என்றாள்.

பாலாம்பாள் சிரித்து விட்டு "நீங்கள் அதற்காகக் கவலைப்பட வேண்டாம். ஏனெனில் நானே பிறருடன் அதிகமாகப் பழக மாட்டேன். இவ்வளவு வயதாகியும் எனக்கு சங்கோஜம் போகவே இல்லை." என்றாள்.

நாகரத்தினம் பதில் சொல்வதற்குள் "என்ன அக்கா! பாஸ்கரத் தம்பி ஊர்லேயிருந்து வந்துட்டுதா? நம்ப புவனு கூட இன்னைக்குத்தான் வந்தது." என்று உரத்த குரலில் கேட்டபடி உள்ளே வந்த புண்ணியவதி அம்மாளைக் கண்டு, உட்கார்ந்திருந்த இருவருக்கும் தூக்கிப் போட்டது.

பூஜை வேளையில் கரடி நுழைந்ததைப் போல புண்ணியவதி வந்து தொலைந்து விட்டாளே என்று

நாகரத்தினம் உள்ளூர சபித்துக்கொண்டாள். என்ருலும் பகட்டாகச் சிரித்து, "வாங்க உக்காருங்க. தம்பியை அழச்சுகிட்டு வர கார் போயிருக்குது. புவனு ரயில்லே வந்துடுச்சா" என்று கேட்டுவிட்டு, பாலாம்பாள் பக்கம் திரும்பி "நீங்க மாடிப் பக்கம் போங்க" என்று ஜாடையாகக் கூறினுள்.

பாலாம்பாள் எழுந்து சென்றதும், அதுவரை அடக்கி வைத்திருந்த ஆவலே மீற முடியாதவளாய் "யார் அது?" என்று கேட்டாள் புண்ணியவதி. நாகரத்தினம் ஒரு கணம் திணறிப் போய் பிறகு சமாளித்த வண்ணம், "அது ஒரு வாத்தியாரம்மா. ஆமா வாத்தியாரம்மாதான்" என்று உளறினுள்.

அவளது தடுமாற்றத்தைக் கண்ட புண்ணிய வதியா அத்துடன் விடுபவள். "நம்ப புவனு கூட இப்பத்தான் இவங்களைப் பத்திச் சொல்லிச்சு. ஆமா. அது யாரு அக்கா! நம்ப வீட்டிலே ஒரு பொண்ணுக்குப் பாடம் சொல்லித்தரதுக்கு?" என்று தனக்கும் கொஞ்சம் விஷயங்கள் தெரிந்த பாவனையைக் காட்டிக் கொண்டாள்.

நாகரத்தினம் கையைப் பிசையாத குறையாக மேற்கொண்டு என்ன செய்வது என யோசித்துக் கொண்டிருந்தாள். ஒரு பொய்யை மறைக்க எத்தனை பொய்கள் சொல்லவேண்டி வருமோ? தான் செய்ய விருக்கும் காரியம் சட்ட விரோதமானது என்பதைத் தெரிந்துதான் அவள் சிவஞானத்திற்குக் காதும், காதும் வைத்தாற்போல் மணம் செய்வித்தாள். முழுப்பூசணியை சோற்றில் மறைக்கப் பாடுபடுவது போல், இந்த நியாய விரோதமான செயலைப் பிறர் அறியாமல் செய்ய எத்தனை கஷ்டப்பட வேண்டியிருக்கிறது அதுவும் புண்ணியவதியின் காதிலே மட்டும் இந்த விஷயம் எட்டி விட்டால் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. எவருக்குமே பயப்படாத அவள் இருவரிடம்

அஞ்சி நடுங்கினுள். ஒன்று பாஸ்கரன். மற்ருென்று புண்ணியவதி. பாஸ்கரன் அவளுக்கு உடன் பிறந்தவனு ஞலும், நியாயத்துக்கும் நேர்மைக்கும்தான் முதல் மதிப்புக் கொடுப்பவன். அவனை எதிர்ப்பது என்பது அவளால் முடியாத காரியம். புண்ணியவதியின் வாய்க்கு மிகவும் பயந்தவள் நாகரத்தினம். புண்ணியவதியைப் போல நாலுபேர் நடுவில் தைரியமாக வம்பு பேச அவளது அந்தஸ்தின் பெருமை இடம் கொடுக்கவில்லை. எனவே, சகுனி போல சதா அவள் வீட்டு விஷயத்தில் வம்பு பேசும் புண்ணியவதியை அவள் அறவே வெறுத்தாள்.

எக்கச்சக்கமான இந்த நிலையிலிருந்து அவள் தப்பிக்க அது சமயம் அங்கே வேகமாக வந்த புவனு உதவினுள். "அம்மா, உன்னை அப்பா கூப்பிடருங்க" என்று கூவியபடியே உள்ளே வந்த அவளை, "வா, வா. புவனு. காப்பி எல்லாம் சாப்பிட்டியா?" என்று வெகு அன்பாக விசாரித்தாள் நாகரத்தினம். சரியான சமயத்தில் நாகரத்தினத்தை மட்டம் தட்டக் காத்துக்கொண்டிருந்த புண்ணியவதி, அந்த அரியவாய்ப்பை நழுவச் செய்த தன்மகளை எரித்து விடாத குறையாகப் பார்த்தாள்.

"என்ன அவசரமாம். இத்தனை நாள் கழிச்சு அக்கா வீட்டவங்களைப் பாத்துட்டுப் போகலாம்னு வந்தா......பங்கஜத்தையும் பார்த்து நாளாச்சல்ல" என்று கூறியபடி எழுந்தாள் புண்ணியவதி.

"பங்கஜத்துக்கு உடம்பு அதிகமாயிருக்குது, இந்த சமயம் யாரும் தொந்தரவு செய்யக்கூடாதுன்னு டாக்டர் சொல்ருரு" என்று சற்றுக் கடுமையாகக் கூறினுள் நாகரத்தினம். தான் பங்கஜத்தைப் பார்ப்பதை அவள் அனுமதிக்கவில்லை என்பதை மறைமுகமாகக் கூறுவதை யறிந்த புண்ணியவதிக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "உனக்கு அவ்வளவு கர்வமா? இருக்கட்டும்" என்று கருவியபடி "ஐயோ பாவம்! எப்படியாவது

அது சுகமா இருக்கட்டும்" என்று கூறி விடை பெற்றுச் சென்ருள்.

'அப்பாடா' என்று பெருமூச்சுவிட்ட நாகரத்தினம் அருகில் புவனு வந்து நிற்பதைச் சட்டென நினைவு கூர்ந்தவளாய் "பாலாம்பாள் அம்மா முன்னே அறிவிக்காம புறப்பட்டு வந்துட்டாங்களாம். உன் கூட வந்ததா சொன்னுங்க. எப்படிப் படிக்கிறே. உக்காரு. சௌக்யமா ?" என்று கூறி பலவாறு உபசரித்தாள். என்னதான் புண்ணியவதியை அவள் விஷம்போல் வெறுத்தாலும், புவனுவை அவளால் பகைத்துக் கொள்ள இயலவில்லை. ஏனெனில் பாஸ்கரனுக்கும், புவனுவுக்குமிடையே யாராலும் அழிக்க முடியாத அன்பு வளர்ந்து வருகிறது என்பதை அவள் ஊகித்திருந்தாள். பாஸ்கரன் பெயரைக் கேட்டாலே புவனுவின் முகம் சிவப்பதிலிருந்தும், 'புவனு' 'புவனு' என அவளைப் பற்றியே உயர்வாக மதிக்கும் தம்பியின் பேச்சிலிருந்தும், அவர்கள் இருவர் இடையேயும் உள்ள அன்புப் பிணைப்பின் இறுக்கத்தை உணர முடிந்தது. ஆரம்பத்தில் இந்த விஷயம் தெரிந்திருந்தால் அதை வேருடன் களைய அவள் முற்பட்டிருப்பாள். ஆனல் கப்பும், கிளையுமாகி கனியும் நேரம் வந்த பின்பு என்ன செய்ய முடியும் ? அப்படிச் செய்யத்தான் பாஸ்கரன் விடுவானு ? சிவஞானம் போல அல்ல பாஸ்கரன். சிவஞானம் அவளது தத்துப் புத்திரன். பாஸ்கரன் அவளால் ஆதரவு அளிக்கப்பட்டவன். சிவஞானத்திற்குக் குழந்தை பிறக்காது இருந்தால் ஒரு வேளை அந்தப் புண்ணியவதியின் குடும்பத்துக்கல்லவா அவனது சொத்துப் போய்ச் சேரும் ? ஏனெனில் குமாரசாமியின் உறவினர் என சொத்துரிமை கொண்டாடத் தகுந்தவர் தற்போது உயிருடன் இல்லை என்பதை அறிவாள். பாஸ்கரனே ஒரு நாள் கட்டாயம் புவனுவை மணந்து கொள்வான். ஆகவே அவளுக்கும், சிவஞானத்திற்கும் பின் பாஸ்கரனே உரியவன். ஆனல்......இத்தகைய

பயத்தினுல்தான் அவள் சிவஞானத்திற்கு மறு மணம் செய்வித்தாள்.

"சட்ட விரோதமான காரியம்" என்று பாஸ்கரன் தடை செய்ததையும் லட்சியம் செய்யாமல் அவள் செய்துவிட்ட திருமணக் காரியத்திற்காக அவன் வந்து இடப்போகும் கூச்சலை நினைத்து கொஞ்சம் உள்ளூரக் கிலி இருக்கத்தான் செய்தது. புவனுவிடம் வேறு முகம் கொடுத்துப் பேசாது இருந்தால் அதையும் ஒரு காரணமாக வைத்துக்கொண்டு அவன் வம்பு செய்யாது இருக்க வேண்டுமே என்று பயந்தாள் அவள். ஆகவே புவனுவை அருகே அமர வைத்துக்கொண்டு குழைவான குரலில் உலக விவகாரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள்.

அவளது மனப் போராட்டத்தை அறியாத புவனு அவளிடம் சிறிது சங்கோஜத்துடன் உரையாடிக் கொண்டிருந்தாள். அது சமயம் வாயிலில் கிர்ரென கார் வந்து நிற்பதைத் கண்ட நாகரத்தினம், 'தம்பி வந்துடுச்சு' என்று கூவினுள். புவனுவின் ஹிருதயம் வேகமாக அடித்துக் கொண்டது. காரினின்றும் கம்பீரமாக இறங்கி உள்ளே வந்த பாஸ்கரன், "என்ன அக்கா? நம்ப முனியனை எங்கே காணும்?" என்று கேட்டான். "இதோ நான் அனுப்பி வைக்கிறேன். காபி பலகாரத் துக்கும் ஏற்பாடு பண்ணச் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று கூறியபடி உள்ளே திரும்பினுள் நாகரத்தினம்.

முகம் சிவக்க அங்கே நின்று கொண்டிருந்த புவனுவைக் கண்டதும், "அடேடே! புவனுவா? யாரோன்னு நினைத்துவிட்டேன், நீ எப்போது வந்தாய்?" என்று உற்சாகமாகக் கேட்டான்.

"இன்று காலை ரயிலில்தான் வந்தேன்" என்று மெல்லக் கூறினுள் புவனு.

"ஏன் நீ வருவதை என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லி இருக்கக் கூடாது. இந்த முப்பது மைல் தூரத்

தையும் முப்பது கஜமாக நினைத்துப் பறக்கும் காரிலேயே உன்னை அழைத்து வந்திருக்க மாட்டேனா ?" என்றான் சிறிது மனத் தாங்கலாக.

"கோபித்துக் கொள்ளாதீர்கள். உங்களுக்கென்னத்திற்கு அந்த சிரமம் இப்போதே என்று நான் சொல்லாமல் வந்து விட்டேன்" என்று அர்த்தம் தொனிக்கப் பேசிய புவனா கன்னம் குழியச் சிரித்தாள்.

"அப்படியா ? இருக்கட்டும்." என்று பரிகாசமாகக் கூறிய பாஸ்கரன் அவளது சிரிப்பின் கவர்ச்சியால் ஒரு கணம் மெய்மறந்தான்.

"நான் தனியாக வரவில்லை. என்னுடன் வாத்தியாரம்மா பாலாம்பாளும் வந்தார்கள்" என்று கூறினாள் புவனா.

"யார் அது பாலாம்பாள் ?" என்று கேட்டபடி அருகே போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து கால் பூட்ஸுகளைக் கழற்றுவதில் முனைந்தான்.

"உங்கள் வீட்டுக்குத்தான் யாரோ ஒரு சொந்தக்காரப் பெண்ணுக்குப் பாடம் சொல்லித் தருவதற்காக வந்திருக்கிறார்கள். என்னிடம் அந்தம்மாவும் அப்படித்தான் சொன்னார்கள்" என்று புவனா கூறி முடித்தவுடன் "எங்கள் வீட்டுக்கா? என்ன சொல்கிறாய் புவனா?" என்று சட்டென நிமிர்ந்த பாஸ்கரன் வியப்புடன் கேட்டான்.

"ஆமாம். உங்கள் வீட்டுக்குத்தான். ஒரு வேளை மாடிப் பக்கம் இருக்கிறார்களோ என்னவோ?" என்றாள் உறுதியான குரலில்.

"சரி ! வா போய்ப் பார்க்கலாம்" என அவசரமாக அவளுடன் மாடியேறினான் பாஸ்கரன். மாடி ஹாலில் தென்பட்ட ஷண்பகத்தைக் கண்டதும் திகைப்பினால் நின்றுவிட்டான். எதிர்பாராத விதமாக அவனைச் சந்திக்க நேர்ந்ததும் ஷண்பகம் தன் இரு கரங்களாலும் முகத்தை

சட்டென மூடிக் கொண்டாள். பெரும் விம்மல்கள் அவளது தேகத்தைக் குலுக்கின. கீழே பாஸ்கரனையும் புவனுவையும் காணாத நாகரத்தினம் என்ன விபரீதமோ என்று பதை பதைத்து மாடிக்குத் தாவி ஓடிவந்தாள். காரணம் என்னவென அறியாத மற்ற இரு பெண்களும் திகைப்புடன் ஷண்பகத்தையே பார்த்துப் பிரமித்து நின்றதைக் கண்டாள்.

## 6

காலையில் சமையலறையில் பொங்கிப் போட்டு வீட்டுப் புருஷர்களை ஆபீஸ் வேலைக்கு அனுப்பிய பிறகு புண்ணியவதி அம்மாளைப் போன்ற ஒரு சில பெண் மணிகள் தங்கள் பொழுதை வீணுக்காமல் ஊர் விவகாரங்களை அலசுவது வழக்கம். அந்த வீடு கட்டிய மகானும் இந்த மாதிரிப் பெண்மணிகளின் ரகத்தைச் சேர்ந்தவனுயிருக்க வேண்டும். ஏனெனில் வீட்டுக்கு வீடு விளங்கிய வெளித் திண்ணைகள் இத்தகைய வட்ட மேஜை மகாநாட்டின் பிறப்பிடமாய் விளங்கின.

சாப்பிட்டு கழுவிய கையைக் கூட சரியாகத் துடைக்காமல் பரக்கப் பரக்க, சமையலறை ஜன்ன லருகே வந்து, ‘ தனம்! ஏ தனம்’ என்று உரக்கக் கூவினுள் புண்ணியவதி. ராஜேந்திரன் இத்தனை நாட்களாகப் படாதபாடு பட்டுக் கண்டறிந்த அந்த ரகசியத்தை தன் தோழியிடம் சொல்லாவிட்டால் அவள் மண்டை வெடித்து விடும்போல் இருந்தது. அவளது குரலின் பரபரப்பை உணர்ந்து தானே என்னவோ தனபாக்கியமும் “ இதோ வந்திட்டேன் ”என்று பதில் கொடுத்தாள். தனபாக்கியம் பெரிய குடும்பியல்லவா தலால் அரை நொடியில் வீட்டைப் பூட்டிக்கொண்டு புண்ணியவதியின் வீட்டுத் தெருத் திண்ணையில் பிரசன்னமானுள். சிறிது நேரத்தில் மற்றும் சிலர் அங்கு

வந்து சேர்ந்தனர். இவ்வாறாக வம்பர் சபை ஆரம்பமாயிற்று.

"ஒவ்வொருத்தர் மாதிரி நமக்கு யார் வீட்டிலேயிருந்து கார் வருது. எவங்க போறாங்கன்னு அக்கப்போர் பார்க்க பிடிக்கிறதில்லே. என்னவோ நம்ப வேலையைப் பார்க்கவே பொழுதுசரியா போவுது" என்று அலுப்புடன் கூறினாள் புண்ணியவதி.

"ஆமா ஆமா. அதுவும் உங்களைப் போய் வீணாக வம்புக்காரின்னு எல்லாரும் சொல்றாங்களே. அது அநியாயம்" என்று ஒத்துப் பாடினாள் தனபாக்கியம்.

புண்ணியவதி தன் வாயையே பார்த்துக்கொண்டிருந்த மற்ற பெண்களை ஒரு முறை கம்பீரமாகப் பார்த்துவிட்டு தொண்டையைக் கனைத்துக்கொண்டாள். இதற்குள் ஒரு கட்டு வெற்றிலையும் பாக்கும், சுண்ணாம்பும் அடங்கிய தட்டை தனபாக்கியம் சபை நடுவில் வைக்கவே, பேச்சில் களை கட்ட ஆரம்பித்தது.

"என்ன புண்ணியவதி! நான்கூட சதா வீட்டிலே சொல்றது உண்டு. உன்னைப் போல 'யார் எக்கேடு கெட்டா என்ன'ன்னு வீட்டுக்குள்ளே அடக்கமா இருக்கிறவங்களைப் பார்த்ததே இல்லேன்னு. அப்படியிருந்தாலும் எப்படியோ உனக்கு ஊர் விஷயமெல்லாம் தெரிஞ்சுடுதே. நீ என்னிக்குமே ரொம்ப ஊகசாலி!" என்று புகழ்வது போல் இகழ்ந்தாள் கோடிவீட்டுக் குப்பம்மாள்.

குப்பம்மாளின் வஞ்சனைப் புகழ்ச்சியை அறியாத புண்ணியவதியின் தேகம் பெருமையினால் இன்னும் சற்று விரிந்தது. வெற்றிலைகளை உருவி உருவி சுண்ணாம்பு தடவிச் சுருட்டி வாய்க்குள் திணித்துக் கொண்டாள். ஒரு பிடி பாக்கையும் அனாயாசமாகப் போட்டுக்கொண்டு ஆடு தழை தின்பது போல மென்றுகொண்டே, "எல்லாம் நம்ப நாகரத்தினம் சமாசாரம் தான்' என்றாள்.

நாகரத்தினத்தின் பணத்திமிரும், பிடிவாதகுணமும் மற்ற பெண்களுக்குப் பிடிக்காத விஷயமாதலால், யாவரும் அவள் அருகே சற்று நெருங்கி உட்கார்ந்தனர்.

" ஒரு மாசத்துக்கு முன்னே ஒரு பொண்ணு அவங்க வீட்டுக்கு வந்திச்சே அதைப் பத்தி ஒரு முக்கிய மான தகவல் கிடச்சிச்சு " என்ருள் புண்ணியவதி தணிவான குரலில்.

" யாரு ? அந்த அனுதைப் பொண்ணு ? அதைத் தான் நம்பகிட்ட காட்டாம, பேசக் கூட விடாம மூடி மூடி வச்சுக்கிருளே. இப்ப அந்தப் பொண்ணு அங்கே இல்லியா ?" என்ருள் ஏகாம்பரத்தின் மனைவி.

" அங்கேதான் இருக்குது. ஆனுலும் மத்தவங்க கண்ணிலே அதிகமா படக்கூடாதுன்னு, ஜெயில் கைதி மாதிரி வச்சிருக்கா. அதோடமட்டுமா, அதுக்கு படிப்பு சொல்லிக்கொடுக்க ஒரு வாத்தியாரம்மா வேறே. அவளையும் யாரோடயும் பேசக்கூடாதுன்னு தடை பண்ணியிருக்கிருப் போலிருக்குது. வீட்டிலே வேலைக் காரங்களுக்கே ஒண்ணும் தெரியாத மூடு மந்திரமா பண்ணிட்டா " என்ருள் பீடிகையுடன் புண்ணியவதி.

" அப்படி என்னடியம்மா அது சிதம்பர ரகசியம் " என்று அதிசயித்தாள் அமிர்தம்.

" முந்தா நாள் அந்த வாத்தியாரம்மா இப்படி உலாவப்போனு. நான் கொஞ்சம் சிரிச்சுப் பேசப் பாத்தேன். அவள் பதிலுக்கு சிரிச்சுப்பிட்டு அப்படியே நழுவிட்டா. எனக்கு மூஞ்சியிலடிச்ச மாதிரி இருந் துச்சு. சே ! சுத்த மரியாதை இல்லாத ஜன்மம் " என்று கடிந்து கொண்டாள் தனபாக்கியம்.

பேச்சு ஸ்வாரஸ்யத்தில் ஈடுபட்ட முத்தம்மாள் தான் வழக்கமாக அரைக்கும் வெற்றிலே பாக்கையும் மறந்து " மேலே சொல்லுங்க. அதென்னுது அப்படி மூடி வைக்க வேண்டிய விஷயம் " என்று கேட்டாள் பரபரப்பாக.

"கர்ம வியாதி பிடிச்சவன், எதுக்கு தன் தேகத்தை மூடிவச்சுக்கிறுன். அது மாதிரி குத்தம் பண்றவங்க தங்க குத்தத்தை மறைக்கப் பாக்கருங்க. அதுதான் ரகசியம்'' என்று அடித்துப்பேசின புண்ணிய வதியை யாவரும் வியப்புடன் நோக்கினர்.

"நேத்துத்தான் விஷயம் புரிஞ்சுது. இந்த ஷண்பகம் இருக்காளே. இவளை சிவஞானத்துக்கு இரண்டாம் தாரமா கட்டிப் போட்டிருக்காங்க'' என்று உற்சாகமாகக் கூறியதை இடைமறித்த குப்பம்மாள், "அதனுலே என்னவாம். புள்ளை பிறக்கல்லேன்னு இரண்டாவது கட்டியிருப்பாங்க. மூத்த தாரம்தான் இப்பவோ நாளையோன்னு இழுத்துக்கிட்டு கிடக் கிருளே?'' என்ருள் அலட்சியமாக.

"அதுதான் இல்லேன்னேன். நம்ப தம்பி ராசா இருக்கானே அவன்தான் நேத்து எங்கிட்ட சொன்ஞன். பொண்டாட்டி உசிரோட இருக்கிறப்போ வேறே கல்யாணம் பண்ணக்கூடாதாம். அப்படி பண்ணிகிட்டா சட்டத்துக்கு விரோதம்னு ஜெயில்லே போடுவாங் களாம்'' என்று திட்டமாய் விளக்கிஞள் புண்ணியவதி.

அதைக் கேட்டு பிரமிப்படைந்த யாவரும், "அடி ஆத்தே! இதுக்குத்தாஞ இப்படி மூடுமந்திரம்?'' என்று மூக்கின் மீது விரலை வைத்தனர்.

"இப்ப நாம்ப நினைச்சா நாகரத்தினத்தின் வாலை நல்லா நறுக்கிடலாம். நம்மையெல்லாம் எப்படி தூக்கி எறிஞ்சு பேசுவா?'' என்று சவால் விடுத்த புண்ணிய வதியை "ஆமாம். ஆமாம்'' என்று ஏகோபித்து யாவரும் ஆமோதித்தனர்.

பூனைக்கு யார் மணிகட்டுவது என்று நடுங்கிய எலிகளைப் போல, 'சட்ட விரோதமான காரியம்' என்று போலீஸாருக்கு சொல்வது யார் என்ற பிரச்னை யாவர் மனதிலும் எழுந்தது. குமாரசாமி வீட்டவருக்கு ஆபத்து என்ருலும், அவர்கள் அனைவர் வீட்டுச் சோற்றுப்

பானைக்கும் ஆபத்து வந்துவிடும் என்று அவர்கள் அறிவார்கள்.

நாகரத்தினம் கர்வி என்றாலும், திடீரென நல்ல மனது வந்தால் தாராளமாக உதவி செய்வாள் என் பதையும் அவர்கள் உணர்ந்தவர்கள். அவளைப் பகைத் துக்கொள்வதோ தீமை செய்வதோ அவர்களுக்கு எளிதான செயலல்ல. எனவே அவளைப்பற்றி மறை வாக வம்பு பேசுவதிலேயே திருப்தியடைந்து கொண் டார்கள். ஆனால், தாங்கள் கேட்ட விஷயத்தை யாரிடம் சொல்வோம் என்று துடிதுடித்தபடியே அவர்கள் யாவரும் சட்டெனக் கலைந்துவிட்டனர்.

எதிர்பாராத விதமாக கூட்டம் சட்டென முடிந்து விடவே, புண்ணியவதியும் எழுந்து உள்ளே செல்லத் திரும்பினாள். அதுசமயம் குமாரசாமி வீட்டின் திறந்து கிடந்த கேட்டு வழியே பளபளப்பான பெரிய கார் வெளியே பாய்ந்து செல்வதைக் கண்டாள். அதில் அமர்ந்திருந்தவர்களையும் நொடிப் பொழுதில் கூர்ந்து நோக்க அவள் தவறவில்லை. அந்த வேளையில் நாகரத்தி னத்திற்கும், ஷண்பகத்திற்கும் வெளியே என்ன வேலை இருக்கும் என யோசித்தபடி உள்ளே சென்றாள்.

வழுவழுப்பான தார்ரோடிலே சுகமாக மிதந்து சென்ற அந்தக் காரின் பின்ஸீட்டில் அமர்ந்திருந்த ஷண்பகம் அன்றுதான் உண்மையாகத் தென்றலின் இனிமையை அனுபவித்தாள். இருண்ட சிறைக்குள் ளேயே அடைபட்டுக்கிடந்த கைதியை வெளியுலகிற்குக் கொண்டு வந்தது போன்ற சந்தோஷம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. பாட்டி பொன்னம்மாளுக்கு கடந்த சில தினங்களாக கடும் ஜுரம் ஏற்பட்டு கஷ்டப்பட்ட தாகவும் அவளைக்கண்ட பிரயாணி ஒருவர் பரிதாபப் பட்டு, நகரத்து ஆஸ்பத்திரி ஒன்றில் கொண்டு சேர்த்து விட்டுப் போனதாகவும் தகவல் கிடைத்தது. அவளை எடுத்து வளர்த்த பாட்டியல்லவா? ஷண்பகம் பதை

பதைத்துப் போனுள். வேறு வழியின்றி நாகரத்தினமும் கிளம்ப வேண்டியதாயிற்று.

ஷண்பகத்திற்கு பாட்டியின் உடல் நிலையைப் பற்றிய கவலை ஒருபக்கம் இருந்தாலும், முதன் முதலாக பல நாட்களுக்குப் பின் அவள் வெளிக்காற்றை அனுபவிக்க நேர்ந்ததுபற்றி உவகை பொங்கியது. அந்த சில நிமிட அமைதியிலே மறுபடியும் சிந்தனை அலைமோத ஆரம்பித்து விட்டது. அருகிலே அமர்ந்திருந்த நாகரத்தினமும் மௌனம் சாதிக்கவே, ஷண்பகம் வெளியே தெரிந்த காட்சிகளைப் பார்ப்பதை விட்டு சிந்தனை வசமானுள்.

படிக்கப் படிக்க வரிசையாகத் தோன்றும் சம்பவங்கள் கொண்ட துப்பறியும் நாவலைப் போலல்லவா அவளது வாழ்க்கை அத்தியாயங்கள் அமைந்துவிட்டன! பாஸ்கரனை முதன் முதல் அவளது கிராமத்தில் கண்ட போது அவளது உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சி எதுவாக இருக்கலாம் என அவளுக்கே தெரியாது. ஆனுல், சிவஞானத்தின் மனைவி ஸ்தானத்திற்கு என்றைக்கு வந்தாளோ அன்றே பாஸ்கரனை அவள் மறந்துவிட முயன்ருள். இளமை என்றும் இளமையைத்தான் விரும்பும் என்ருலும், ஓர் உயர்குலப் பத்தினி என்ற பாரத நாட்டுப் பண்பு காரணமாகப் பாஸ்கரனை மறந்து விட்டாள். முதன் முதலில் அவனது நினைவு ஏற்படும் போது உண்டான சஞ்சலம் நாளா வட்டத்தில் மறைய ஆரம்பித்தது. பாஸ்கரனும் அந்த வீட்டிலேயே இல்லாமல் இருந்ததும் அவளுக்குச் சௌகரியமாக இருந்தது. ஆனுல், அன்று எதிர்பாராதவிதமாக அவனை சந்திக்க நேரிட்டபோது அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்ற உணர்ச்சி பிறகு அவமானமாக மாறி அழுகையைத் தாண்டிவிட்டது.

திடுக்கிட்ட பாஸ்கரனது முகம் ஜிவ்வெனக் கோபத்தால் சிவந்து ஜ்வலிப்பதைக் கண்ட ஷண்பகம் அந்தச் சந்திப்பின் துன்பத்தைத் தாங்க முடியாதவளாய் தன்

கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு கதறிவிட்டாள். நிலைமை எக்கச்சக்கமானது என உணர்ந்த பாலாம்பாள் அம்மாள் வெளியே நாசூக்காய் நழுவினுள். அவளைத் தொடர்ந்து செல்ல நினைத்த புவனுவை, "நில்! புவனு" என உரிமையுடன் பாஸ்கரன் அதட்டியதைக் கேட்ட ஷண்பகம், தன் விம்மல்களை அடக்க முயன்ருள். மேலே என்ன நடக்குமோ என்ற கவலையும் ஆவலும் அவளைக் குழப்பின.

"இதெல்லாம் என்ன வேலை அக்கா? எனக்குத் தெரியாமல் என்ன காரியம் செஞ்சிருக்கீங்க?" என்று கர்ஜித்தான்.

"தம்பி! உனக்கு இது விஷயத்திலே தலையிட உரிமை எதுவும் கிடையாதுன்னு நினைவிருக்கட்டும். எதுக்காக நீ இப்படிக் கூச்சல் போட்டு ஊரைக் கூட்ட வேண்டும்" என்ருள் தைரியத்தை வருவித்துக் கொண்ட தமக்கை.

ஷண்பகம் மெதுவாக மூடிய கைவிரல்களின் இடுக்கு வழியாக எதிரே நின்ற புவனுவைப் பார்த்தாள். வேடர் கையில் அகப்பட்ட மானைப்போல பரிதாபமாக விழித்த அவள் தன் தோளின் முன்புறமாகப் போட்டிருந்த ஒரு பக்கத்துப் பின்னலை கைகளால் விஷமம் செய்துகொண்டிருந்தாள். நடுத்தர உயரமும், மாநிறமும் கவர்ச்சி மிகுந்த தோற்றமும் கொண்டிருந்த அந்தப் பெண் பாஸ்கரனுக்கு என்ன உறவு?

"நான் படித்துப் படித்துச் சொன்னேன். உங்களுக்குத்தான் இப்படிப் புத்தி போயிற்று என்ருல் அண்ணனுக்குக் கூடவா மூளை மழுங்கிவிட்டது? எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. உங்களை..." என்று பற்களைக் கடித்தான் பாஸ்கரன்.

"ஆமா தம்பி. உன்னை எடுத்து வளர்த்ததுக்கு நீ இதுவும் சொல்வே, இன்னமும் சொல்வே. எல்லாம் என் தலைவிதி. என் சுகத்தைக்கூடக் கவனிக்காமல்

உங்களுக்காகப் பாடுபட்டேனே?" என்று திடீரென நாகரத்தினம் புலம்பினாள்.

"அதற்காக நீங்கள் தப்பு வழிக்குப் போகச் சொன்னால் கண்ணை மூடிக்கொண்டு சிவஞானம் மாதிரி என்னையும் தலையை ஆட்டச் சொல்லுகிறீர்களா? அண்ணனுக்கு உங்கள் பணம் வேண்டும். எனக்கு அப்படியில்லை அக்கா. நன்றாக நீங்கள் நெஞ்சைத் தொட்டு யோசனை செய்து பார்த்தீர்களா? இந்தப் பெண்ணின் வாழ்க்கையை இப்படிப் பாழாக்கி விட்டீர்களே" என்றான் வெறுப்பாக.

கண்களைத் துடைத்துக் கொண்ட நாகரத்தினம் சட்டெனத் தன் கோபத்தை யார்மீது காட்டுவது எனத் தோன்றாது திகைத்த சமயம் அழுதுகொண்டிருந்த ஷண்பகம் கண்ணில் பட்டாள். "சரிதாண்டி! எதுக் காக அழுது தொலைக்கிறே. போ! போ! நீ வந்த அன்னியிலே இருந்து இந்த வீடு ரகளைப் பட்டுக்கிட்டே கிடக்குது" என்று எரிந்து விழுந்தாள். அந்தச் சுடு சொல்லின் வேதனை தாங்காத ஷண்பகம் அழுதபடி தன்னறைக்குள் செல்லத் திரும்பினாள்.

"ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்றாலும்! நீங்கள் செய்த தப்புக்காக அந்தப் பெண்ணை ஏன் கோபிக்க வேண்டும்?" என்று தமக்கையிடம் சுடச்சுடக் கூறிய அவன் ஷண்பகம் பக்கம் திரும்பி, "அண்ணி! நீங்கள் இங்கேயே இருங்கள். நாங்கள் கீழே போகிறோம். என் மனக் கொதிப்பு தாங்காமல் ஏதேதோ பேசிவிட்டேன். மன் னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு வினய பாவத்துடன் புவனா பின்தொடர வெளியே சென்றான். அவன் 'அண்ணி' என்று கூப்பிட்டது ஷண்பகத்தின் உள்ளத்தை வேதனை செய்தது. யாரையும் காணப் பிடிக்காதவளைப்போல சட்டெனத் தன் அறைக்குள் ஓடித் தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு மனம் கொண்ட மட்டும் அழுது தீர்த்தாள். அந்தச்

சந்தர்ப்பத்திற்குப் பிறகு பாஸ்கரன் முன்னுல் வருவதற்கே அவள் மனம் கூசினுள். அதற்காக நேரம் முழுவதையும் பாடம் கற்பதிலேயே செலவிட்டாள்.

பாலாம்பாள் அம்மாளின் புன்னகை ததும்பிய வதனம் மட்டுமல்ல; அவருடைய இனிய பேச்சும், ஆழ்ந்த அறிவும் ஷண்பகத்தைப் பிரமிக்க வைத்தன. எங்கும் பரவி நின்ற இந்த உலகத்தில் கற்றுத் தெரிந்து அனுபவிக்க வேண்டிய விஷயங்கள் எத்தனையோ என்று பிரமித்தாள். உலகத்தில் இத்தனை அதிசயங்களா? பண்பாட்டில் இத்தனை மாறுபாடுகளா? மனிதரிடத்தில் இத்தனை குண வேற்றுமைகளா? என்றெல்லாம் அவள் திகைத்துத் தடுமாறுவாள். இந்தப் பரந்த உலகில் இறைவனது படைப்பிலே விளங்கிய ஜீவாத்மாக்களின் வாழ்க்கை ரகசியம் அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக விளங்க ஆரம்பித்தது. அவளது எல்லையற்ற ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கண்ட பாலாம்பாளும் சந்தோஷத்தோடு அவளது அறிவுக் கண்ணைத் திறந்துவிட்டார். கல்வியறிவிலே தன் நேரத்தையெல்லாம் செலவிடுவதில் அவளுக்கு மன அமைதியுடன் கூட, மற்றவரது தொல்லைகளிலிருந்தும் விடுதலை கிடைத்தது.

குற்றம் புரியும் மனிதன் தான் செய்வது குற்றமே அல்ல என்றுதான் எண்ணுகிருன். பிறர் அவனது தவறுகளைச் சுட்டிக் காட்டினுல் ஆத்திரப்படுவதும் இயற்கையே. நாகரத்தினமும் ஷண்பகம் விஷயத்தில் மற்றவர்கள் ஆராயப் புகுவதை வெறுத்தாள். வீட்டு விஷயங்களில் 'இது யார்?' என்று அனுவசியமாகத் தலையிடும் வேலைக்காரர்களை உடனடியாக மாற்றினுள். பயங்கர அரசியல்வாதியைக்கூட அத்தனை கட்டுப்பாடுகளுடன் சிறையில் வைத்திருப்பார்களோ என்னவோ; ஷண்பகத்தை அவள் சிறகொடிந்த பறவையாக்கி விட்டது உண்மை. அப்படி அவள் பட்ட கஷ்டங்களெல்லாம் வீணுகி விட்டதும் அதைவிட உண்மை.

அவள் மறைத்த விஷயம், கிணற்றுக்குள் போட்ட கல் போல் குமரப்பா நகர் வாசிகள் ஒவ்வொருவர் மனதிலும் ரகசியமாக இருந்தது என்பதையும், இந்தத் தம்பட்ட மடிக்கும் கைங்கரியம் புண்ணியவதியால் செய்யப் பட்டது என்பதையும் யாரோ சொல்லத் தெரிந்து கொண்டிருந்தாள். ஒரு பக்கம் ஊராரின் வேதனை, மற்றொரு பக்கம் வீட்டின் தொல்லை. இரண்டிற்கு மிடையே தத்தளித்த அவளது கோபமெல்லாம் பேதை ஷண்பகத்தின்மீது திரும்பிற்று. "மகராசி! எந்த வேளையில் காலடி வச்சாளோ!" என்று தான் செய்த பாவத்திற்கு பழியை ஷண்பகத்தின்மீது சுமத்தினாள்.

கொஞ்ச நாட்களாகவே கடுகடுவென்று முகத்தை வைத்துக்கொண்டு, எடுத்ததற்கெல்லாம் ஷண்பகத்தைக் குற்றம் கண்டுபிடித்துத் திட்டுவது நாகரத்தினத்திற்கு வழக்கமாகிவிட்டிருந்தது. அந்த வீட்டில் அனாதை ஷண்பகத்திற்காக யார் இருக்கிறார்கள்? சிவஞான மாவது ஷண்பகத்திடம் சிறிது அன்பு காட்டியிருந் திருந்தால் அவள் ஆறுதலடைந்திருப்பாள். ஆனால்; சிவஞானம்......!

சிவஞானத்தைப் பற்றி எண்ணும்பொழுது அவளது மெய் நடுங்கியது. இளமையைத் தாண்டி விட்ட பின்பு இழந்துபோன உற்சாகத்தை மீண்டும் பெற முயல்வது போலத் தாம் பாழாக்கிவிட்டிருந்த இல்லற வாழ்க்கையை அவர் இரண்டாவதாகத் துவங்கி யிருக்கிறார். இல்லற வாழ்வில் ஆண், பெண் இருவரும் மனம் ஒன்றுபட்டு இருந்தால்தான் ஆனந்தம் பிறக்கும். சிவஞானமோ, தமக்கென ஒருவிதக் கொள்கையும் இல்லாத மனிதர். 'வாழ்வது என்பது இன்பத்தை ரசிப்ப தற்கே. பணத்தைச் செலவிடுவதற்கே' என்ற பிடிவாத மும், அதற்கேற்ற முன் கோபமும் அவரிடம் பொருந்தி இருந்தது. அக்காவின் முன் அவர் ஒரு கோழை. அக்கா வாக்கு அவருக்கு வேத வாக்குப் போன்று எண்ணி நடப்பதும், ஷண்பகத்தை ஏதோ கூலிக்குவேலை

செய்யும் பெண்போன்ற அலட்சியத்துடன் நடத்துவதும் அவளுக்கு அருவருப்பையே அளித்தன. வயதானவர் களுக்கு இளம் மனைவி வாய்த்திருந்தால் மிக்க ஆசை யாக இருப்பார்கள் என்று அவள் கேள்விப்பட்டதுண்டு. சிவஞானம் கடமைக்காக மனைவியுடன் வாழ்ந்தார். தவறு! கடமைக்காகவும், அவளை ஏமாற்றவும் தாலி கட்டினர். சுருங்கச் சொன்னால் சிவஞானம் குணமற்ற மனிதர். உருவமற்ற நிழலைத்தான் அவருக்கு உவமை யாகக் கூறலாம். வாழ்வில் துன்பத்தைக் கண்டு பச்சாதாபமடையாத ஒரு மனிதர். இதற்கெல்லாம் காரணம் அந்த ராஜேந்திரன்தான்.

ராஜேந்திரனை அகஸ்மாத்தாக ஒரே ஒரு நாள் காலை மாடிப்படி யருகே சந்திக்க நேர்ந்தது ஷண்பகத் திற்கு. "மன்னிக்கவேண்டும். மிஸ்டர் சிவஞானம் இருக்காங்களா?" என்று கேட்ட அவனது விழிகளில் தேங்கிய விஷமக் குறியும், முகத்திலே தவழ்ந்த வஞ்சகப் புன்னகையும் அவளது உள்ளத்தைக் குலுக்கிவிட்டது. "உங்களைத் தானம்மா கேட்கிறேன். சிவஞானம் தூங்கி எழுந்துவிட்டாங்களா?" என்று கேட்டபடி அருகில் வந்த அவன்மீதிருந்த அலாதியான மணம் மூக்கைத் துளைத்தது. "அறையில் தூங்கறுர்." என்று அச்சத்துடன் குழறியபடி மாடிப்படிகளை ஒரே தாவலில் கடந்து கீழே இறங்கி ஓடினுள். புள்ளி மானைப் போலத் துள்ளி ஓடும் அவளது அழகை ஒரு கணம் ரசித்துக்கொண்டு அவன் நின்றுவிட்டு, ஆங்கிலப் பாட்டொன்றைச் சீழ்க்கையடித்த வண்ணம் மேலே சென்றான்.

அது சமயம் அங்கு வந்த நாகரத்தினம் அவன் மாடி யறைக்குச் செல்வதைக் கண்டு பாய்ந்தோடி உள்ளே சென்றாள். பின்கட்டிலிருந்த ஸ்நான அறைக்குச் சென்று கொண்டிருந்த ஷண்பகத்தை பிடித்து நிறுத்தி, "அந்தப் பயல் ராஜேந்திரன் எங்கேயடி வந்தான்? அவனை யார் மேலே விட்டது? உனக்கு

எத்தனைவாட்டி சொல்றது? கண்ட தடிப்பசங்களை எல்லாம் நம்ம்வீட்டிற்குள் அதிகாரமா வரவிடக் கூடாதுன்னு? உனக்கு மூளை இருக்குதா? இருந்தா அந்த வம்புக்கார அயோக்கியனை உங்க அறையிலே விடுவாயா? இனிமே நம்ப விஷயம் அம்பலமாக வேண்டியதுதான்!'' என்று கடுமையுடன் சொல்லம் புகளை வீசினாள்.

இத்தகைய அறிமுகத்துடன் வீட்டுக்குள் வந்த ராஜேந்திரனை நாகரத்தினத்தைக் காட்டிலும் பன்மடங்கு ஷண்பகம் வெறுத்தாள் என்றால் மிகை இல்லை. நாகரத்தினம் அவனைப்பற்றிப் பயப்பட்டதும் உண்மையாகி விட்டது. ஷண்பத்தின் உறவை அவன் உளவறிந்து விட்டான்! நாகரத்தினம் சிவஞானத்தை இந்த விஷயத்தில் கண்டிக்க வேண்டியதிருக்க, மௌனம் சாதித்து விட்டாள். தன் உடன் பிறந்தவர்கள் இருவர் என்றாலும் சிவஞானத்தின் மீது அலாதியான பிரியம் அவளுக்கு உண்டு. இந்த கண்மூடித்தனமான வாஞ்சை காரணமாக சிவஞானத்திடம் கடுத்துக்கொள்ள மனம் வருவதில்லை அவளுக்கு. மேலும் சிவஞானமும் அவளுக்குத் தகுந்தபடி பணிந்து விடுவது அவளுக்குப் பெருமையாக இருந்தது. அன்றைய சம்பவத்திற்குப் பிறகு ராஜேந்திரனின் வருகையையே காணோம். ஷண்பகம் சிறிது நிம்மதியுடன் இருந்தாள். ஆனால், அந்தக் கயவனால் அவளது கணவனின் நிலை இன்னும் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுமோ என்ற கவலை அவளை வருத்திக் கொண்டே இருந்தது. மழைவிட்டாலும் தூவானம் விடவில்லை!

பாஸ்கரனும், புவனாவும் தங்கள் விடுமுறை நாட்களுக்குப் பிறகு சென்னை திரும்பிவிட்டனர். அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எதுவும் அவளுக்குக் கிட்டவில்லை. 'கிர்'ரென்ற ஓசையுடன் ஓடிக்கொண்டிருந்த கார் சடக்கென வளைந்து, பெரிய காம்பவுண்டுக்குள் நுழைந்தது. சிறு குலுக்கலுடன்

ஒருபெரிய வெள்ளைக் கட்டிடத்தின் முன் அது நின்றதை உணர்ந்த ஷண்பகம் தன் சுயநிலைக்கு வந்தாள். பாட்டியின் நினைவு வந்தவுடன் பரபரப்புடன் காரின் கதவைத் தானே திறந்துகொண்டு இறங்கினாள். அவள் பாட்டியை உயிருடன் காணுமலே திரும்பப் போகிறாள் என்றோ, உலகில் அவளுக்கிருந்த ஒரே ஒரு பிணைப்பும் அறுந்து சில மணி நேரங்களாகின்றன என்றோ அவள் அறியவில்லை.

## 7

இரவு போஜனத்திற்குப் பின் ஸ்ரீமான் குழந்தை வேலு தமது ஆட்டுக்கடா மீசையை ஆசையுடன் தடவிக்கொண்டபடி, சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார். வழக்கம்போல ஜன்னல் ஓட்டைபருகே உட்கார்ந்து ஊராரைப்பற்றி ஊடுருவிப் பார்க்கும் புண்ணியவதிகூட, தனது கணவரருகில் உட்கார்ந்தபடி, பக்கத்திலிருந்த வெற்றிலைத் தட்டிலிருந்து, வெற்றிலைகளை மடித்தவண்ணம் யோசித்துக் கொண்டிருந்தாள். முற்றத்துப் புறத்தில் உள்ள தூணென்றில் சாய்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்த ராஜேந்திரன் அசட்டுக் களையுடன் மோட்டு வளையைப் பார்த்து விழித்தான். அன்று பகல் புவனாவிடமிருந்து வந்த கடிதத்தினால் ஏற்பட்ட யோசனைதான் மூவருக்கும். ஒரு கத்தை வெற்றிலைச் சுருளை ஒரே வாயில் விழுங்கிய புண்ணியவதி, "என்னாங்க, குழந்தைக்கு என்ன பதில் எழுதப் போறீங்க. பாஸ்கரன் அதைக் கட்டிக்க ஆசைப்படுதாமே?" என்றாள்.

"என்னத்தை எழுதறது. அவங்க இரண்டு பேர் மனசும் ஒத்துப் போயிட்டப்புறம் நாம குறுக்கிட்டா, முடிவில் நாம்தான் முட்டாள்களாவோம்" என்று கூறினார் குழந்தைவேலு.

கூடத்து மின்சார விளக்கின் ஒளியை ரசிப்பது போல் அபிநயித்த ராஜேந்திரன் சட்டென நிமிர்ந்து "இதோ பாருங்கள் அம்மா. அவசரப்பட்டு எதையும் முடிவு செய்துவிடாதீர்கள். அந்தப் பயல் பாஸ்கரனைப் பற்றித் தெரியாவிட்டாலும் சிவஞானத்தைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். சிவஞானம் தம்பிதானே இவனும்...என்னையே விட்டெறிஞ்ச மாதிரி அலட்சிய மாகப் பேசினான். நாளைக்கு உங்களையே அவமதிப் பான். அப்பாவைத் திட்டுவான். அப்புறம் நம்ப புவனாவையே வெளியே துரத்திப்பிடுவான். எல்லாம் ஓரே குட்டையிலே ஊறின மட்டைதானே? இவன் குணம் மட்டும் என்ன நல்லா இருந்திடப் போவுது?" என்றான் படபடப்புடன்.

"ஆமா ஆமா! உன்கூட சேந்ததுனாலேதான் அந்த சிவஞானம் கூட கெட்டுப் போனான்னு ஊர்லே சொல்லிக்கிறாங்க. எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு நினைச்சுக்காதே தம்பி. நீ இப்படி ஊர்வம்புலே மாட்டிக் கிட்டு ஒருநாள் செம்மையா உதை வாங்கிக்கத்தான் போறே" என்று கோபத்துடன் கூறிய குழந்தைவேலு தமது மீசையை முறுக்கியபடி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"அம்மா நாளைக்கு புவனா கண்ணைக் கசக்கிக்கிட்டு இந்த வீட்டுக்கு வந்தா என்னைக் கேக்காதீங்க" என்று தாயிடம் பயமுறுத்தினான் மகன்.

"டேய்! உன்னை யாருடா இப்பக் கேட்டா? போயி வெளியிலே, தெருவிலே ஏதாவது கார் வந்திருக் குதா, யார் வீட்டிலாவது வம்பு கிடைக்குமான்னு விசாரிச்சுகிட்டு வா. இல்லாட்டி வம்பு பேசாம இராத் திரிக்கு அம்மாவுக்கும் பிள்ளைக்கும் தூக்கமே வராதே!" என்று ஏளனமாகக் கூறினார் தந்தை.

அதற்கு மேல் புண்ணியவதியால் பொறுக்க முடிய வில்லை. துக்கம் வேறு அவளது பருத்த கழுத்தை துருத்திபோல் உப்பவைத்தது. "இந்தாங்க என்னைத்

துக்கு வீண் சண்டை? எனக்கு சின்னப் பிள்ளையி லிருந்தே பாஸ்கரனை நல்லாத் தெரியும். சிவஞானம் மாதிரி இல்லே. நல்ல மரியாதை உள்ளவன். நம்ப புவனுக்கு இவன் மாதிரி பையன் கிடைப்பது கஷ்டம்" என்றாள் பேச்சைத் திருப்பியபடி.

"அட நீ கூட புத்திசாலித்தனமா பேசிட்டியே! சரி! நான் பாஸ்கரனுக்கு இது விஷயமா சம்மதம் தெரி விச்சு லெட்டர் போட்டுடறேன். சரிதானே" என்றார் குழந்தைவேலு உற்சாகத்துடன் துள்ளியபடி.

"அம்மா! அவங்க சொத்து கிடைக்கும்னு ஆசைப் பட்டுக்கிட்டு நீங்களும் சரின்னுட்டீங்களா? சட்ட விரோதமா கல்யாணம் பண்ணின சிவஞானம் ஒருநாள் ஜெயிலுக்குப் போகப்போறான். அவங்க குடும்பத்திலே பொண்ணு குடுத்தோம்னு ஊரே சிரிக்கும். பிரத்தி யாரைப்பத்தி சும்மா நாக்கை நீட்டி நீட்டிப் பேசுவீங்க. உங்க விஷயம்னு உடனே புத்தி மழுங்கிடுச்சு. ஆசை கண்ணை மறைக்குதா?" என்று பொரிந்த ராஜேந் திரனை எரித்து விடுவதுபோல் பார்த்தாள் புண்ணியவதி. தன் மகனே தன்னைக் கண்டபடி பேசுவதைப் பொறுக்க மாட்டாமல், "சரிதாண்டா! ஊர்லே இத்தனை பேருக்கும் அவங்க வீட்டுப் பரம ரகசியம் தெரிஞ்சு தானே இருக்குது? எவனுக்காச்சும் தைரியமுண்டா, ஒரு மொட்டைக் கடுதாசி எழுதிப்போட? சிவஞானம் குடும்பத்துக்கு அவமானம் வந்தா நாம எல்லாரும் நடுத் தெருவிலே நிக்கவேண்டியதுதான்." என்று கத்திய அவளுக்கு மூச்சு வாங்கியது. ஸ்தூல சரீரத்தில் ஏற்பட்ட கோபத்தின் உஷ்ணக் காற்று ஜிவ்வென முகத்தில் ஏறியது. அதற்கு மேலும் சினத்தைத் தாங்கமாட்டாதவள்போல் லபக்கென ஒரு பிடி பாக்கை எடுத்து வாயில் போட்டுக்கொண்டாள்.

"சரி! உங்களிஷ்டம்போல செய்யலாம். இந்த வீட்டிலே என் அபிப்பிராயத்தைச் சொல்ல முடியலே என்று நினைச்சா மானம் போகுது" என்று முணு

முணுத்துவிட்டு மாடிப்பக்கம் விரைந்து சென்ருன் ராஜேந்திரன்.

“ இவனுக்குத்தான் ஆத்திரமும், பொருமையும் கண்ணை மறைக்குது. இல்லாட்டா சொந்த தங்கை சுகப்படக்கூடாதும்பானு ?” என்று பகர்ந்தாள் வெற்றிலைச் சாற்றை விழுங்கிய புண்ணியவதி.

“ ஏன் அனுவசியமா வார்த்தையை வீணுக்கறே. பாஸ்கரன் இவனைவிட புத்திசாலியா எல்லா விஷயத்திலும் இருக்கான். முன்னுக்கும் வந்துட்டான். அது தான் உன் மகனுக்கு வயிற்றெரிச்சல். இவன் எங்கேயிருந்துதான் நமக்குப் பிள்ளையா வந்தானே ?” என்று அங்கலாய்த்துக்கொண்டார் குழந்தைவேலு.

“ சரி ! சரி ! புவனுவுக்கு அவள் இஷ்டப்படியே ஆகட்டும்னு லெட்டர் போடுங்க. கல்யாண காரியத்தை ஆறப்போடப்படாது. சூட்டோட சூடா நடத்திப்பிட வேண்டியது தான் ” என்று கூறிய புண்ணியவதி, மறு நாள் வம்பர் மகாசபையில் எப்படி விஷயத்தை நாசூக்காய் விளக்குவது என்று கவலைப்பட ஆரம்பித்தாள்.

இரவு போஜனத்தின்போது சிவஞானம் வருகைக்காக யாரும் காத்துக் கொண்டிருப்பதில்லை. ஆகவே நாகரத்தினம் பங்கஜத்தைக் கவனிக்க டாக்டர் வந்து போன பின்பு, சமையலறைக்குள் புகுந்தாள். பங்கஜத்திடம் வீட்டில் உள்ள வேலையாட்கள் யாவருக்கும் மரியாதை அதிகமாதலால், அவளை மற்றவர்களுக்காக வாவது நன்கு கவனிப்பதுபோல் நாகரத்தினம் காண்பித்துக்கொள்ள வேண்டியிருந்தது. பங்கஜத்திற்கு வந்திருக்கும் காச நோய் பயங்கரமானது ; மற்ற வரிடமும் தொத்திக்கொள்ள வழி உண்டு என்று தெரிந்தும், அவளை வெளி ஆஸ்பத்திக்கு அனுப்பாமல் நாகரத்தினம் வீட்டிற்குள்ளேயே வைத்துக்கொண்டதற்குப் பல காரணங்கள் இருந்தன. அவளைச் சரிவரக் கவனியாமல் அனுதைபோல் ஆஸ்பத்திரியில் கிடத்தி விட்டார்கள் என்று பழி வராமலிருக்கத்தான் வீட்டிற்

குள்ளேயே வைத்துக்கொண்டாள். எவராவது பங்க ஜத்தின் தூரத்து உறவினர் விஷயம் தெரிந்து அவளைப் பார்க்கவந்தால், ஷண்பகத்தின் நிலை தெரிந்துவிடலாம். ஒருவேளை பங்கஜமே ஆத்திரத்தில் யாரிடமாவது சொல்லித் தன்னை ஆபத்தில் மாட்டிவிடுவாள் என்ற கிலியும் நாகரத்தினத்திற்கு தற்போது இருந்தது. டாக் டரின் கணக்குப்படி பங்கஜம் வாழ்வது இனி நாள் கணக்கில்தான் என அவளுக்கு நன்ருகத் தெரியும். இத்தகைய சந்தர்ப்பத்தில் எவரையுமே விரோதித்துக் கொள்ள நாகரத்தினம் விரும்பவில்லை.

வீட்டு வேலையாட்கள் யாவருக்கும் ஷண்பகம், யார் என சரியாகத் தெரியாவிட்டாலும், அரைகுறையாக அறிந்திருந்தார்கள். ஷண்பகத்தைக்கண்டாலே வேண்டா வெறுப்பாக அவர்கள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்ததில் வியப்பில்லை. அவளது உண்மை யான மனப்போக்கை அறியாத அவர்கள் சிவஞானத்தை மயக்கியவள் என்றே வெறுத்து ஒதுக்கி வந்தனர். வெளியே பகிரங்கமாகச் சொல்ல அவர்களுக்குத் தைரிய மில்லாவிட்டாலும், அவர்களது பார்வையிலே தெரித்த கனலைக் கண்டு ஷண்பகமும் சிறிது ஒதுங்கியே வாழ்ந் தாள். போஜன வேளை ; காப்பி அருந்தும் நேரம் ஆகிய வற்றின்போது நாகரத்தினத்தின் பின்னுலேயே தொத்திக்கொண்டு போய் வருவாள். அன்றைய இரவு போஜனத்தின் போதும், அவள் வழக்கம் போலவே நாகரத்தினத்துடனே சமைலறைக்குள் புகுந்தாள்.

இலையில் பரிமாறப்பட்ட உணவை ஒரே அள்ளாக வாயில் போட்டுக்கொண்ட நாகரத்தினத்திற்குப் பல வேலைகள் காத்துக்கிடந்தன. மறுநாள் வெளியூர்களுக்கு அனுப்பியாக வேண்டிய செங்கல் ஒப்பந்தங்கள் ஒரு புறம். பாஸ்கரன் தனது கல்யாண விஷயமாக எழுதி இருந்த கடிதம் மற்ருெருபுறம். பங்கஜத்தின் மோசமான உடல் நிலை இன்னுெருபுறம். இப்படி யாவும் சேர்ந்து அவளைப்பைத்தியமாக்கி விட்டிருந்தன.

கொஞ்ச காலமாக ஆபீஸ் வேலையில் சிவஞானம் சிரத்தை காட்டுவதில்லை எனவும், அடிக்கடி சென்னைக்குப் புறப்பட்டு விடுவதாகவும் அவள் அறிந்திருந்தாள். வீட்டிலே மனைவி, குழந்தை என்றிருந்தால் அவன் திருந்தலாம் என்ற உத்தேசம் காரணமாகத்தான் ஷண்பகத்தை அந்த வீட்டுக்குக் கொணர்ந்தாள். ஆனால் அதற்குப் பிறகும் பழையபடியே சிவஞானம் வேளைக்கு வீடு வராமல் இருக்க ஆரம்பிக்கவே அவளைக் கவலை பிடித்தது. இத்தனை அழகை வைத்துக்கொண்டு அந்த மக்குப் பெண்ணுக்கு புருஷனை மயக்க சாமர்த்திய மில்லையே என ஷண்பகத்தின்மீது கோபம் வந்தது. ஒருவேளை அவள் பட்டிக்காட்டிலிருந்த படிப்பில்லாத பெண் என்று சிவஞானம் விரும்பாமல் இருந்து விட்டாலோ என எண்ணித்தான் படிப்பு, நாகரிகம் எல்லாம் சொல்லித்தர ஏற்பாடு செய்திருந்தாள். அப்படியிருந்தும் ஏனிந்தக் குழப்பம்? அவள் எதிர்பார்த்தபடி எதுவுமே நடக்கப்போகிறதில்லையா? இருக்கட்டும். இன்று தம்பி வந்தவுடன் இரண்டில் ஒன்று தீர்த்து விடுவது என்று தீர்மானித்தாள். பாஸ்கரனது விவாகத்தையும் சட்டென முடித்துவிட்டால், வீடாவது சிறிது கலகலப்பாக விளங்கும். அவனையும் பட்டணத்து வேலையை விட்டு விட்டு இங்கேயே இருந்து கவனித்துக் கொள்ளச் சொல்லலாம் என்று பலவாறு யோசனை செய்த நாகரத்தினம் மீண்டும் மாடி ஹாலில் சென்று உட்கார்ந்து கொண்டாள்.

இரவு பதினொரு மணி அடித்து ஓய்வதற்கும் வாயிலில் கார் வந்து நிற்பதற்கு சரியாக இருந்தது. மாடிப்படியில் தொம், தொம் என பூட்ஸ் காலோசையின் பேரொலி கேட்டது. "தம்பி வந்தாச்சு" என்று அறிந்த நாகரத்தினம் தன் தொண்டையை முன் எச்சரிக்கையாகக் கனைத்துக் கொண்டாள்.

வழக்கமில்லாத வழக்கமாக விழித்துக் கொண்டு அங்கு உட்கார்ந்திருக்கும் தமக்கையைக் கண்டு ஆச்சரிய

மடைந்த சிவஞானம், "ஏன் அக்கா! இன்னுமா தூங்கவில்லை?" என்று கேட்டார்.

"இல்லை தம்பி! இன்னிக்கு உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயமா பேசணும்னு உக்காந்திருக்கேன்" என்றாள் கண்டிப்பு தொனிக்கும் குரலில்.

"என்னிடமா? என்ன விஷயம் அக்கா?" என்று கேட்டபடி நின்ற சிவஞானத்தை ஏற இறங்க ஒரு முறை பார்த்தாள். தலைமயிரெல்லாம் கலைந்து தாறு மாறாய்க் கிடக்க, கண்களிரண்டும் சிவந்து முகம் வாட்ட முற்று அவர் நின்றநிலை பரிதாபமாக இருந்தது. "தம்பி! எல்லாம் உன் நன்மைக்குத்தான் நான் சொல்றேன். காலாகாலத்திலே வீடு வந்து சேரக்கூடாதா?" என்றாள் பச்சாதாபத்துடன்.

"ஆபீஸ் வேலை இருக்கறப்போ சதா வீட்டிலேயே இருக்க முடியுமா? வேலை முடிந்தால்தானே வீட்டிற்கு வர முடியும்?" என்று கோபத்தை அடக்கிக்கொண்டு பதிலளித்தார் தம்பி.

"அப்படியாவது நீ ஆபீஸ் வேலையைக் கவனிச்சுட்டா நான் ஏனப்பா உன்னைச் சொல்லப் போறேன். தம்பி? எனக்கு எதுவும் தெரியாதுன்னு நினைக்காதே! போன மாசம் மெட்ராஸுக்கு அனுப்ப வேண்டிய ஆர்டருங்களை காலா காலத்திலே நீ அனுப்பல்லே. ஆர்டர் கொடுத்தவங்க வேறே இடத்திலே செங்கல் ஆர்டர் குடுத்திட்டாங்க. வேறே ஒருத்தர் முன்பணமா கொடுத்த பணத்தை வாங்கிகிட்டு இன்னும் நீ செங்கல் அனுப்பித் தரலே. இதெல்லாம் என்ன வியாபாரம் தம்பி! உங்க அத்தான் உசிரோட இருந்தப்போ நம்ப கம்பெனிக்கு எத்தனை பேரு தெரியுமா?" என்று உருக்கமாகக் கேட்டாள் நாகரத்தினம்.

"அக்கா! அரைகுறையா தெரிஞ்ச விஷயங்களை நீங்கள் புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள். கொஞ்ச நாளா விடாமல் மழை அடித்தது. என்னால் 'சூளை'

எதுவும் போட முடியவில்லை. செங்கல் தயாராகாமல் 'ஆர்டர்' எப்படி எடுப்பது? இதெல்லாம் ஆபீஸ் விஷயம். உங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று கூறிவிட்டு மேலே செல்லத் திரும்பினார்.

"தம்பி, நில்! இப்படியெல்லாம் என்னை ஏமாத்திட முடியாது. நீ அந்த பாவிப்பய ராஜேந்திரனைக் கண்டு நடுங்கறே. அவனை நம்பி நம்ப வீட்டு விஷயத்தையெல்லாம் காத்திலே பறக்க விடறே. இது நல்லாவா இருக்குது? வீட்டிலே உனக்காக கிளி மாதிரி பெண்ணைக் கட்டிப் போட்டா அதை நினைச்சாவது வீட்டுக்கு ஓடி வருவாய்னு பார்த்தேன். அந்த நினைப்பிலேயும் மண்ணைப் போட்டுடுவேபோல இருக்குது. நாளைக்கு அந்தப் பய வரட்டும் சொல்றேன்" என்று பொரிந்து தள்ளிய நாகரத்தினம் அடுக்கடுக்காய் பெருமூச்செறிந்தாள்.

"ராஜேந்திரனைப் பற்றிக் கண்டபடி பேச வேண்டாம். அவனைத் திட்டுவதைவிட நீங்கள் கட்டிப் போட்டிருக்கிறீர்களே ஒரு பச்சைக் கிளி அதை வேண்டுமானால் திட்டுங்கள். மனைவி எப்போது பார்த்தாலும் எதையோ பறிகொடுத்தவள்போல் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டிருந்தால் எந்தப் புருஷனுக்குத்தான் நேரத்தில் வீடு திரும்ப ஆசை இருக்கும்? உங்களுக்காகத்தான் அவளோடு நான் வாழ்கிறேன் அக்கா!" என்று பல்லைக் கடித்த சிவஞானம் வேகமாக அந்த இடத்தைவிட்டகன்றார். "அப்படியா சமாசாரம். விடியட்டும் சொல்கிறேன்" என்று மூன்றாவது முறையாகக் கருவிக் கொண்ட நாகரத்தினமும், வீட்டைச் சுற்றிப் பார்வையிட்டு விட்டுத் தூங்குவதற்காகக் கீழே இறங்கிச் சென்றாள்.

கணவனது வாயிலிருந்து 'குப்'பென வீசிய நாற்றத்தைச் சகிக்க முடியாத ஷண்பகம், 'ஐயோ' என்று கூவினாள். என்ன என்பதைப்போல விறைத்த சிவஞானத்தைப் பார்த்து, "அந்தப் பாவி இதற்கும்

உங்களைப் பழக்கிவிட்டானு ?" என்ருள் நடுங்கிய குரலில். அடுத்த விநாடி பளீரென சிவஞானத்தின் முரட்டுக் கரம் அவளது பட்டுக் கன்னத்தில் பதிந்தது. " சீ ! அனுதை ! அவனைப் பற்றிப் பேச உனக்கு என்ன உரிமை ? வாயை மூடு " என்று உறுமினுர். " அம்மா !" என்று குமுறிய ஷண்பகத்தின் அடிவயிற் றையும் பிளந்து கொண்டு எழுந்தது விம்மல்.

# 8

பங்கஜமும், ஷண்பகமும் தன்னந்தனியாக அந்த வீட்டு அறைக்குள் சிறைக் கைதிகளைப் போலக் கிடந் தனர். வெளியே மேளச் சப்தமும், விருந்துக்கு வந்த வர்களின் சந்தோஷ ஆரவாரமும், குழந்தைகளின் கும்மாளமும், ஒன்ருகக் கலந்து பேரிரைச்சலாக, அறைக் குள்ளே வந்து மோதியது. வெளியே கல்யாண கோலா கலம். அறைக்குள்ளே பங்கஜம் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்தாள். உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த அந்த நேரத்திலும் பங்கஜத்தின் பேச்சு தெளிவாகத்தான் இருந்தது.

அதிர்ஷ்டத்திலும், ஸ்தானத்திலும் ஒரே இடத் தையே ஆக்ரமித்துக் கொண்டிருந்த அந்த இரு பெண் களும், நாகரத்தினத்தால் ஒரே அறையில் சிறையாக்கப் பட்டிருந்தனர். 'பங்கஜத்தின் மோசமான உடல் நிலையைக் கூடக் கவனியாது கல்யாண வைபவத்தில் ஈடுபட்டாள் என்ற அவச்சொல்லுக்கோ, பெருவியாதிக்கு ஆளானவள் இருக்கும் வீட்டில் உணவு சாப்பிடுவதா என்று பிறர் கொள்ளும் அருவருப்புக்கோ இடமில்லாமல் இருக்கவேண்டும். மேலும் ஷண்பகம் பலர் எதிரில் நடமாடினுல் மற்றவர் வம்பு பேசி தன் குடும்ப விவ காரங்களை சந்தியில் நிறுத்த நேரிடும்' என்றெல்லாம் ஊகித்த நாகரத்தினம் முன் ஏற்பாடாகவே

அவர்களை மூன்றும் மாடியின் கோடி அறைக்கு, எவர் கண்ணிலும் படாமல் அப்புறப்படுத்தி விட்டாள். யாராவது கேட்டால் விஷயத்தை மழுப்பி விடுவது என்று தீர்மானமும் செய்து வைத்திருந்தாள். தனது கல்யாண குதூகலத்தில் மூழ்கி இருந்த பாஸ்கரன் இந்த சூழ்ச்சியைக் கவனிக்கவில்லை. வெகு நாட்களுக்குப் பிறகு கோலாகலமாக நடக்கும் கல்யாணமாதலால் மற்ற யாவரும் களிப்பில் தங்களை மறந்து திரிந்து கொண்டிருந்தனர். ஓசைப்படாமல் மாடி ஏறிச் சென்று, அவர்களது உணவு விஷயத்தை மட்டும் கவனித்து வருவதற்காக தன்னிடம் உள்ள நம்பிக்கை மிகுந்த வேலைக்காரி ஒருத்தியை நாகரத்தினம் ஏற்பாடு செய்து இருந்தாள்.

பிற்பகலில் வந்த உணவை ஷண்பகம் தொடக்கூட வெறுத்தாள். அவளது நிலையைக் கண்ணுற்ற பங்கஜம் வரண்ட சிரிப்புடன், "அட! பயித்தியம். ஏன் உணவின்மேல் உன் கோபத்தைக் காட்டுகிறாய்? சாப்பிடு" என்றாள்.

முதல் முதலில் பங்கஜத்துடன் அந்த அறையில் விடப்பட்டபோது ஷண்பகம் பயத்தினால் நடுங்கினாள். பங்கஜத்தின் உடைமையைப் பறித்துவிட்ட சக்களத்தி என அவள் எந்நேரமும் தன்மீது சீறிப் பாயலாம் என்று தான் அவளுக்கு அச்சமிருந்தது. ஆனால், அதற்கு நேர்மாறாக பங்கஜம் அவளிடம் இரக்கமும், அன்பும் குழைந்த கனிவுக் குரலில் பேசியதுதான் அவளுக்கு வியப்பை அளித்தது. சற்று நேரத்தில் பங்கஜத்திடம் மனம் விட்டுப் பேசவும் துணிந்து விட்டாள். இரு பெண்களிடையே சில மணி நேரத்தில் பின்னப்பட்ட அந்த சிநேகிதம் மிகப் பலமுள்ளதாகவே அமைந்து விட்டது. பங்கஜம் செல்லமாகக் கடிந்து கொண்டதைப் பார்த்த ஷண்பகம், "இல்லை, அக்கா! எனக்கு இதை விட விஷத்தைக் கொடுத்திருந்தால் சந்தோஷத்துடன் சாப்பிட்டிருப்பேன். தானாகவே விஷத்தை எடுத்துக்

குடிக்க எனக்கு இன்னும் மனம் வரவில்லை" என்றாள் கசப்புடன்.

"நீ இவ்வளவெல்லாம் படித்தறிந்து விட்டேன் என்கிறாய்? தற்கொலையைப் பற்றி மடத்தனமாகப் பேசுகிறாயே. இதோ என்னைப் பார். நானாக வர வழைத்துக் கொண்ட வியாதி இது என்றால் மிகையில்லை. சரியான போஷாக்கு இன்றி என் உள்ளத்தையும், உடலையும் வருத்தின பலன் இது. நான் மட்டும் நன்றாக இருந்திருந்தால்... ஹூம்! நடந்து போன விஷயத்தைப் பற்றி இனி என்ன பேச்சு? நான் செத்துக் கொண்டே இருக்கிறேன். நீ சாகாமல் செத்துக் கொண்டிருக்கிறாய். அதனால்தான் உன்னைப் பார்த்துப் பரிதாபப் படுகிறேன். என் இடத்தில் நீ வந்தாய் என்று முதலில் கேள்விப் பட்டதும் எனக்குப் பொறாமை இருந்தது உண்மை. ஆனால், உன்னை நேரே அன்று பார்த்ததும் எனக்குப் பச்சாதாபம்தான் மேலோங்கியது. தங்களது சுய நலத்திற்காக உன் வாழ்வைப் பலிகொண்ட மற்றவர்கள் மீது எனக்கு ஆத்திரம் பொங்கியது. கிளியைப் பிடித்துப் பூனை கையில் கொடுத்துவிட்டார்களே என்று நாளுக்கு நாள் என் அனுதாபம் அதிகமாகிக் கொண்டே வந்தது. ஷண்பகம்! பெண்ணின் பெருமையை அறியாத நமது கணவருக்கும், பிறரது உணர்ச்சிகளை மதியாத அந்த அகம்பாவம் பிடித்த நாகரத்தினத்திற்கும் நீயாவது சரியான பாடம் கற்பிக்க வேண்டும். அப்போது தான் என் உள்ளம் சாந்தியடையும். சொல்! ஷண்பகம் சொல்! இந்தச் சமயத்தை விட்டால் பிறகு நமக்குள் சந்திப்பு வாய்ப்பதரிது. அதற்குள் நான் உயிரோடு இருப்பதோ..." என்று முடிக்க முடியாது பங்கஜத்தை இருமல் குலுக்கியது. ஷண்பகத்தை சற்று தூர இருக்கும்படி ஜாடை காட்டிவிட்டு, அருகே இருந்த பீங்கான் கிண்ணத்தில் கோழையைத் துப்பி மூடினாள். ஆயாசத்துடன் படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

"அக்கா! நீங்கள் ஏன் இப்படி உடலை அலட்டிக் கொள்கிறீர்கள். தயவுசெய்து அதிகமாகப் பேசாதீர்கள். மூச்சுவிடக்கூட இப்படிச் சிரமப்படுகிறீர்களே" என்று பீதியுடன் கேட்டாள் ஷண்பகம்.

"என் பக்கம் நெருங்காதே. இந்தப் பாழும் வியாதி என்னோடு தொலையட்டும். நேற்றெல்லாம் கூட ரத்தம் நிறைய வெளியே போய்விட்டது. இனி மணிக் கணக்கில்தான் என் காலம்" என்று விரக்தியாக மெல்லிய குரலில் பேசிய பங்கஜத்தை இமை கொட்டால் ஷண்பகம் பார்த்தாள். மரணத்தை நோக்கி நிச்சிந்தையாகச் செல்வதற்காகத்தானோ அவளது முகத்தில் அந்தப் பிரகாசம்! பங்கஜம் அந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தசமயம், வாழ்க்கையைக் குதூகலமாக ஆரம்பிக்கும்போது அதே பிரகாசம் முகத்தில் இருந்திருக்கும். அவளது ஆசைக் கனவுகளை யெல்லாம் நாசமாக்கியது யார்? ஆண்டவனா? விதியா? சிவஞானமா? நாகரத்தினமா? சரியான பதில் எதுவும் கிடைக்காததால் பங்கஜத்தைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள் ஷண்பகம்.

"எத்தனை நேரம் நின்று கொண்டே இருப்பாய்? அதோ அந்த நாற்காலியிலாவது உட்கார்ந்து கொள்" என்று அறையின் மூலையில் போடப்பட்டிருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினாள் பங்கஜம். அவள் கட்டளைப் படியே நடந்து கொண்ட ஷண்பகத்தைப் பார்த்து அவளுக்குச் சிரிப்பு வந்தது. "என்ன யோசிக்கிறாய் ஷண்பகம்?" என்றாள் மெல்லிய குரலில்

"இல்லை. ஒருவேளை உங்களைப் போல எனக்கும் குழந்தைகளே பிறக்காது போய் விட்டால் என்ன வாகும் என்று நினைத்தேன். அப்படி மனதில் எண்ணிய மாத்திரத்திலேயே எனக்குக் குலை நடுக்க மெடுக்கிறது. ஏனென்றால் என்னை வெளியேற்றி விட்டால், நான் எங்கே போவேன்? எப்படி வாழ்வேன்? யாவராலும் நான் வேண்டப்படாதவள். இந்த வீட்டிலேயே என்னை

மனதிற்குள் எல்லாரும் எப்படிச் சபிக்கிறார்கள் என்பதை அறிவீர்களா அக்கா?" என்று கேட்டாள் ஷண்பகம் நிராசையுடன்.

"உன் நிலையை நான் நன்றாக அறிவேன். அதற்காகத்தான் நான் சீக்கிரம் இறந்து விடுவது நல்லது என்கிறேன்" என்றாள் பங்கஜம் திடமான குரலில்.

திடுக்கிட்ட ஷண்பகம் அவளையே பிரமிப்புடன் பார்த்தாள். "ஏன் அப்படிப் பார்க்கிறாய் ஷண்பகம்? நான் என்றுமே உண்மையை மறைத்துப் பேசுபவளல்ல. நாமிருவரும் தற்போது ஒரே இடத்தில் இருக்க வேண்டியவர்கள். பெண்ணின் மனதை அறிந்துதான் தற்காலச் சட்டமும் வகுத்திருக்கிறார்களோ என்னவோ! நானும் நீயும் ஒரே இடத்தில் இருக்க முடியாது. அதற்காக ஒரே ஒரு வழிதான் உள்ளது. யாராவது ஒருவர் மறைய வேண்டும். அதனால்தான் சொல்கிறேன். நான் உயிருடன் இருக்கும் வரை நீ உலகமறிய மனைவி என்ற கௌரவமான ஸ்தானத்தை அடைய முடியாது. நீ 'ஆசை நாயகி' என்ற பட்டத்தை வேண்டுமானால் பெறலாம்" என்றாள்.

ஷண்பகம் அவளது கடைசி வார்த்தைகளைக் கேட்டு வேதனை தாங்காமல் "போதும், அக்கா போதும்" என்று தன் காதுகளைப் பொத்திய வண்ணம் அலறினாள்.

"நீ வருத்தப்பட்டுப் பயன் இல்லை. நான் எவ்வளவுக் கெவ்வளவு வேகமாக மரணத்தை நோக்கிச் செல்கிறேனோ, அவ்வளவு உனக்குக் கௌரவம். எனவே, மரண தேவதையை சீக்கிரமாக வரும்படி நீ வேண்டிக் கொள்" என்றாள் பயங்கரச் சிரிப்புடன்.

"ஐயோ அக்கா! இப்படியெல்லாம் பேசாதீர்கள். எனக்குப் பயமாக இருக்கிறது" என்று நடுக்கத்துடன் கூவினாள் ஷண்பகம்.

"உண்மையைக் கண்டு எதற்காகப் பயப்படுகிறாய்?" என்று கேட்ட பங்கஜத்தை மீண்டும் பயங்கர இருமல் பிடித்துக் கொண்டது. அவள்படும் நரக வேதனையைக் கண்ட ஷண்பகத்தின் தளிர்மேனி அச்சத்தால் குலுங்கியது.

மெல்ல, மெல்ல மாலை இருள்கவியத் தொடங்கியது. அந்த இருளையெல்லாம் விரட்டி அடிப்பதைப் போன்று ஜகஜ்ஜோதியுடன் விளக்குத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்கியது குமாரசாமியின் வீடு. பிரபல பின்னணிப் பாடகி ஒருத்தியின் பாட்டுக் கச்சேரியில் தம்மை மறந்து ரசிகர் குழாம் ஈடுபட்டி ருந்தது. பகட்டான சேலைகளை அணிந்த பெரிய மனிதர் வீட்டுப் பெண்கள், பெருமையுடன் பேசித்திரியும் பணம் படைத்த பிரபுக்கள் எல்லோரும் காரில் வரிசையாக வந்து இறங்கிய வண்ணம் இருந்தனர். வைர ஓலைகள் காதுகளில் ஊசலாட, இடையே உடுத்தியிருந்த வெண் பட்டுப் புடவையின் அழகுடனும், நெற்றியில் பளிச் செனத்தெரிந்த விபூதிப் பட்டையுடனும், நிச்சிந்தை யாகச் சுற்றிக் கொண்டிருந்தாள் நாகரத்தினம். சென்னையிலிருந்து வந்த பெரிய தனவந்தர்களையெல்லாம் குறிப்பாக விழுந்து விழுந்து உபசரித்த வண்ணம் இருந்தாள். உச்சஸ்தாயில் பேசிப் பேசி அவளது தொண்டைகூடக் கம்மி இருந்தது.

சள சளவெனப் பேசும் கூட்டத்தினரிடையே எதுவும் பேசாமல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தவர் இருவர். ஒருவர் சிவஞானம். மற்றொருவர் ராஜேந்திரன். கச்சேரி மேடையருகே போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்திருந்த மாப்பிள்ளையையும் பெண்ணையும் பார்த்து பரவசமாகிக் கொண்டிருந்தாள் புண்ணியவதி. குழந்தை வேலு தமது மாப்பிள்ளையின் பெருமையைத் தனக்குத் தெரிந்தவர்களிடம் பறைசாற்றிக் கொண்டிருந்தார். சிவஞானமும், ராஜேந்திரனும் வந்தவர்களை வரவேற் காது முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு தனியே

உட்கார்ந்திருந்ததை நாகரத்தினமும், புண்ணியவதியும் கவனித்தனர். உள்ளூற அவர்களுக்கு அந்த இருவரது செயலும் பிடிக்கவேயில்லை. எனினும் அதைக் கவனியாதவர்கள் போல் நடித்துக் கொண்டிருந்தனர்.

இரவு விருந்திற்குப் பின் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊர்வலத்திற்காக யாவரும் சித்தமாயினர். காஸ் விளக்குகளும், பாண்டு வாத்திய கோஷமுமாக ஊர்வலம் குமரப்பா நகரைச் சுற்றி வருவதற்குள் இரவு ஒரு மணி ஆகிவிட்டது. நாயனக்காரனும் சளைக்காமல் ஊதித் தள்ளினான். சிலர் தூங்கிக்கொண்டே காரின் பின்னால் நடந்தனர். சிலர் அரைக்கண்ணால் ஒன்றும் புரியாமல் நடந்துகொண்டே இருந்தனர். கும்மாள மடிக்கும் சிறுவர்களும் ஓய்ந்து பெற்றோர்களின் தோள்மீது தூங்கலாயினர். வீட்டு வாயிலை ஊர்வலம் வந்து அடைவதற்கும், நாகரத்தினத்தைத் தேடிக் கொண்டு ஷண்பகம் ஓடிவருவதற்கும் சரியாக இருந்தது. தன் உத்தரவை மீறி ஷண்பகம் பிறர் எதிரில் வந்ததைக் கண்டு திடுக்கிட்ட நாகரத்தினத்தின் முகம் கடு கடுவென மாறியது. புண்ணியவதி வெறுப்பினால் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். தத்தம் தூக்கத்திலிருந்து சடக்கென விழித்துக்கொண்ட மற்றவர்கள், வானத்திலிருந்து இறங்கிய தேவதையைப் பார்ப்பதுபோல் அதிசயத்துடன் ஷண்பகத்தைப் பார்த்தனர். கூட்டத்தினிடையே அவளைப் பார் என ஜாடையாக தம்முடைய முழங்கையாலும், ஒருவர்க்கொருவர் இடித்துக்கொண்டு சங்கேத மொழியில் விமர்சனம் செய்தனர். ஏககாலத்தில் எத்தனையோ ஜோடிக் கண்கள் அவளது தேகத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தன. இரக்கம், ஆசை, ஏளனம் எனப் பலவாறாகப் பிரதிபலித்த விழிகளின் கொடூரத்தைத் தாங்காமல் அவள் தேகம் கூசியது. மெள்ள நாகரத்தினத்தின் காதருகில், "அக்காவுக்கு உடம்பு அதிகமாக இருக்கிறது. எனக்குப் பயமாக இருக்கிறது" என்று குமுறினாள். மற்றவர் என்ன

என்று கேட்குமுன், "நீ போ! நான் வரேன்" என்று கூறிவிட்டு நாகரத்தினம் சட்டென பழையபடி முகத்தில் மலர்ச்சியை வரவழைத்துக்கொண்டாள். யாவும் ஒரு சில விநாடிக்குள் நடந்தன என்றாலும், மற்றவர்களது கூரிய பார்வைக்கு ஷண்பகம் இலக்காகிவிட்டாள் என்ற எண்ணத்தினால் வெகுண்டது அவள் உள்ளம்.

ஒருவிதமாக யாவரும் படுக்கைக்குச் சென்றபின் நாகரத்தினம் மேலே ஏறி வந்தாள். மூச்சுவிடத் திணறியபடி கிடக்கும் பங்கஜத்தைக்கூடக் கவனியாமல் இடுப்பில் இரு கைகளையும் வைத்தபடி, "ஏண்டி பெண்ணே! என்னை அவமானப் படுத்தணும்னு எத்தனை நாளா திட்டம் போட்டுகிட்டிருக்கே! அத்தனை பேரு நடுவிலே உன் முகத்தைக் காட்டி மினுக்க வந்துட்டியா? நான் சொன்ன பேச்சை கேக்கக்கூடாது. அத்தனை அகம்பாவமா உனக்கு! நீ என்ன செய்வே? தெருவிலே திரியற நாயைக் குளிப்பாட்டி வீட்டிலே வச்சா பெரிய மனுசங்க புத்தி வந்துடுமா? என் கஷ்ட காலம்! அவசரப்பட்டு உன்னைக் கட்டித் தொலைச்சேன். உன் ஜாதிப் புத்தியைக் காட்டிட்டியே!" என்று சுடுமாரி பொழிந்தாள்.

"அக்காவுக்கு உடம்பு ரொம்ப கேவலமாக இருந்தது. அதற்காகத்தான்......" என்று மனம் வெதும்பிய ஷண்பகம் மென்று விழுங்கினாள். அவள் கூறியதைக் காதில் வாங்கிக் கொள்ளாத நாகரத்தினம், "அந்த வேலைக்காரச் சனியன் எங்கே தொலைஞ்சிதோ" என்று முணு முணுத்தபடி பங்கஜத்தைப் பார்த்தாள். சுடுகாட்டில் செத்த பிணங்களைப் பார்த்து அலுத்துப் போன அலட்சிய பாவத்துடன் அவள் பங்கஜத்தைப் பார்த்தது, ஷண்பகத்தின் நெஞ்சை கொதிக்க வைத்தது. இந்த உலகை விட்டுப் பிரிந்துவிடுவேன் என்று ஊசலாடும் அந்த உயிருக்குக் கடைசி நேரத்திலும் ஆறுதலாக ஒருவார்த்தைகூட நாகரத்தினிடமிருந்து வரவில்லை. "நல்ல கல்யாண வேளையிலே அபசகுனம்

மாதிரி அத்தனை பேரு நடுவிலே சொல்ல ஓடிவந்துட்டா. போற உசிரை நிறுத்தியா வச்சிட முடியும் ?'' என்று மீண்டும் முணுமுணுத்த அவள், ஷண்பகத்தை "நீ இங்கேயே இரு. எல்லாம் நான் பாத்துக்கிறேன்'' என்று அதட்டி விட்டு வெளியேறினாள்.

புதுமணத் தம்பதிகளை கொஞ்ச காலம் தனியாகச் சென்று, உல்லாசமாக இருக்க வேண்டி மைசூருக்கு அவசரமாக விமானமூலம் அன்று காலையிலேயே அனுப்பி வைத்தாள் நாகரத்தினம். வந்த விருந்தாளிகளை வெளியேற்றி, வீட்டைப் பழையபடி ஆக்குவதற்குள், பெரிய டாக்டர் இருமுறை பங்கஜத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வந்து விட்டார். மாடிக்கும், கீழுக்குமாக நடந்து நடந்து நாகரத்தினத்தின் கால்கள் இரத்தம் கட்டிவிட்டன. "மூஞ்சியை சதா நீ தூக்கி வச்சுகிட்டு நிக்காதே. இப்படி இருக்கிறதுனாலேதான் வீடு விளங்காமப் போகுது'' என்று எரிந்து விழுந்த நாகரத்தினத்தின் கடும் சொல்லைத் தாள முடியாமல் விக்கி, விக்கி அழுதாள் ஷண்பகம். "போ, இனிமே வெளியே போய்த் தொலை. எல்லாரும் ஒழிஞ்சுட்டாங்க. என் மூஞ்சிக்கெதிரே நிக்காதே. எனக்கு எப்படியோ வருது !'' என்று படபடத்த நாகரத்தினத்திடமிருந்து தப்பித்துக்கொள்ள மானைப்போல பதை பதைப்புடன் கீழே இறங்கினாள். வேகமாகத் தன்னறைக்குச் செல்லக் காலடி வைத்தவள் சட்டென அப்படியே நின்று விட்டாள். ஏனெனில் அறைக் கதவைப் படக்கெனத் திறந்து கொண்டு ராஜேந்திரன் வெளியே வந்தான். அவர்களது அறைக்குள் அவனுக்கு இந்த வேளையில் என்ன வேலை ?

திகைப்புடன் தன்னையே நோக்கி விழித்துக் கொண்டிருந்த ஷண்பகத்தை ராஜேந்திரனும் எதிர் பார்க்கவில்லை. தன்னைச் சமாளித்தபடி அவன் கையிலிருந்த கைக் குட்டையினால் முகத்தை ஒரு முறை துடைத்துவிட்டுக் கொண்டான். ஆடு திருடிய

கள்ளனைப்போல் அவன் விழிப்பதன் அர்த்தம் விளங்காதவளாய், சரேலென அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள் ஷண்பகம். அறையின் ஜன்னலருகிலிருந்த மேஜையின் அருகே நாற்காலி மீதமர்ந்திருந்த சிவஞானம் அவளைக் கண்டதும் துணுக்குற்றார். பிறகு, "நீயா!" என்று அலட்சியமாகக் கூறி விட்டு, மேஜைமேலிருந்த சிறிய கண்ணாடிப் புட்டிகளை எண்ணுவதில் ஈடுபட்டார். அவை என்னவாக இருக்கும் என ஆவல் அடித்துக்கொள்ள சிறிது தைரியமாகவே கணவனருகில் நெருங்கிய ஷண்பகம், அந்தப் புட்டிகளில் ஒன்றைக் கையிலெடுத்துக் கொண்டு, "இதெல்லாம் என்னது?" என்றாள்.

சரேலென அவள் கையிலிருந்த புட்டியைப் பிடுங்கி மேஜைமேல் திரும்ப வைத்த சிவஞானம், "உனக்குத் தெரிந்து என்ன ஆகவேண்டும்? இவையெல்லாம் மருந்துகள்" என்றான்.

"மருந்துகளா?" என்று வியப்புடன் கேட்ட ஷண்பகம் அப்போதுதான் புட்டிகளை நன்கு கவனித்தாள். சிவப்பு நிற திரவம் போன்று விளங்கிய அந்த மருந்துப் புட்டிகளின்மேல் பச்சை நிறக் காகிதத்தில், "உடல் ஔஷதம்" என்ற கொட்டையான தங்க எழுத்துக்கள் மின்னின.

"உனக்கு சதா துக்கப்படத்தானே பொழுதிருக்கிறது. என்னைக் கவனிக்க நேரம் ஏது? அதனால் நானே என் உடம்பைக் கவனித்துக் கொள்கிறேன்." என்று ஏளனமாகக் கூறிய கணவனுக்கு சுடச் சுடப் பதில் கொடுக்கத் தோன்றியது அவளுக்கு. வெளியே ராஜேந்திரன் நின்று ஒட்டுக் கேட்டுக்கொண்டிருக்கலாம் என்ற உள்ளுணர்வு தோன்றவே, அவள் பேச்சை மாற்ற விரும்பி "பங்கஜம் அக்காவுக்கு உடம்பு அதிகமாக இருக்கிறது" என்றாள் கவலையோடு. இதைக் கேட்டதும் அவர் பர பரப்போ, கவலையோ அடையாதவராய், "டாக்டர் என்ன சொன்னார்?" என்று

கேட்டார் கரகரத்த குரலில். "மனித உணர்ச்சியே இல்லாத மிருகமா இந்த மனிதர்!" என்று எண்ணிய ஷண்பகம் பதில் சொல்வதற்குள், மாடிப் பக்கத்திலிருந்து, யாரோ அழகாக ஒப்பாரி இடும் ஒலி கேட்டது!

## 9

இரவு மணி பத்தாகியும், காலையில் பிடித்த மழை ஓயவே இல்லை. பிரளய கால வெள்ளம் போலத் தேங்கி நின்ற மழைத் தண்ணீர் வீட்டு வாயிற்படியை மறைத்துக் கொண்டு நின்றது. இன்னும் வீட்டிற்குள்ளும் வந்து விடுவோம் என்று பயமுறுத்துவது போல் விடாமல் அடித்த மழையுடன் பேரிடியும், மின்னலும் கலந்து கொள்ளவே, குமரப்பா நகரில் ஈ காக்கைகூட வெளியே வரமறுத்து மாலை ஆறு மணிக்கு முன்பே, தத்தம் வீட்டினுள் முடங்கி விட்டது.

குமாரசாமி வீட்டின் சம்பந்தியாகத் தான் மாறி விட்டதிலிருந்து முன்போல், புண்ணியவதி ஜன்னல் ஓட்டையிடமே சரணாகதியாக இருப்பதில்லை. தன் பெண் புவனாவின் கல்யாண விமரிசையையும், வாழ்க்கைத் தரத்தின் அந்தஸ்தையும் பற்றி அவளது திண்ணை மகாநாட்டில் வாய் ஓயாது பேசியிருப்பாள். அவ்வாறு அவள் பேசி மூன்று நான்கு மாதங்களுக்கு மேல் ஓடிவிட்ட போதிலும், தினமும் பழங் கதையையே பேசிப் பிறரை அலுக்க வைத்து விட்டாள். வெளியே அடாது மழை பெய்தது, அவளது அன்றையத் தொண தொணப்பிலிருந்து மற்றவர்களுக்கு விடுதலை அளித்தாலும், புண்ணியவதிக்கு அன்று தெரிந்த ஒரு ரகசியத்தை விடாது யாரிடமாவது சொல்லாவிட்டால் மண்டை வெடித்து விடும் போலிருந்தது. எனவே வெளியே இருக்கும் மழைக்கு அஞ்சி வீட்டிற்குள்ளேயே அமர்ந்திருந்த கணவரை, வாயிற்புறம் யாராவது

வந்தால் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு சமையற் கட்டுக்கு ஓடினுள்.

"தனபாக்கியம்! ஏ! தனபாக்கியம்" என்று மூச்சுவாங்க அவள் கூப்பிட்ட உடனே, "என்னுங்க. கொஞ்சம் கைவேலேயா இருக்கேனே!" என்று பதிலிறுத்தாள் தனபாக்கியம். புவனுவின் கல்யாணத்தி லிருந்தே மற்ற பெண்களைப் போல அவளுக்கும் புண்ணியவதியின் தற்பெருமைப் பேச்சில் ஸ்வாரஸ்யம் குறைந்திருந்தது. 'வேறே வேலே என்ன? எப்பப் பார்த்தாலும், இவபொண்ணு பெருமைதான்' என்ற அசட்டையினுல்தான், வேலேயாக இருப்பதாகக் கூறி விட்டாள். ஆனுல், புண்ணியவதி விட்டால்தானே!

"அட! சும்மா ஒரு பேச்சுக் கேட்டுட்டுப் போங்கறேன்." என்று வலுக்கட்டாயமாக அவளை வரவழைத்து "நம்ப புவனு இருக்குதில்லே. அது முழுவாம இருக்குது!" என்று தன் வெற்றிலேக் காவி யேறிய பற்களேக் காட்டினுள்.

தனபாக்கியத்திற்கும் சிறிது புதுமையான விஷய மாக இருக்கவே, "அப்படியா! ரொம்ப சந்தோஷம். யார் சொன்னுங்க? எத்தனே மாசம்?" என்று கேள்விகளே அடுக்கினுள் ஆவலுடன்.

"இப்பத்தான்! இன்னிக்குக் காலேயிலே உடம்பு சரியில்லேயினு டாக்டர்கிட்டக் காட்டினுங்களாம். நாகரத்தினம்தான் சொல்லி அனுப்பிச்சுது. போய்ப் பார்க்கணும்னு இந்த பாழாப் போன மழை விடுதா?" என்ருள் சந்தோஷமும், சலிப்பும் கலந்த குரலில். அதீதமான உற்சாகத்தால் அவளது குரல் அளவுக்கு மீறி உரத்து ஒலித்தது.

அடுப்பிலே வைத்த சோறு குழைவதைக்கூடக் கவனியாத தனபாக்கியம், "போகட்டும். பேரன் பிறக்கட்டும். அவ்வளவுதான் வேண்டியது" என்ருள் உபசாரமாக.

"அந்த ஏழுமலையப்பன் கிருபைதான் தனபாக்கியம். என்னவோ எப்படியாவது நம்ப குழந்தைகள் சௌக்கியமா இருந்தா நமக்குச் சந்தோஷம்தானே" என்று வேதாந்தமாகக் கூறிய புண்ணியவதி சிறிது நேரம் ஊர் விவகாரங்களைப் பற்றி ருசிகரமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

அடுப்பிலே தீ, சோறு அடிப்பிடிக்கும் வாசனையை உணர்ந்த தனபாக்கியம் சட்டென வேலையில் நோக்கமாகப் போய் விடவே, புண்ணியவதி மீண்டும் முன் ஹாலுக்கு வந்தாள். ஈஸிசேரில் சாய்ந்து கொண்டிருந்த குழந்தைவேலு, "என்ன! ஏதாவது சாப்பாடு கீப்பாடு போடப் போறியா இல்லையா? மணி எட்டடிக்கப் போவுது. நீ என்னடான்னா அப்படியே பேசாம உக்காந்திட்டே" என்றார் பரிகாசமாக.

"சரிதான். சாப்பிட வாங்க. ஏதோ ஒரு சந்தோஷ சமாசாரம் கேட்டா நாலு பேருக்குத் தெரிவிக்காம நமக்குள்ளே வச்சுக்கிறதா?" என்று அவள் முடிப்பதற்குள் குறுக்கிட்ட கணவர், "அதுக்காக பேப்பர்லே போடறதுதானே? இந்த பொம்பிளைங்களுக்கு ஒரு ரகசியமே வச்சுக்கிடத் தெரியாது போலிருக்குது" என்று கடுத்துக் கொண்டார்.

"எதுக்காக ரகசியம் பண்ணனுமாம்! நம்ப குழந்தை எல்லாருமறியத்தானே தாலிகட்டிகிட்டான்னு நான் கேக்கிறேன். அந்த ஷண்பகத்தைப் போலவா என் மகள்னு கேக்கறேன். ஆமா" என்று தன் பருத்த தேகத்தைக் கோபத்துடன் குலுக்கினாள் புண்ணியவதி.

"சும்மா விஷயம் தெரியாம அந்த ஷண்பகத்தைக் கரிக்காதே. உனக்கு அவளைப் பிடிக்கல்லேன்னா விட்டுத்தள்ளு. அதுக்காக கண்டபடி ஒத்தரைக் குத்திக் காட்டாதே. பாவம்! அந்த பொண்ணு முகத்தைப் பார்த்தா பரிதாபமா இருக்குது" என்றார் இரக்கம் தோய்ந்த குரலில்.

“உங்களை அவளுக்கு வக்காலத்து வாங்கிக்கிட்டுப் பேசச் சொல்லலை. அவ இருக்கிற நிலைமைக்கு இப்போ பிள்ளை பொறந்தாலும் அந்த வாரிசுக்கு சொத்து கிடையாதாம். எல்லாம் நான் கேட்டுட்டேன். தெரிஞ்சுக்கோங்க” என்று கையை ஆட்டிப் பேசினாள் அவள்.

“பரவாயில்லையே! மூளையைக் கொஞ்சம் சிரமப் படுத்தி இருக்கிறே! இருந்தாலும் நீ விஷயம் முழுக்கப் புரிஞ்சுக்காமப் பேசாதே. உன் பொண்ணுக்கு குழந்தை பிறந்தா அதுக்கு சொத்து வரும்கிற பேராசையை விட்டுடு. ஏன்னு கேட்டா, ஷண்பகத்தை சட்டப் பூர்வமா ரிஜிஸ்தர் மணம் செஞ்சாகிவிட்டது” என்றார் குழந்தைவேலு.

தன்னையும் மீறி ஒரு ரகசியம் குமாரசாமி வீட்டில் இருக்கிறது என்பதை உணர்ந்த புண்ணியவதி வாயடைத்துப் போனாள். கொஞ்ச நாளாக முகம் கொடுத்துப் பேசும் நாகரத்தினம் கூடவல்லவா அதைக் கூறவில்லை! இந்த அசட்டுப் பெண் புவனகூடவா இந்த முக்கியமான விஷயத்தை அசட்டையாக விட்டுவைக்க வேண்டும்?

“ஏன் அப்படியே முழிக்கிறே. பங்கஜம் செத்த ஒருவாரத்துக்குள்ளே சிவஞானம் அவங்க கம்பெனி வக்கீலைக் கலந்து இது விஷயமாகக் கேட்டது, நடந்தது எல்லாம் எனக்குத் தெரியும். நானும் அப்பக் கூடவே இருந்தேன்” என்று மேலும் ஒரு வெடிக் குண்டைத் தூக்கிப் போட்டார். “தெரிஞ்சுகிட்டேயா இத்தனை நாளும் நீங்க பேசாம இருந்தீங்க” என்று கோபத்துடன் கைகளை ஓங்கி ஓங்கி ஆட்டினாள் புண்ணியவதி.

“எனக்கு உன்னோட்டமா வேறே வேலை இல்லேனு நினைச்சியா? எப்பவுமே பிறத்தியார் கெடணும், தான் வாழணும்கிற புத்தி கூடாது. இந்த விஷயத்திலே நீயும் சரி, உன் மகனும் சரி ஒரே அச்சுத்தான்” என்று

வெறுப்புடன் பகர்ந்த குழந்தைவேலு இடத்தைவிட்டு எழுந்தார். அதுசமயம் படக்கென வாசற்கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான் ராஜேந்திரன். சொட்டச் சொட்ட மழையில் நனைந்தபடி வந்து நின்ற பிள்ளையைக் கண்ட தகப்பனுருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"நல்ல மரத்திலே புல்லுருவி பாஞ்சமாதிரி எனக்கு மகனு வந்து பிறந்தான், சீ!" என்று உருமிய குழந்தைவேலு சமையலறைப் பக்கம் நோக்கி விரைந்தார். கணவனது கோபத்தைக் கண்டு புண்ணிய வதிக்கும் நடுக்கமேற்படவே பேசாது உணவு பரிமாறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக அவளும் அவரைப் பின் தொடர்ந்தாள்.

ஈர உடைகளைக் களைந்துவிட்டு வேறு ஆடை உடுத்திக்கொண்ட ராஜேந்திரனுக்கு, தகப்பனுரின் கோபம் ஒரு பெரிய லட்சியமாகத் தோன்றவில்லை. நியாயம், நேர்மை என்றெல்லாம் வெறும் லட்சியக் கனவுகளையே நினைத்துக் கொண்டிருந்தால், இன்று அவனது சட்டையிலுள்ள இரு பக்கத்துப் பைகளிலும் ரூபாய் நோட்டுகள் குலுங்குமா? அவன் விரலை அசைத்தால் ஆட்டிலிருந்து மாட்டையும், மாட்டிலிருந்து ஆட்டையும் நொடிப் பொழுதில் மாற்றிவிடமாட்டானு? அவனது சக்தி தெரியாமல், ஏதோ ஊரார் சொல்வதை வைத்துக் கொண்டு அப்பா உளறுகிறுரே! அம்மா மட்டும் என்ன? சிவஞானத்தின் சிண்டு தனது கையில் அகப்பட்டிருப்பதை அறியாது, கேவலம் அந்தப் பாஸ்கரனையல்லவா வீட்டு மருமகப் பிள்ளையாக்கி விட்டாள்! அதுமட்டுமா? இத்தனை நாளாக குமரப்பா செங்கல் ஸ்தாபனத்தில் தலையிடாத பாஸ்கரன் திடீரென இப்போது சிவஞானத்துக்கு உதவி செய்வதாக வந்துவிட்டானே! முட்டாள்! இந்த ராஜேந்திரன் இருக்கும்வரை அவனுல் சிவஞானத்தின் விரலைக்கூட அசைத்துவிட முடியுமா?

இவ்வாறெல்லாம் எண்ணித் தனக்குள்ளே மகிழ்ந்த ராஜேந்திரன், மெதுவாக சீழ்க்கை யடித்தபடி கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த கண்ணுடியில் தலையை வாரிக்கொண்டான். அரும்பு மீசையும், குறும்புப் பார்வையும் கொண்ட அவனுக்கு இந்த உலகில் ஒரே ஒரு குறையுண்டு. அதுதான் அவனுக்கேற்ற ஒரு ஜோடிப் புரு இல்லாதது. குமரப்பா நகரில் வசிக்கும் இளம் பெண்களின் சுயசரிதம் முழுவதையும் அலசிப் பார்த்திருக்கிருன். சென்னையிலே சல்லடை போட்டுச் சலித்திருக்கிருன். இன்னும் பெரிய பெரிய இடங்களி லெல்லாம் பார்த்தும் அலுத்திருக்கிருன். இருந்தும் அவனது மனதைக் கவர்ந்தவள் ஒருவருமில்லை.

“இன்னும் துரைக்குத் தீனி திங்கிற நேரம் வரலை யாம். நீ சோறு போடு எனக்கு” என்ற தந்தையின் கூக்குரலும், தொடர்ந்து “வாடா! ராஜா! சோறு ஆறிப் போயிடும்” என்ற தாயின் கொஞ்சலும் கேட்டன.

“மனுஷனை உசிரோட விடமாட்டாங்க” என்று முணுமுணுத்த ராஜேந்திரன் பேசாது சென்று இலையின்முன் அமர்ந்தான். தந்தையை எதிர்த்துப் பேச அவனுக்கு என்றுமே தைரியம் வந்ததில்லை.

குமாரசாமி வீட்டிலும், சமையலறைக்குள் யாவரும் சாப்பிடச் சித்தமாக அமர்ந்திருந்தனர். புவனுவின் வருகையினுல் அந்த வீட்டில் புதிய புதிய கொள்கைகள் பரவிவிட்டன. வீட்டின் எஜமானியாக விளங்கும் நாக ரத்தினத்திடம் எப்போதும் போலப் பெட்டிச் சாவி இருந்தாலும், புவனுவின் கட்டுதிட்டங்களுக்கு உட் பட்டுத்தான் யாவரும் நடக்கவேண்டி இருந்தது. ஆட்டிப் படைப்பவள் புவனுவாக இருந்தாலும், அது பிறர் கண்ணில் தெரியாதபடி நாசூக்காய் நடந்துகொண்டு வந்தாள். கல்வியறிவும், புத்திக் கூர்மையும் கற்றுத் தந்த நளினவழி அவளிடம் நிறைந்திருந்ததை ஷண்பகம்

நன்ருக உணர்ந்திருந்தாள். அவளைப்போல ஷண்பகத்திற்கு அழகாக உடை உடுத்தவோ, கலகலவெனப் பேசவோ தெரியாது. புவனுவின் பேச்சில் நாகரத்தினமே சிறிது மயங்கிவிட்டாள் என்ருல் மற்றவர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா? மனைவியின் ஆலோசனைக்கு இணங்கிய பாஸ்கரன்கூடத் தன் சென்னை வேலையை விட்டுவிட்டு, அண்ணனது கம்பெனி நிர்வாகத்தைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டான்!

இலையில் பரிமாறப்பட்ட உணவு வகைகளைக் கொரித்துக் கொண்டிருந்த ஷண்பகம் அருகில் அமர்ந்திருந்த மற்றவர்களை மெல்லக் கவனித்தாள். அவளருகே சி..ஞானம் அதிகமாகப் பேசாது, லபக் லபக்கென உணவை விழுங்குவதிலேயே கருத்தாக இருந்தார். அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த நாகரத்தினமும், வாத்தியாரம்மா பாலாம்பாளும் புவனுவின் ஸ்வாரஸ்யமான பேச்சில் கலந்து கொண்டபடி உணவிலும் இடை இடையே தம் கவனத்தைச் செலுத்தினர். எதிர்ப்புறமாக அமர்ந்திருந்த புவனு க்ளுக்கெனச் சிரித்து, "என்ன அண்ணி! இலையைப் பார்த்துச் சாப்பிடுங்கள். மனதையெல்லாம் எங்கேயோ வைத்துவிட்டுத் தேட ஆரம்பிக்காதீர்கள்!" என்று ஆர்ப்பரித்தாள். அவள் சிரிக்கும்போது, அவளது கன்னங்களிலே இலேசாகத் தோன்றி மறைந்த குழிகளின் அழகை ரசித்தவாறு பாஸ்கரன் அமர்ந்திருந்தான்.

"அண்ணியைச் சொல்வானேன். இப்போது நான் இல்லையா? மனதையெல்லாம் உன்னிடமே பறி கொடுத்துவிட்டு" என்று உல்லாசமாகக் கூறிய பாஸ்கரனும் மற்றவர்களுடன் சேர்ந்து சிரித்தான். அவர்கள் இப்படி வெளிப்படையாகக் காதல் உரையாடுவது முதன் முதலில் நாகரத்தினத்திற்கு அதிர்ச்சியையும், அருவருப்பையும் கொடுத்தது. பிறகு நாளாவட்டத்தில் 'சிறிசுகள், இந்தக் காலத்து நாகரிகம்' என்று அவளே

சமாதானப்படும் அளவுக்கு வந்து விட்டாள். எனவே, அன்று பாஸ்கரன் பேசியதை அவளும் ரசித்தாள்.

காதல் பாதை கரடு முரடானது என்பார்கள். ஆனால், புவனு—பாஸ்கரன் விஷயத்தில் அது பூவினும் மென்மையானதாக இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒன்ருக வளர்ந்து, இளம் பருவ முதலே ஒருவர்க்கொருவர் பழகிப் பிறகு ஏற்பட்ட அன்பின் பந்தம் அவர்களிடையே அழியாது நின்றது. அவர்கள் ஆதர்ச தம்பதிகளாகவே வாழ்ந்தனர். அவர்களிருவரது வாழ்வைப் பார்க்கும்போது, இரண்டு சிட்டுக்குருவிகள், அழகான நீலவானத்தே ஆனந்தமாகச் சிறகடித்துப் பறப்பதைப்போல ஷண்பகத்துக்குத் தோன்றும். தங்களது இன்ப வாழ்வில் சுற்றிலுமுள்ளவர்களையும் மறந்துவிடவில்லை என்பதுபோல புவனுவும், பாஸ்கரனும் நடந்து கொண்டனர்.

வீட்டினுள் பலவித அலங்காரங்கள், புதுவிதமான மேஜை விரிப்புகள், திரைச் சீலைகள் யாவும், புவனுவின் கைவேலையின் திறமையை அறிவித்தவண்ண மிருந்தன. தோட்டக்காரர்கள் சின்ன எஜமானியின் புகழுரைக்காக பங்களாத் தோட்டத்தை இந்திரலோகமாக்கிவிடத் திட்டமிட்டிருப்பவர்களைப் போலப் போட்டி போட்டுக் கொண்டு வேலை செய்தனர்.

வீட்டினுள் பரவி நின்ற மயான அமைதி போய்ச் சிரிப்பும், கும்மாள கோஷமும் சதா நிறைந்திருந்தது. பங்கஜத்தின் மறைவுக்குப்பின் மேலும் துக்கத்தில் மூழ்கி இருந்த வீட்டில் இத்தகைய மாறுதலைப் பெரிதும் வரவேற்ருள் நாகரத்தினம். வேளை தவருது சாப்பிட்டாக வேண்டும்; தவறினல் சாப்பாடு இல்லை என்பது போன்ற கடுமையான சட்ட திட்டங்களையும் அவள் ஏற்கச் சித்தமானுள். ஏனெனில் சிவஞானம்கூட அதற்குப்பின் சிறிது நாட்கள் ஒழுங்காக வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார். எல்லாவற்றையும்விட சீரழிந்து

கொண்டிருந்த கம்பெனி நிர்வாகத்தை பாஸ்கரன் பொறுப்பேற்று நடத்த முன்வந்தது பற்றி அதிக மன நிம்மதியை நாகரத்தினம் அடைந்தாள்.

புவனுவின் வருகையால் ஷண்பகத்திற்கு மட்டும் நிம்மதி இல்லையா என்ன ? புவனுவின் திருமணத்தன்று தடை உத்திரவை மீறி வெளியே எல்லோருடைய எதிரிலும் வந்துவிட்ட குற்றத்திற்காக அவள் நாகரத்தினத்திடம் வாங்கிய திட்டுகள் ஒரு விதத்தில் நன்மையாகவே முடிந்தன எனலாம். அவள் அவ்வாறு வெளியே வந்ததினுல், மற்றவர்களது பார்வைக்கு இலக்காகி ஆவலையும் தூண்டிவிட்டாள். நாகரத்தினம் பயந்தபடி ஊரில் பலர் பலவிதமாகப் பேச ஆரம்பிக்கவே, அவள் தம்பியிடம் சொல்லி உடனுக்குடன் சட்டரீதியாகவும் ஏதாவது ஏற்பாடு செய்துவிட்டால் ஷண்பகத்தின் விவாக விஷயம்பற்றி பிறர் முன்னிலையில் தலை நிமிர்ந்து நடக்கத் தன்னுல் முடியும் என நம்பினுள். பாஸ்கரனும், புவனுவும் அவளது எண்ணத்தைத் தூண்டவே, ஷண்பகம் உரிமையுடன் அந்த வீட்டில் உலாவமுடிந்தது.

பாஸ்கரன் புவனுவிடம் அவளைப்பற்றி உயர்வாக எடுத்துச் சொல்லி இருக்கிறுன் என்பதையும் புவனுவிடமிருந்து அறிந்தபோது, நன்றிப் பெருக்கினுல் அவள் இதயம் ஒருமுறை விம்மித் தணிந்தது. இவ்வளவிற்கும் அவள் பாஸ்கரனுடன் நெருங்கிப் பழகினதும் கிடையாது. சந்தித்ததும் வெகு சில தினங்களே. அப்படியிருந்தும் அவளிடம் அவன் அனுதாபம் காண்பித்தது அவனது உயர்ந்த தன்மையைத்தானே குறிக்கிறது ?

“அண்ணி! உங்கள் முகத்தில் சிரிப்பை வரவழைத்து விட்டுத்தான் மறுகாரியம் பார்க்கப் போகிறேன்” என்று புவனு முதன் முதல் அவளைச் சந்திக்கும் போது வேடிக்கையாகக் கூறினுள். அதை உண்மை என வெகு சீக்கிரத்திலேயே நிரூபித்தும் விட்டாளே !

ஷண்பகம் மறுத்தாலும் கேட்காது அவளுக்கு விதம் விதமான அலங்காரங்கள் செய்வாள். பாலாம்பாளிடம் பாடம் கற்கும்போதும் சில சமயங்களில் கூடவே இருந்து ஏதாவது கேள்விகள் கேட்டு, சர்ச்சை செய்ய ஆரம்பித்து விடுவாள். வலுக்கட்டாயப் படுத்தியாவது வீட்டில் உள்ளவர்களை, வாரம் இருமுறை சென்னை நகருக்கு நாடகம், சினிமா போன்ற கேளிக்கைகளைக் காண இழுத்துச் சென்று விடுவாள். இவ்வாறு கடந்த நான்கு மாதங்களாக வீட்டில் நிலைத்து வரும் இதே இன்பம் என்றும் நிரந்தரமாக நிற்குமா என்ற சந்தேகம் அவள் மனதில் அடிக்கடி தோன்றிக் கொண்டே இருந்தது.

"அண்ணியைப் பாரு புவனு! எல்லாரும் சாப்பிட்டு முடிந்தும், இலையிலேயே சாப்பிடாமல் தூங்கப் பார்க்கிறுர்கள்" என்று பாஸ்கரன் பரிகாசமாக உரக்கக் கூறியதும் யாவரும் கொல்லென்று நகைத்த ஒலியைக் கேட்டு நாணத்தினுல் முகம் சிவக்க எழுந்த ஷண்பகம், அவசரமாக கை கழுவப் பின்கட்டிற்குச் சென்றுள்.

கூடத்துச் சோபாவில் சாய்ந்த வண்ணம், வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த கூட்டத்திடையே கலக்காமல், மெதுவாகப் படியேறித் தன்னறைக்குள் சென்றுள் ஷண்பகம். அறைக் கதவைத் தாளிட்ட அவள், திரும்பியபொழுது அறை மேஜையருகே சிவஞானம் "உடல் வலிவு ஔஷதம்" நிறைந்த பாட்டிலை வாயருகே கொண்டு போனவர், எதிர்பாராமல் சடக்கெனக் கீழே நழுவவிட்டதைக் கண்டாள். குற்றம் புரிந்துவிட்டவர் போல் அவர் விழிப்பதைக் கண்டதும் ஒன்றும் விளங்காமல், கீழே விழுந்து உடைந்து கிடந்த கண்ணுடித் தூள்களை வெறித்துப் பார்த்தாள்.

"தொடாதே! அதை நீ தொட வேண்டாம். நான்......நானே சுத்தம் செய்து கொள்கிறேன்" என்று

திக்கிய சிவஞானத்தின் பீதி நிறைந்த முகம் அவளைத் திகைக்க வைத்தது. கண்ணுடித் தூள்களை அப்புறப் படுத்தக் கீழேகுனிந்த ஷண்பகத்தின் முகத்தில் குப்பென அடித்த போதை மணம், ஒரு பயங்கர உண்மையை விளக்கியது. மருந்துப் புட்டிகளில் அடைத்து விற்கப் படும் சரக்கு சட்டவிரோதமான வஸ்து! நிமிர்ந்து மேஜையைப் பார்த்தாள். மேஜைமீது வைக்கப்பட் டிருந்த புட்டிகள் அனைத்தும் அவளைப் பார்த்துச் சிரிப்பதுபோலிருந்தன !

## 10

**ஹா**ல் சோபாவின்மீதும், தரையில் விரித்திருந்த இரத்தினக் கம்பளத்தின்மீதும் ஒரு பெரிய புடவைக் கடையையே பரப்பிவிட்டது போலக் குவித்திருந்த சேலைகளை ஒன்று ஒன்ருகப் பொறுக்குவதில் ஈடுபட் டிருந்தனர் யாவரும். சரியாக வாரப்படாததால் கலைந்து கிடந்த கூந்தலை அள்ளி அலட்சியமாகச் சொருகிக் கொண்ட புவனு, புடவை நிறத்தைத் தேர்ந்தெடுப்பதில் கருத்தாயிருந்தாள். தனது பருத்த சரீரத்தைத் தூக்க மாட்டாமல் கஷ்டப்படும் புண்ணியவதி கூட, சிரமத் தைப் பொருட்படுத்தாது குனிந்து நிமிர்ந்து புடவை களைப் பிரித்துப் பிரித்துப் பொருத்தம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். நாகரத்தினம் சிறிது உற்சாகமான குரலில், “நல்ல அகலக் கரை சரிகை போட்ட கறுப்புப் புடவை இருந்தால் எடுத்துப் போடப்பா” என்று புடவைக்காரனிடம் கம்பீரமாகக் கூறிவிட்டு, புவனுவை அர்த்த பாவத்துடன் பார்த்துச் சிரித்தாள்.

சோபாவின் பின்னுல் தயங்கி நின்ற ஷண்பகத் திற்குத் திரும்பிச் சென்று விடலாமா என்று கால்கள் துருதுருத்தன. வரப்போகும் விசேஷத்திற்காக புவனு

வுக்குப் புடவை எடுக்கும் இடத்தில் அவளுக்கு என்ன வேலே ? மற்றவர்கள் கொண்டாடுவதைப் போலவே தனது ஒரே பெண்ணின் பூச்சூட்டலே விமரிசையாக நடத்தத் திட்டம் போட்டிருந்தாள் புண்ணியவதி. நாகரத்தினம் தன்னேச் சமதையாக நடத்தவில்லே என்ற குறை அவளுக்குத் தீர்ந்துபோய் விட்டதுடன், நாக ரத்தினத்தின் சம்பந்தி என்ற ஹோதாவில் அட்டகாசங் களும், பெரிய மனிதர்போல நடிக்கும் அகம்பாவப் பேச்சும் அதிகரிக்கலாயின. புவன தாய் ஆகப்போகும் செய்தி கேட்ட அன்றிலிருந்து அவள் பெண்ணின் பின்னலேயே சுற்றித் திரிந்து கொண்டிருந்தாள்: 'குளிர் காற்றுத் தாங்காது' என்பாள். 'காரிலே ரொம்ப தூரம் போகக்கூடாது. உடம்பு அலுங்குமே!' என்று உருகுவாள். 'நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டால் தொண்டை கட்டிவிடுமே!' என்று பதறு வாள். இவ்வாறு அவள் காட்டிய அதிகப்பிரசங்கித் தனமான சலுகைகளேயெல்லாம் கண்டும் காணுதவள் போல் நாகரத்தினம் இருந்து விட்டாள். நாகரத்தினத் தின் பெரிய மனுஷத்தனத்திற்குத் தான் ஒன்றும் குறைந்து விடவில்லே என்பதுபோல, புவனுவின் வளேக் காப்பிற்காக சிவப்புக் கற்கள் பதித்த வளேயல்களேச் செய்து வைத்திருந்தாள். அந்தக் காரியத்திற்கு சிகரம் வைத்தாற்போல அழகான புடவை ஒன்றையும் எடுத்து விட்டால் நன்ருயிருக்கும் என்றுதான் அன்று காலே புடவைக்காரனே அங்கு வரச் சொல்லி இருந்தாள். பலரக புடவைத் தினுசுகளே அவன் பரப்பினதும், புவன ஓட்டமாக ஓடி ஷண்பகத்தை அழைத்து வந்து ஆலோசனே கேட்டது, புண்ணியவதிக்கு கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லே. அதனுல் மட்டுமல்ல. அவளுக்கு ஷண்பகத்தை என்றைக்குமே பிடிக்காது. எங்கோ அனுதையாகக் கிடந்தவளுக்கு இத்தனே அதிர்ஷ்டமா என்று ஆதியில் எழுந்த பொருமை காரணமாக, சமயம் நேரும்போதெல்லாம் அவள் ஷண்பகத்தை வார்த்தை யால் குத்திக் காட்டத் தவறுவதில்லே.

புவனுவின் வற்புறுத்தலுக் கிணங்கி ஏதாவது இரண்டு வார்த்தைகள் ஷண்பகம் பேசிவிட்டால், "அப்படிச் செய்வது எங்கள் வழக்கமில்லை !" என்று பெரிய மனிதத் தோரணையில் மட்டம் தட்டுவாள். "உனக்குப் பேசத் தெரிந்தால் பேசு. இல்லாட்டி வாயை மூடிக்கிட்டு இரு. எல்லார் நடுப்பறவும் உனக்கு ஒழுங்கா பேசிப் பழக்கமுண்டா ?" என்று நாகரத்தினம் கடுமையாகக் கூறும் அளவுக்கு விஷயத்தைப் பெரிதாக வளர்த்து விடுவாள். ஷண்பகம் பதில் பேசாது இருந்தாலும், "என்ன இன்னிக்கு நம்ப ஷண்பகத்துக்கு மௌன விரதமோ ?" என்று கிண்டலாகக் கூறுவாள். புவனு ஷண்பகத்துடன் பேசிப் பழகுவதையும் அவள் கண்டிக்கத்தான் செய்தாள். "நீ என்ன அவளுக்குத் தோழியா ! அவளுக்குச் சீவிச் சிங்காரிச்சுக்கிட்டுத் திரியறே" என்று பலதடவை மகளைக் கடிந்து கொண்டிருக்கிறுள். அவள் எப்பாடுபட்டும் புவனுவின் அன்பை மாற்ற முடியவில்லை. "அண்ணியை நல்லா கவனிச்சுக்கணும்னு அவர் சொல்லி இருக்காரம்மா" என்று கூறி அடக்கி விட்டாள் புவனு. "பெரிய லட்சுமணர் உன் புருஷன். அண்ணி மேலே ஒரே பக்தி வழியுது" என்று கசந்து கொண்ட புண்ணியவதிக்கு ஷண்பகத்தின்மீது துவேஷம் பொங்கிக் கொண்டிருந்தது.

"எல்லாரும் எள்ளை உணத்தினு எலி தன் வாலை உணத்தின கதையா இவளுக்கு இங்கே என்ன வேலை" என்று மனதிற்குள் சினந்த புண்ணியவதி ஏளனமாக ஷண்பகத்தைப் பார்த்தாள். தன்னைப் புண்ணியவதி துச்சமாக மதிக்கிறுள் என்பதை நன்கு அறிந்திருந்த ஷண்பகம் என்ன செய்வது என்ற தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருந்தாள்.

"அண்ணி ! இந்த நீல நிறம் நன்ருகஇருக்கிறதா ?" என்று ஷண்பகத்திடம் ஒரு புடவையை நீட்டினுள் புவனு.

நள்ளிரவின் கருமை கலந்த அழகான நீல நிற உடலில் மஞ்சள் நிறக் கரையும், அதன் உட்புறத்தில் சரிகையால் அழகிய வேலைப்பாடமைந்த பூக்களும் பார்க்க அது கவர்ச்சியாக இருந்தது.

“கறுப்புத்தான் புவனு எடுக்கவேண்டும் என்று சொல்வார்கள்” என மெதுவாகக் கூறிய ஷண்பகம் புடவையின் மென்மையை விரல்களால் தொட்டுப் பார்த்தாள்.

“புடவை கசங்கிவிடப் போகுது. கொஞ்சம் ஜாக்கிரதையா பாக்கணும்” என்று புண்ணியவதி பேசிய மொழிகள் ஷண்பகம் மனதை நோகச் செய்தன. தனக்குப் புடவை நோட்டம் பார்க்கத் தெரியாது என அவள் குத்திக் காட்டுகிறாள் என்பதை உணர்ந்து விட்ட ஷண்பகம் சட்டென புவனுவிடமே புடவையைக் கொடுத்துவிட்டு, “எனக்கு என்ன தெரியும் புவனு? ஏதோ கறுப்புத்தான் நல்லது என்பார்கள்” என்றாள்.

“உன்னை வந்து ஆசையா கேட்டுதே அந்தப் பொண்ணு. அதைத்தான் சொல்லணும். ஒரு புடவைக்கு இரண்டு புடவையா இருக்கட்டுமேன்னு சொல்லத் தெரியாது? இதிலே கூடவா பஞ்சம்” என்று பல்லைக் கடித்த நாகரத்தினத்தின் மொழிகள் ஷண்பகத்திற்கு நெருப்பிலிட்டது போலிருந்தது.

“அண்ணியை எதற்குக் கோபிக்கணும். நான் தானே கேட்டேன். ஆனால், எனக்கு இந்த நீலநிறம் பொருத்தமாகாதே. அண்ணியின் சிவந்த மேனிக்கு இந்த நிறம் எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா? அதிலும் இதற்கேற்றபடி ஒரு மஞ்சள் பட்டு ரவிக்கையையும் போட்டுக்கொண்டு......அடாடா! அண்ணி உங்களை என் கற்பனையிலேயே பார்க்க முடியவில்லையே” என்று குதூகலமாகச் சொல்லிக்கொண்டு வந்த புவனுவை, “ஏய்! புவனு! உனக்கென்ன பயித்தியம் பிடிச்சுட்டுதா? உனக்குத்தான் புடவை வாங்கப்

போகிறதே தவிர அவளுக்கா?'' என்று கடிந்து கொண்டாள் புண்ணியவதி.

இதற்குள் எதிர்பாராத விதமாக அங்கு வந்த பாஸ்கரன் மாமியாரின் பேச்சைக் கேட்டுவிட்டு, "ஏன்? அண்ணிக்கும் ஒன்று வாங்கிவிட்டால் ஆயிற்று. இல்லையா புவனு?'' என்றான் மனைவியைப் பார்த்தபடி.

மருமகப் பிள்ளையைக் கண்டு பரபரப்படைந்த புண்ணியவதி, "அதற்கில்லை தம்பி, இப்ப புவனுவுக்கு விசேஷம் வரப்போவுது. வாங்கணும். ஷண்பகத்துக்கு அப்படி இல்லை பாருங்க'' என்றாள் வினய பாவத்துடன்.

"ஆமாம்! அவளுக்கும் எனக்கும் விசேஷம் ஒண்ணு வரப்போவுதா? எங்கேயிருந்தோ கொண்டு வந்தேன் ஒரு மலடியை'' என்று ஆக்ரோஷத்துடன் கூறிய நாகரத்தினம் படீரெனத் தன் தலையில் ஆங்காரத்துடன் அடித்துக்கொண்டாள்.

மற்றவர்கள் எதிரில் அண்ணியை இப்படி அவமானப்படுத்தியதைச் சகிக்க முடியாத பாஸ்கரன், "அக்கா! நீங்கள் பேசுகிற அர்த்தத்தை உணர்ந்துதான் பேசுகிறீர்களா? ஒரு பெண்ணின் மனதை நோகவைத்த தவறு போதாதென்று மறு முறையுமா, உங்களது கடும் சொற்கள்? பழைய நினைவு போய்விட்டது போலிருக்கிறது'' என்று சீற்றத்துடன் பேசினான்.

ஷண்பகத்தால் அதற்கு மேல் நிற்க முடியவில்லை. ஆயிரமாயிரம் ஊசிகளைக்கொண்டு அவளது ஹிருதயத்தைத் துளைத்திருந்தால்கூட அப்படி வலித்திருக்குமோ என்னவோ! ஆனால், அதைவிடப் பல மடங்கு வேதனையை அவளது ஹிருதயத்தில் ஊடுருவிச் சென்ற சொல்லம்புகள் தாக்கின. பிறர் எதிரில் ஏற்பட்ட அவமானம் தாங்கமாட்டாமல் அவளது தேகம் நடுங்கியது. தன்னையும் மீறி எழுந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த மாட்டாதவளாய், மாடிப் படிகளை நோக்கி ஓடினாள்.

"ஒரு பெண்ணை எவ்வளவு தூரம் உங்களால் துன்புறுத்த முடியும் அக்கா? கூட்டில் நீங்களாக அடைத்து வைத்த கிளியை, உங்கள் கையாலேயே கோல்கொண்டு குத்திக்கொண்டே இருக்கிறீர்கள். என்ன ராட்சஸ இன்பம்!" என்று ஏளனமாகக் கூறிவிட்டு மனைவியின் பக்கம் திரும்பி, "புவனா! அண்ணிக்கும் நீ புடவை வாங்குவதாக இருந்தால் நல்லது. இல்லாவிட்டால் புடவையே வாங்க வேண்டிய அவசியமில்லை" என்று கண்டிப்புத் தொனிக்கும் குரலில் சொல்லி மறு விநாடி புண்ணியவதியைச் சுட்டெரித்து விடுவதுபோலப் பார்த்துவிட்டு வெளியேறினான்.

தான் அன்று விழித்த முகத்தைச் சபித்துக்கொண்ட புடவைக்காரன் பிரித்த புடவைகளை அடுக்கி வைத்தபடி "ஏம்மா! மறுபடி சௌகரியமா எப்பப் பார்க்கலாம்?" என்று தந்திரமாகக் கேட்டு வைத்தான். மற்றவர்கள் பதில் சொல்வதற்குள் "இன்றைக்குப் பொறுக்கின இரண்டு புடவைகளுமே இருக்கட்டும். நீங்கள் பணத்தை வாங்கிக்கொண்டு போகலாம்." என்று தீர்மானமான குரலில் கூறினாள் புவனா. செய்வதின்ன தென அறியாத மற்ற இருவரும் ஊமைகளைப்போல விழித்தனர்.

முகம் சிவக்க அழுதுகொண்டிருந்த ஷண்பகத்தை எதிரே அமர்ந்திருந்த பாலாம்பாள் தன் தங்க பிரேமிட்ட மூக்குக் கண்ணாடி வழியே உற்றுப்பார்த்தார். ஷண்பகம் அந்த வீட்டில் எப்படி நடத்தப்படுகிறாள் என்பதையும், மற்றவர்களது குண குணங்களையும் அவர் நன்கு அறிவார். இருந்தும் வெளியே எதையும் கவனியாதவள் போலக் காண்பித்துக்கொண்டுதான் இத்தனை நாட்களாக இருந்து வந்தார். கூரிய அறிவும், தெளிந்த ஆற்றலும், வாய்ந்த ஷண்பகத்தை மாணவி என்ற முறையில் ஆரம்பத்தில் பிடித்துப்போயிருந்தது. அவ்வளவு எளிதில் எல்லா விஷயங்களையும் புரிந்துகொள்ளக் கூடிய ஷண்பகத்திற்குக் கல்வி போதிப்பதிலே ஓர் இன்பத்

தைக் கண்டார். எத்தனையோ மாணவ, மாணவிகளுக்கு அவர் அறிவூட்டியிருக்கிறார். இருந்தாலும் ஷண்பகத்தைப்போன்று மற்ற எவரிடத்திலும் அவருக்கு அன்பு ஏற்படவே இல்லை. தாய் தந்தையற்ற பெண், நாகரத்தினத்தின் சுயநல மனப்பான்மைக்குப் பலியான பேதை, வாயைத் திறக்கத் தெரியாத கோழை என்றெல்லாம் ஷண்பகத்தின்மீது அனுதாபம் முதலில் பிறந்தது. பிறகு நாளடைவில் இருவரிடையேயும் நெருக்கம் அதிகமாக ஆக சொல்ல முடியாத ஒரு பிணைப்பு ஏற்பட்டது. ஷண்பகத்தை முகம் மலரச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் பாலாம்பாள் ஆறுதலை அளிக்கும் படியான முறையில் கல்வி போதித்தார்.

அன்று காலை நடந்த சம்பவத்தைப்பற்றி இம்மியளவு கூட அவருக்குத் தெரியாததால், ஷண்பகத்தின் மன வருத்தத்திற்குக் காரணம் என்னவென திகைத்தார். வேதனைப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒருவரை அவரது வேதனைக்குக் காரணம் என்ன என்று கேட்பதால், அவரது வேதனை பன்மடங்கு அதிகரிக்குமேயன்றிக் குறையாது என்பதை நன்கு உணர்ந்த அவர் வழக்கம் போலத் தமிழ்ப் பாடலை ஆரம்பித்தார். இடையே போடப்பட்டிருந்த மேஜைமீது வைத்திருந்த புத்தகத்தை எடுத்துப் பிரித்து வைத்துக் கொண்டு, "ஏனம்மா! ஷண்பகம். இன்னைக்கு தமிழ்ச் செய்யுள் ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டார்.

எதிரே பாடங்கேட்க வந்தமர்ந்து கொண்ட ஷண்பகம் வருத்தம் தோய்ந்த குரலில், "சரி" என்று கூறிவிட்டுக் குறிப்பு எழுதிக்கொள்ளும் மாணவியைப் போல் நோட்டுப் புத்தகமொன்றைப் பிரித்து வைத்துக் கொண்டு எழுதுவதற்குப் பேனாவும் கையுமாக ஆயத்தமானாள்.

கடைக் கண்ணால் அவளது வாடிய வதனத்தைக் கவனித்த பாலாம்பாள் தொண்டையை ஒரு முறை கனைத்துவிட்டுக் கொண்டு,

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ
பாவியேனுடைய"

என்ற பாடலைப் படித்து விளக்கம் கூற ஆரம்பித்தார். விளக்கம் எழுத ஆரம்பித்ததைத் திடீரென பாதியில் 'டக்' கென நிறுத்திய ஷண்பகம் கரகரத்த குரலில், "தயவு செய்து தவருக நினைத்துக் கொள்ளாதீர்கள். வேறு பாடம் ஏதாவது எடுக்கிறீர்களா?" என்ருள். அவளது தடுமாற்றத்தைக் கவனியாத பாலம்பாள் தனக்குள் எழுந்த வியப்பைக் கட்டுப் படுத்திக்கொண்டு ஆங்கிலக் கவிதைத் தொகுதியிலிருந்து ஒன்றை எடுத்து விளக்கம்கூற ஆரம்பித்தார்.

வில்லியம் கூப்பர் என்ற கவிஞர் தமது ஆருவது வயதில் தாயை இழந்தவர். தாய்மையின் தூய அழகு வடிவையெல்லாம் சோக கீதமாக இசைத்து, சொல்லிலே வடித்து கவிதையாக வார்த்து எடுத்திருந்தார். தாயின் அன்பு ஸ்பரிசம் படவில்லையே என்ற ஏக்கம் இழைந்து ஓடிய அக்கவிதையைப் பாலாம்பாள் அற்புதமாக விளக்கம் சொல்லிக்கொண்டே வரும்போது ஷண்பகம் திடீரென இருப்பிடத்தை விட்டு எழுந்தாள். "மன்னிக்க வேண்டும். எனக்குத் தலைவலியாக இருக்கிறது. இன்றைக்குப் பாடம் வேண்டாம்." என்ருள் சிரமத்துடன். இதைச் சற்றும் எதிர்பாராத பாலாம்பாள் புத்தகத்தை மேஜைமீது போட்டுவிட்டு, வேகமாக எழுந்து ஷண்பகத்தின் அருகில் சென்ருள். "என்னம்மா ஷண்பகா! என்றைக்குமே பாடம் கற்றுக் கொண்டது போதாதென்று துடிப்பியே, இன்றைக்கு உனக்கு என்ன வந்து விட்டது? உடம்புக்குச் சரியாக இல்லையா? முகமெல்லாம் சிவந்து கிடக்கிறதே" என்று குழைவான குரலில் கேட்டபடி நெற்றிமீது கை வைத்துப் பார்த்தார். உணர்ச்சி வேகத்தில் ஷண்பத்தின் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. அதற்குமேல் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாதவளாய், சிறு குழந்தை போலத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்

தாள். அவள் கண்களில் பெருகிய கண்ணீரைக் கண்டு மனம் உருகிய பாலாம்பாள் மெதுவாக அவளைத் தன் தோளில் சாத்தியபடி, தம்முடைய அறைக்கு அழைத்துச் சென்று தமது கட்டிலின்மீது உட்கார வைத்தார். அருகே அமர்ந்து கொண்ட அவரும், ஷண்பகம் வாய் விட்டு அழுது முடிக்கும் வரை பொறுமையுடன் ஆவலை அடக்கியபடியே பேசாமல் இருந்தார்.

கண்ணீரிடையே, விம்மலுடன் திணறியபடி புடவைச் சம்பவத்தைக் கூறி முடித்த ஷண்பகத்தை இரக்கத்தோடு பார்த்தாள் பாலாம்பாள். "ஷண்பகா! நீ தைரியசாலியான பெண்; மனத் திடம் வாய்ந்தவள் என்றல்லவா நினைத்தேன். இதற்காகவா வருத்தப் படுவது?" என்று செல்லமாகக் கடிந்து கொண்ட வண்ணம், அன்புடன் அவளது தலைமயிரைக் கோதி விட்டார்.

"அப்படிச் சொல்லாதீர்கள். எனக்குத் தைரியம் இல்லாமல் இல்லை. ஆனால், கொடுமையான மனதில்லை. அந்த வார்த்தைகளின் கொடுமைகளைவிட நான் ஈட்டி முனையைத் தாங்கிக் கொள்வேன். எல்லாவற்றையும் விட அந்தப் புண்ணியவதின் கொடூரமான பார்வையின் ஏளனத்தையும், வார்த்தைகளில் தொனிக்கும் எக்காளத்தையும் என்னால் பொறுக்கவே முடியவில்லை. நான் அந்த அம்மாளுக்கு என்ன செய்துவிட்டேன்? ஏன் என்னைக் கண்டால் அவர்களுக்குப் பிடிப்பதில்லை? அவளுடைய வயிற்றில் பிறந்த மகள் புவனா என்னிடம் தன் உயிரையே வைத்திருக்கிறாள் என்றால் மிகையில்லை. உங்களிடம் இன்று வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். நீங்கள் என் உள்ளத் துடிப்பை முழுவதும் உணர்ந்த பின் சொல்லுங்கள். நான் அனாதை என்றுதான் நாகரத்தினம் தன் சுயகாரியத்திற்கு என்னைப் பலியாக்கினாள். அதே எண்ணத்தால் என் கணவர் என்னை அலட்சியமாக நடத்தினார். புண்ணியவதி பொறாமைப் பட்டாள். புவனா பரிதாபப்பட்டாள்.

ராஜேந்திரனைப் போன்ற விஷமக்காரர்கள் ஆசைக் கனல் பொங்கும் பார்வையால் என்னை விழித்துப் பார்க்கிறார்கள். இவர்களிடையே தவிக்கும் என்னைக் கண்டு பாஸ்கரன் அனுதாபப்படுகிறார். ஆனால், எனக்காக, எனக் கென்று அன்பு பாராட்ட இந்த உலகில் யாருமே இல்லையா என்று என் உள்ளம் ஏங்கியது. இந்த சுகபோக வாழ்க்கையை அனாதைப் பெண்ணுக்குக் கொடுத்து விட்டோம் என்ற மமதையில், நாய்க்கு மாமிசத் துண்டை வீசிவிட்ட எஜமானனின் அகந்தைதையைப்போன்று நாகரத்தினம் என்னை நடத்துகிறாள். அவளிஷ்டப்படி நான் குழந்தை பெறவில்லை. எனக்கு முன் புவனாவிற்கு அந்தப் பாக்கியம் கிட்டி விட்டதே என்ற ஆத்திரம் அவள் அகத்தை மறைத்து விட்டது. என்னைப் பலர் எதிரில் 'மலடி' என்று சொன்னதை எப்படி நான் சகிக்க முடியும்? ஒரு பெண்ணுக்கு அத்தகைய ஆசை இருந்தும் பல காரணங்களை முன்னிட்டுப் பிள்ளை இல்லாத நிலை ஏற்பட்டால், அவளை எப்படிக் குறைகூற முடியும்? சொல்லுங்கள்! அவளைப் படைத்தவனைத்தானே குறை சொல்ல முடியும்?" என்று மூச்சுவிடாது பேசினாள் ஷண்பகம்.

பாலாம்பாளுக்கு என்ன செய்வதென்றே விளங்க வில்லை. ஷண்பகம் இவ்வளவு வெளிப்படையாக, உள்ளக்கிடக்கைகளை அடுக்கிவிடுவாள் என அவள் நினைக்கவில்லை. "ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? இப்போது நினைக்கிறேன். என்னைவிடப் பங்கஜம் புண்ணியசாலி. அன்பில்லாத வீட்டில் இருக்கவே கூடாது என்று போய்விட்டாள். ஆனால், நான்தான் இங்கே வெந்தழலில் உழன்று கொண்டிருக்கிறேன். நாகரத்தினம் என்னை 'மலடி' என்று சொல்லிக்காட்டும் போதே, சுடச்சுடப் பதில் கொடுத்து அவள் முகத்தில் கரியைப் பூசி விட்டிருப்பேன். ஆனால், என் மனதில் அத்தகைய கொடூரத்தன்மை இன்னும் ஏற்படவில்லை.

அவளுக்கும் அந்தப் பாக்கியம் கிட்டவில்லை என்பதை அவள் மறந்துவிட்டாள்! ஆனால் நான் அந்த அபாக்கிய நிலையை அடையவில்லை என்பதை அவள் உணர்வதற்குள் என் உள்ளப் புண்ணைக் குத்திக் கிளறி விட்டாள்'' என்று ஆவேசத்துடன் கூறிய ஷண்பகம் மேலும் தொடர்ந்து, "குறுக்கே பேசாதீர்கள்! நீங்கள் ஏதோ கேட்க வந்ததை நான் அறிவேன். இந்த சந்தோஷச் செய்தியை ஏன் உடனே அவளுக்குத் தெரிவிக்கவில்லை என்றுதானே! ஆமாம்! நான் அன்று தான் அதைச் சொல்ல நினைத்தேன். விஷயம் முற்றிலும் மாறிவிட்டது. மற்றவர்களுக்குச் சொல்லித்தான் என்ன ஆகவேண்டும்? புண்ணியவதியைப் போல என்னைப் பின்னுலேயே உபசரித்துக்கொண்டு ஆதரவு கூற எனக்குத் தாயார் கிடையாது. உண்மையில் நான் என்னை ஈன்ற அன்னையின் அன்பு முகத்தைக் கூடப் பார்க்காதவள். நான் தாய் ஆகப் போகிறேன் என்று தெரிந்து விட்டால் மட்டும் யார் ஆதரவோடு கவனிப்பார்கள்? 'தாயோடு அறுசுவைபோம்' என்று நீங்கள்தானே சொல்லித் தந்தீர்கள். அத்தகைய அன்புத் தாய் இல்லாத குழந்தையாக வளர்ந்தேன். அந்த அன்பைத்தான் எங்கும் காணுமல் ஏங்கித் தவிக்கிறேன்'' என்று கூறி நிறுத்தியபடி பெருமூச்சு விட்டாள்.

"ஷண்பகா! நீ படித்த படிப்பு இவ்வளவுதானு அம்மா? உலகத்தில் நீ ஒருத்திதான் அனுதையாகப் பிறந்தவளா? இன்னும் எத்தனையோ பேர் இருக்கிருர்கள். அவர்களுக்கெல்லாம் ஆண்டவன் தானம்மா ஆதரவாளர். அதனுல்தான், 'குழந்தையின் பசியை நினைத்துப் பாலை ஊட்டுகின்ற தாயினும் மேலானவன் ஆண்டவன்' என்று சொல்லப்படுகிறது'' எனத் தேறுதலாகக் கூறினுர் பாலாம்பாள்.

வரட்சியான புன்னகை ஷண்பகத்தின் முகத்தில் தோன்றியது. "ஹூம்! உடலும், சதையும், இரத்தமும் கொண்ட உருவில் தாயைக் காணுதவரையில்,

வெறும் கற்பனையில் அவளைக் கண்டு களிக்கச் சொல்கிறீர்களா ? அந்த வேதாந்த மனப்பான்மை பெற நான் இன்னும் பக்குவம் அடையவில்லை. இன்று என் தாய் உயிரோடு இருக்கிருளோ என்னவோ அல்லது செத்துவிட்டாளோ தெரியாது. அவள் அன்றைக்கு என்னை ஆதரவாக வளர்த்திருந்தால் நிச்சயம் இந்தக் கதி எனக்கு வந்திருக்காது '' என்ருள் விரக்தி நிறைந்த குரலில்.

அவள் கடைசியாகக் கூறிய மொழிகளைக் கேட்ட பாலாம்பாள் திடுக்கிட்டு, "என்ன சொல்கிருய் ஷண்பகா ? அப்படியானுல்...நீ அனுதைக் குழந்தையா?'' என்ருள்.

"இல்லை ! நான் என் தாய்க்கு வேண்டப்படாது பிறந்த குழந்தை. சமூகத்தின் அவமானச் சின்னமாகப் பிறந்த என்னை, தன் தாய்மையை மறந்து—பேய் மனம் படைத்தவளாக மாறினுள் என்னைப் பெற்றவள். என்னை வேண்டாத குழந்தையாக இந்தப் பூமியிலே விட்டு விட்டுச் சொல்லாமல் மறைந்த அவளை இன்று எங்கேயாவது காண நேரிட்டால் கட்டாயம் ஒன்று கேட்பேன். 'என்னைப் பெற்றதுதான் பெற்ருய். இந்த உலகத்தில் பச்சிளங் குழந்தையைத் துறந்து ஓடிய நீ, ஏன் அப்போதே என் மென்னியைத் திருகி இருக்கக் கூடாது' என்று? இப்போது தெரிந்து கொள்ளுங்கள். நான் ஏன் உள்ளம் நொந்து பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதை. இந்த வீட்டில் அடிமையாக இருக்கிறேன். என் மனதுக்கு மட்டுமே தெரிந்த இந்த ரகசியத்தை உங்களிடம்தான் சொன்னேன். அது ஏன் தெரியுமா ?'' எனக் கூறிவிட்டுப் பாலாம்பாளை உற்று நோக்கினுள் ஷண்பகம்.

பாலாம்பாள் பதில் பேசாது இருக்கவே, மேலும் தொடர்ந்த ஷண்பகம், "உங்களைக் கண்டது முதல், பழக ஆரம்பித்ததிலிருந்து என் மனதில் ஒரு அமைதி

ஏற்பட்டு வருகிறது. இந்த வீட்டில் எவர் கண்ணிலும் காணாத பரிவும், பாசமும் உங்கள் பார்வையால் எனக்கு ஆதரவூட்டுகின்றன. உங்களிடம் என் மனதிலுள்ள யாவையும் கொட்டித் தீர்க்க வேண்டு மென்று தோன்றும். ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இன்றுதான் என் உள்ளத்தில் தேங்கிக் கிடந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு வெளியே சீறிப் பாய்ந்துவிட்டது. எனினும் என் ஒரு ஆசையை மட்டும் உங்களுக்கு நான் சொல்கிறேன். தயவுசெய்து ஒரே ஒரு முறை உங்களை என் 'அம்மா' என்று கூப்பிட மட்டும் அனுமதி அளியுங்கள். தாயற்ற குழந்தைகளின் தவிப்பை நீங்கள் அறிந்திருக்கலாம். உங்கள் மடியில் என் தலையை வைத்து அன்போடு அம்மா என்று ஆசை தீரக் கூப்பிடு கிறேன்" என்று படபடப்புடன் பேசினாள்.

பாலாம்பாளின் கண்களிலும் கண்ணீர் தேங்க ஆரம்பித்தது. ஒரு குழந்தையின் தாபக் குரலை அறிந்த தாயைப்போல, ஷண்பகத்தின் தலையைத் தன் மடிமீது கிடத்திக் கொண்டாள். வெறி பிடித்தவளாய் பாலாம் பாளின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்ட ஷண்பகம், 'அம்மா' என்று கதறினாள். அடுத்த கணம், படபடப்பினால் மூர்ச்சையாகி விட்டாள்.

★

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

Jacket Printed at Commercial Printing & Publishing House, Madras-1.